கல்கி




KALKI 7.2.1965 30காசு

மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!





இவ்விதம் சோதியுங்கள்

1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

MTP/IIP/2-63-TM

கல்கி


பொருளடக்கம்

குரோதி தை 25 — பிப்ரவரி 7

வேண்டாம் இந்த வீம்பு	—	3
ராஜாஜியின் கருத்துக்கள்	—	6
சாவே பேசுகிறது!	—	9
கந்தன் கருணை	—	10
கலங்காத வீரர்	—	18
ஜீவகீதம்	—	22
பாலோ, பால்!	—	29
திரைப்பட விமரிசனங்கள்	—	34
பிரமிட்டுகள் பிரமிக்கின்றன	—	36
கயல்விழி	—	38
ஊஞ்சல்	—	48
சிரிக்கவும் சிந்திக்கவும்	—	56
வெட்டு ஒன்று துண்டு பல	—	59
காதல் ஒரே தரம்	—	62
நங்கையர் செய்யும் நற்பணிகள்	—	66
படித்துப் பாருங்கள்	—	69
ராஜயோகம்	—	70
கண்ணுக்குத் தெரியாது	-	75

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




நான் மற்றும் ஒருமுறை
ஏமாறத் தயாராயில்லை!
கேரளா


கூட்டுச்சேராக் கொள்கை
பெட்டி போனால் என்ன?
சாவி என்னிடம்தானே
இருக்கு?
தேசியப் பாதுகாப்பு
PK



மலர் 24 ● இதழ் 28

வேண்டாம் இந்த வீம்பு

குடியரசு தினமும், காந்திஜியின் நினைவு நாளும் நிகழ்ந்த வாரம் தமிழகத்தின் சரித்திரத்தில் ஒரு துயர மயமான, துரதிருஷ்டவசமான வாரமாகக் கழிந்தது. நாம் எதிர்பார்த்திராத அளவில் இளம் தலைமுறையினர் எழுச்சி கொண்டதையும், அந்த எழுச்சியின் காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் போலீஸ் அதிகாரத்தின் மூலம் அதை அடக்கப் பார்த்ததையும், பொதுச் சொத்துக்கள் நாசமானதையும், இன்னுயிர்கள் பலியானதையும் கண்டோம். அத்துமீறிய செயல்கள் எந்தத் தரப்பில் நிகழ்ந்திருக்குமாயினும் அதற்காக வருந்துகிறோம். எனினும் உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்கள் தங்கள் வாழ்வையே பாதிக்கும் ஒரு பிரச்னையில் கொதிப்படைவது இயற்கை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க வழி காணாத சர்க்கார், இளைஞர்களை அடக்க அத்துமீறிய போலீஸ் நடவடிக்கைகள் எடுத்ததாகக் கல்லூரி முதல்வர்களின் அறிக்கைகளிலிருந்து அறியும்போது மிகவும் மனக்கிலேசம் அடைகிறோம். இவ்வளவுக்குப் பிற்பாடும் அரசாங்கம் கண் திறந்து விவேகம் பெறுவதைக் காணும்போது இன்னும் என்னென்ன விபரீதங்கள் நேருமோ என்று கலங்குகிறோம்.

ஆட்சிமொழிச் சட்டத்தை அமுல் செய்வதால் தமிழர்கள் எவ்வளவு கொதிப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பிரதமர் லால் பஹாதூர் அவர்களோ, உள்துறை மந்திரி நந்தா அவர்களோ உணர்ந்ததாகவே தெரியவில்லை. மக்கள் எழுச்சியை உணர்ந்திருக்கக் கூடியவர்களான நம் ராஜ்ய மந்திரிகளும், மத்திய மந்திரி சபையிலுள்ள தமிழகப் பிரதிநிதிகளும் கூட உண்மையைத் தில்லி சர்க்காருக்கு உணர்த்தாமலிருப்பது தமிழ்நாடு செய்த மகத்தான துர்ப்பாக்கியம். ஆட்சிமொழிச் சட்டத்தினால் எதிர்காலத்தில் முக்கியமாகக் கஷ்டத்துக்கு ஆளாக வேண்டியவர்கள் இன்றைய மாணவர் சமுதாயம்தான். அவர்கள் அனைவரும் இந்தப் பட்சபாத திட்டத்தைத் தீவிரமாக எதிர்க்கிறார்கள். இந்த உண்மை நிலையை எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்புடைய நம் ராஜ்ய ஆட்சிப் பிரதிநிதிகள், 'இதெல்லாம் ஓர் அரசியல் கட்சியின் சதித் திட்டம்' என்று முரட்டுத்தனமாகப் பேசுகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஹிந்திக்கு எவ்வளவு எதிர்ப்புள்ளது என்பதை அறிந்திருப்பதால்தான் இன்னமும் ஹிந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கத் தமிழக அரசாங்கம் துணியவில்லை. இதைப்பற்றி ராஜாஜி கேர் கமிட்டி முன் பளிச்சென்று எடுத்துக் காட்டினார். கட்டாய பாடமாக்கத் துணியாமல் ஹிந்தி ஆட்சிமொழியாவதை ஆதரித்து, மக்களின் நியாயமான ஆத்திரத்தைத் தில்லி தர்பாருக்கு உணர்த்தாமல் மத்திய சர்க்காரிடம் நல்ல பெயரெடுக்கப் பார்ப்பது அவமானமாகும். தங்களது நலனை ராஜ்ய சர்க்கார் நிச்சயமாகக் காப்பாற்றாது என்று மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

ஆட்சிமொழியை எதிர்த்துப் பகிரங்கமாகத் துக்க தினம் கொண்டாட தி. மு. க. மட்டுமே திட்டமிட்டாலும் தமிழ் மக்கள் அனைவருமே உள்ளூற அதனைத் துக்க தினமாகத்தான் கருதினார்கள். தி. மு. க. தலைவர்

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

களையெல்லாம் கைது செய்வதும், துக்கக் கொடிகளை அகற்றிதேசியக்கொடியைப் பறக்க விடுவதும் சர்க்காரால் இயன்றது. புருஷனை இழந்த மனைவியை ஊர்த் திருவிழாவில் பலவந்தமாக நடமாடச் செய்வதுபோல், தமிழகத்தின் அந்தஸ்து கீழ்நிலைக்கு வந்த தினத்தைக் கோலாகலவைபவமாக ஜோடித்துக் காட்டவும் இயன்றது. அதனை விடுத்துக் கிளர்ந்தெழுந்த மாணவர்களைப் போலீஸ் படை கொண்டு தாற்காலிகமாகக் கட்டுப்படுத்தவும், கல்வி நிலையங்களையெல்லாம் தாற்காலிகமாக மூடி வைக்கவும் சர்க்காரால் முடிந்தது. உண்மை நிலையைத் திரித்துக் கூறவும் முடிந்தது. ஆனால் அந்நிலையை எதிர்த்து எழுகின்ற மனக் கொதிப்பைத் தணிக்கும் முறை இது அல்ல. அந்தக் கொதிப்பிலுள்ள நியாயத்தைத் தாங்களும் புரிந்து கொண்டு, மற்றவருக்கும் புரிய வைத்து, அந்நியமான ஆட்சி மொழிச் சட்டத்தை ரத்துச் செய்ய வழி காண்பதொன்றே பிரச்னைக்குப் பரிகாரம்.

குடியரசு வைபவமும் அலங்காரங்களும் காங்கிரஸ் கட்சி ஆட்சியின் வருஷாப்திகமாகத்தான் நடைபெற்றது. காங்கிரஸ் கொடிகளும் தேசியக் கொடிகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமல் பறந்தன; இன்னும் பறந்து வருகின்றன.

மாணவர்களுக்குப் புத்திமதி கூறுகிற தமிழ் நாட்டுத் தலைவர்கள் அதற்கு முன்னால் மத்திய சர்க்காருக்குப் புத்தி கூறுவதற்குத் தீரமும் சுதந்திரமும் பெற வேண்டும். 'பொருளாதாரப் பிரச்னைகளையும், சீன அபாயத்தையும் சமாளிக்க வேண்டிய தருணத்தில் மொழிச் சண்டை வேண்டாம்' என்று உபதேசிக்கும் பிரதமரவர்கள் அந்த உபதேசத்தைத் தாமே வாங்கிக் கொள்ள வேண்டும். இந்த மொழிச் சண்டைக்குக் காரணகர்த்தர் தமிழ் மாணவர்களும், தி. மு. க.வும் அல்ல, மத்திய சர்க்காரின் மதியற்ற ஆட்சி மொழித் திட்டமே காரணம் என்பதை உணர்ந்து அதனை ரத்து செய்ய வேண்டும். ஆனால் அந்தத் திசையில் ஆட்சியாளர்களின் அறிவு செல்வதாகவே தெரியவில்லை. ஹிந்தியை ஆட்சி பீடத்தில் ஏற்றி ஆங்கிலத்தை அகற்றுவதை விட நாட்டுக்கு முக்கியமான பல பிரச்னைகள் இருப்பதை ஆட்சியாளர்கள் இன்னமும் உணரவில்லை. 'அந்நியச் சரக்காகிய ஆங்கிலத்தை அடித்து விரட்டி விட்டோம்; இந்தியாவில் ஒருசில பகுதிகளில் மட்டும் குவிந்துள்ள மக்களின் மொழியாகிய ஹிந்தியை மற்றவர்கள் மீதும் திணித்துப் புதிய பட்சபாதங்களைச் சிருஷ்டித்து விட்டோம்' என்று ஹிந்தியர்கள் திருப்திப்படுவதை விட, நாட்டின் ஐக்கியத்தைக் காப்பதுதான் முக்கியம் என்பதை அரசாங்கம் இன்னும் உணரவில்லை.

பிரச்னையைச் சிறிதும் புரிந்து கொள்ளாதவர்கள் நம்மை ஆள்கிறார்கள். நாம் யாவரும் எதிர் காலத்தில் இரண்டாம் தரப் பிரஜைகளாகப் போகிறோம் என்று தமிழகம் முழுதும் தீவிரமாகக் கொதித்தெழுந்திருக்கிறது என்பதைப் பிரதமர் புரிந்து கொள்ளாமல், 'எதற்காக இந்தக் கிளர்ச்சி என்றே எனக்கு அர்த்தமாகவில்லை' என்கிறார். மக்களின் மனம் செறிந்த உணர்ச்சிக்குக் காங்கிரஸ் அரசாங்கம் தரும் மதிப்பு இவ்வளவு அற்பமாக இருக்கிறது.

பேச்சு வார்த்தை நடத்தி 'ராஜி' செய்து கொள்ளலாம் என்று பாரதப் பிரதமரும் தமிழக முதன் மந்திரியும் சொல்கிறார்கள். இதில் 'ராஜி' செய்வதற்கு எதுவுமே இல்லை. இதுவரை தேசத்தில் எந்தப் பிரிவினருக்கும் பிரதிகூலமின்றி நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற உதவி வந்த ஆங்கிலமே இருக்க வேண்டும் என்பதுதான் நாடு முழுவதற்கும் நடுக்கண்ட, நியாயமான ஏற்பாடு. 'அகில உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தை எப்படியும் பயின்றாக வேண்டும்' என்று ஒப்புக் கொள்ளும் அதே ஆட்சித் தலைவர்கள் இன்று அகில இந்தியத் தொடர்பு மொழியாக ஆங்கிலம் ஆற்றிவரும் இணையற்ற பணியை உதறித் தள்ளி விட்டு, அதனிடத்தில் ஹிந்தியைப் புதிதாகப் புகுத்த எண்ணுவதை எவ்விதத்திலும் ஏற்பதற்கில்லை.

பொய்ப் பேச்சினால் மக்களை மயக்கிவிடலாம் என்றே இன்னமும் அரசாங்கத்தினர் கருதுகிறார்கள். ஹிந்தியை யார்மீதும் திணிக்கவில்லை; ஹிந்தி பேசாத மக்களின் சம்மதத்துடன்தான் காரியங்கள் செய்வோம் என்று இனிக்க இனிக்கப் பலமுறை சொல்லிக் கொண்டே நேர்மாறான திட்டங்களை அமுல் செய்திருக்கிறார்கள். ஜனவரி 26ந் தேதியிலிருந்து மத்திய சர்க்காருக்கும் ஹிந்தி வழங்கும் ராஜ்யங்களுக்கும் ஹிந்தியிலேயே எல்லாத் தகவல் போக்குவரத்தும் நடக்கும் என்ற ஏற்பாட்டின் மூலம் அந்த ராஜ்யங்களின் அரசாங்க அலுவல்களை இதர ராஜ்யங்கள் அறிய முடியாதபடி செய்து விட்டார்கள். தி. மு. க. கோரும் பிரிவினையை அரசாங்கமே நடைமுறையில் அமுல் செய்யத் தொடங்கி விட்டது. ராஜஸ்தானமும் உத்தரப் பிரதேசமும் மத்தியப் பிரதேசமும் பீஹாரும் அடங்கிய பகுதியே பாரத நாடு — மீதமுள்ள ராஜ்யங்கள் அதன் ஆளுகைக்கு உட்பட்ட அடிமைப் பிரதேசங்கள் என்ற நிலையை உண்டாக்கி விருக்கிறார்கள். யார் மீதும் ஹிந்தியைத் திணிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே சர்க்கார் காரியாலயங்களையெல்லாம் ஹிந்திப் பள்ளிக்கூடங்களாக மாற்றிப் போதனை அளித்து வருகிறார்கள். மத்திய சர்க்காரில் உத்தியோகம் பெறுபவர்கள் எல்லாரும் ஹிந்தி பயில வேண்டும்; தாங்கள் பல்லாண்டுகள் ஆங்கிலத்தில் கற்றதையெல்லாம் மறந்து அவ்வளவையும் மறுபடி அடியிலிருந்து ஹிந்தியில் பயில வேண்டும் என்ற நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். ஹிந்தி மொழிபெயர்ப்பு இலாக்காக்கள் விசுவரூபமெடுத்து, வேலைகளை இரட்டிப்பாக்கி, கால தாமதத்தையும் இரட்டிப்பாக்கி வருகின்றன. மத்ய சர்வீஸ் பரீட்சைகளை ஹிந்தியிலும் நடத்தத் தீர்மானித்து, ஹிந்தியர்களுக்கு மற்ற மக்களை விடச் சலுகையான ஓர் அந்தஸ்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். செய்தி — வானொலி மந்திராலயத்தின் அறிக்கைகளெல்லாம் இனி ஹிந்தியில்தான் வெளியாகப் போகின்றன.

இவ்வளவும் செய்துவிட்டு, திணிப்பு இல்லை என்கிறார்கள். இதுவும் போதாதென்று பிரதமர் லால்பகதூர் அவர்களோ, 'ஹிந்தி மாற்றத்தை இன்னும் விரைவுபடுத்த வேண்டும்' என்றும் குடியரசு தினத்தன்று சந்தேகத்துக்கிடமின்றிக் கூறியிருக்கிறார்.

'வாக்குறுதி'களை மதித்து ஏமாறும் காலம் மலையேறிவிட்டது. பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த ஜவாஹர்லால்ஜியின் வாக்குறுதியே காற்றில் பறக்க விடப்பட்ட பின், அவரைப் போல அந்தரங்க சுத்தமின்றி உள்ளூற ஹிந்திப் பித்தர்களான தற்கால மத்திய மந்திரிகள் கூறும் 'அபய' வார்த்தைகளைத் தமிழ்நாடு ஒருபோதும் நம்பாது. கட்சிக் கட்டுப்பாட்டுக்கு பயந்து டில்லிக்கு 'ஆமாம் பூசாரி' போடும் ராஜ்ய மந்திரிகளையும் இனி மக்கள் நம்ப மாட்டார்கள். போலிப் பேச்சுக்கள் மூலமோ போலீஸ் நடவடிக்கை மூலமோ தமிழகத்தின் எழுச்சியை அடக்கி விட முடியாது. ஹிந்திக்கு அரியாசனம் தரும் ஆட்சி மொழிச் சட்டத்தைக் கால வரம்பின்றி நிறுத்தி வைப்பதோ அல்லது ரத்து செய்து விடுவதோதான் பிரச்னைக்குத் தீர்வாகும். நாட்டு நலன்களுக்கு விரோதமாக அரசியல் சாஸனத்தைப் பதினேழு முறை மாற்றியவர்கள் நாட்டு நலனை உத்தேசித்தே அதன் பதினேழாவது பிரிவாகிய ஆட்சி மொழி ஷரத்தை மாற்றிப் பாரத நாட்டின் ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டும். இன்னமும் பழைய வீம்புக் கொள்கையையே பிடித்துக் கொண்டிருப்பது விபரீதமாகும். மக்களின் இளம் தலைமுறையினரிடையே சீற்றம் என்ற விதையை விதைப்பது தேசத்துக்கோ, அரசாங்கத்துக்கோ, ஆள்கிற கட்சிக்கோ சற்றும் நன்மையல்ல.

சரித்திர நாயகர் சர்ச்சில்

இந்திய சுதந்திர இயக்கத்தைத் திருணமாகக் கருதிய ஒருவர்; 'மன்னரின் சாம்ராஜ்யத்தைச் சிதைப்பதற்காக நான் பிரிட்டிஷ் பிரதமராக இல்லை' என்று கூறியவர்; காந்தி அடிகளை 'அரை நிர்வாண பக்கிரி' என்று அழைத்தவர்; இப்படிப்பட்டவரின் தேக ஆரோக்கியம் குறித்து நம் நாட்டவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனரெனில் அவர் ஓர் அசாதாரணமான மனிதராகத்தானே இருந்திருக்க வேண்டும்?

சர்ச்சில் அசாதாரணமான மனிதர்தான். மூர்க்காவேசமாக முன்னேறி வந்த ஹிட்லரின் முன்னால் இங்கிலாந்து அடிபணியாமல் அதனைக் காத்துத் தந்த அசாதாரணப் பணியைப் புரிந்தவர் சர்ச்சில். வெற்றிக்கு அடையாளமாக அவர் காட்டிய 'வி' என்ற விரல் முத்திரை கோடானுகோடி உள்ளங்களில் ஆழப் பதிந்தது. நாட்டுப்பற்று மிகுந்த ஆங்கிலேயர்கள் அவரது அறைகூவலுக்கு ஆத்மார்த்தமாகச் செவிசாய்த்துச் சரித்திரத்தையே மாற்றினார்கள்.

இங்கிலாந்தின் சரித்திரத்தை மட்டுமின்றி உலக சரித்திரத்தையே மாற்றக் காரணமாயிருந்தவர்களில் ஒருவர் சர்ச்சில். ஹிட்லர் வென்றிருந்தால் உலகில் தருமம், சத்தியம், ஜனநாயகம் எல்லாமே செத்து மடிந்திருக்கும். அந்த ஆபத்தை முன்கூட்டியே உணர்ந்த சர்ச்சில் மற்ற எல்லா ஆபத்துகளும் இரண்டாம் பட்சமே என்று கருதினார். பிரிட்டனின் ராணுவ சுதந்திரம் பற்றி வீண் ஜம்பம் பேசாமல், 'சைத்தானுடன் கூட்டுச் சேர்ந்தாயினும் எதிரியை முறியடிப்பேன்' என்றார். அவ்வாறே, தாம் சற்றும் ஆதரித்திராத கம்யூனிஸ ருஷியாவுடன் கூட்டுச் சேர்ந்தார். அமெரிக்காவும் பிரிட்டனும் ருஷியாவும் ஒன்று சேர்ந்து அச்சு நாடுகளின் கூட்டை வென்றன.

ராணுவ வீரராகவும், சட்டசபையாளராகவும் அருந்தொண்டு புரிந்த சர்ச்சில் இலக்கிய கர்த்தராக நோபல் பரிசு பெற்றார்; சித்திர நிபுணராக அரசாங்கத்தின் உயரிய கௌரவத்தைப் பெற்றார். சர்ச்சிலை உலகம் என்றும் மறக்காது.

மணியான மணி விழா

மணி மணியான கதைகள் எழுதித் தமிழ் இலக்கிய மண்ணுக்கு மணம் கூட்டியவர். மணிக்கொடி எழுத்தாளர் என்று புகழ் பெற்றவர். 1933ம் ஆண்டில் 'மலரும் மணமும்' என்னும் சிறு கதைக்காகப் பரிசு பெற்று இலக்கியப் பூங்காவில் மலர்ந்தவர்; மலர்ந்து மணம் வீசியவர். சிறந்த சிறு கதைகள் மட்டும் என்ன, நல்ல நாவல்களும் பல மேடை நாடகங்களும் எழுதியவர். சினிமாத் துறையிலும் புகுந்து ஓர் இடம் பற்றிக் கொண்டவர். இப்படி இன்றைய இலக்கிய உலகத்துக்குப் பெருமை சேர்க்கும் ஸ்ரீ பி. எஸ். ராமையா இவ்வாண்டு மார்ச்சு மாதம் 24ந் தேதி அறுபதாண்டு நிறைந்து அறுபத்தோராவது ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார். ஏராளமான ரசிக மக்களையும் நண்பர்களையும் கொண்ட அவரது மணி விழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாடச் சென்னையில் ஒரு குழு நிறுவப்பட்டுள்ளது. மார்ச் மாதம் நடைபெறப் போகும் அந்தக் கொண்டாட்டத்திலே அவருக்கு ஒரு 'மணி முடிப்பு'ம் தரவேண்டும் என்று அக்குழு தீர்மானித்துள்ளது. அந்த நிதிக்கு உதவி, அவரது மணி விழாவை வெற்றிகரமாக்க விரும்பும் தமிழ் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். பொருளாளர், பி. எஸ். ராமையா மணி விழாக் குழு, 20, தாண்டவராயன் தெரு, ராயப்பேட்டை, சென்னை 14 என்ற முகவரிக்குத் தங்களது அன்பளிப்பை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



ராஜாஜியின் கருத்துக்கள்

திரு காமராஜ் அவர்கள் ஹிந்தி விஷயமாக என்னைப் பற்றிப் பொதுக் கூட்டங்களில் பேசி வரும் சில விஷயங்கள் எனக்கு விளங்கவேயில்லை. 1950ம் ஆண்டில் நான்தான் ஹிந்தியை ஆட்சி மொழியாக்கினேன் என்கிறார்! 1949ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாஸனத்தில் ஹிந்தியை ஆட்சி மொழியாக்கும் பிரிவு இருப்பதாலும், அப்போது நான் கவர்னர் ஜெனரலாயிருந்தபடியாலும் நான்தான் ஹிந்தியை ஆட்சி மொழியாக்கியதாகத் திரு காமராஜ் அவர்கள் எண்ணுகிறார் போலும்! அரசியல் சாஸனம் நிறைவேறியவுடன் நான் கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு விலக, ராஜேன்பாபு அவர்கள் முதல் ராஷ்டிரபதி பதவி ஏற்றார். கவர்னர் ஜெனரலாக இருந்தபோது நான் சாஸன அமைப்புச் சபையில் இடம் பெறவோ, அங்கு நடைபெற்ற விவாதங்களில் பங்கு கொள்ளவோ உரிமை பெற்றிருக்கவில்லை. கவர்னர் ஜெனரலுக்கு அந்த வாய்ப்புக் கிடையாது. சாஸனத்துக்கு கவர்னர் ஜெனரல் அங்கீகாரம் தேவையில்லை. எனவே அரசியல் சாஸன ஷரத்துக்கள் நான் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் உருவாக்கப் பட்டன என்பதால், நான் ஹிந்தியை அங்கீகரித்தேன் என்று திரு காமராஜ் அவர்கள் எண்ணுவது முற்றிலும் தவறு.

ஆட்சி மொழி விதிகள் சாஸன அமைப்புச் சபையில் விவாதிக்கப்பட்டபோது பிரதமர் நேரு அவர்கள், தாம் ஹிந்தி வெறியர்களை எதிர்த்து எப்படிப் போராட வேண்டியிருக்கிறது என்பதை அவ்வப்போது எனக்குத் தெரிவித்து வந்தார். அவரால் எவ்வளவு தீவிரமாகப் போராட முடியுமோ அவ்வளவும் செய்தார் என்பதை நான் அறிவேன். என்றாலும் இவ்விஷயத்தில் நான் ஏதும் செய்யக் கூடியது இருக்கவில்லை. இலக்கங்களையேனும் ஹிந்தி வரி வடிவத்தில் கொண்டு வந்து விடாமல் சர்வ தேசத்திலும் வழங்கி வரும் முறையிலேயே நீடிப்பதற்காவது முயலுமாறு அவரிடம் யோசனை சொன்னது தவிர நான் வேறு எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு அவகாசம் இல்லை.

நான் முதலில் மேற்கு வங்காள கவர்னராகவும், பிறகு கவர்னர் ஜெனரலாகவும் இருந்த சமயத்தில் நான் அரசியல் சாஸன வாதங்களில் கலந்து கொள்ள இடமே இல்லை.

திரு காமராஜ் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்: நான் தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பால் ஹிந்தியை எதிர்த்துப் பேச மாட்டேன் என்கிறார்! அவர் சொல்லுவது முற்றிலும் தவறு. அறியாமையின் மீதே அவர் அப்படிப் பேசுகிறார் என்று எண்ணுகிறேன். இப்போது வட இந்தியாவில் என்னுடைய மற்ற பணிகளை விட நான் ஒரு பகிரங்கமான ஹிந்தி எதிர்ப்பாளன் என்பதைத்தான் பலர் முக்கியமாக நினைக்கிறார்கள். ஆள்கிற கட்சிக்கு நல்ல முறையில் எதிர்ப்புத் தெரிவிப்பதாக என்னை மதிக்கும் பலரும் அவர்களுடைய அருமை மொழியை நான் வெளிப்படையாக எதிர்ப்பதைப் பெரிதாகக் கருதுகிறார்கள். அவர்களில் சிலர் இன்று ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்றால் அதற்கு நான் வெளிப்படையாக ஹிந்தியை எதிர்த்து எழுதியும் பேசியும் வருவதே காரணம் என்று சொல்லலாம்.

இவையெல்லாம் எப்படியானாலும் நான் ஹிந்தி விஷயமாக எப்போது என்ன கருத்துக் கொண்டிருந்தேன் என்பது பிரச்னைக்கு வழியாகாது. நான் முரண்பாடாக நடக்கிறேன் என்றே திரு காமராஜ் அவர்கள் நினைத்தாலும் அதைக் காரணம் காட்டி ஹிந்தித் திணிப்பு நியாயமானது என்று நிரூபிக்க முடியாது. ஆங்கிலத்தை நீக்கி அதனிடத்தில் ஹிந்தியைப் புகுத்துவதற்கு என்னுடைய முரண்பாட்டைத் தவிர அவர் வேறு சமாதானங்கள் தேட வேண்டும்.

* * *

கொடுங்கோலாட்சி ஏற்பட்டால் அதற்கு எதிராக ஒன்று புரட்சி நடைபெறும்; இல்லாவிடில் கொடுங்கோல் சட்டங்களை மீறி மக்கள் குற்றம் செய்ய வேண்டியிருக்கும். சர்க்கார் சர்வாதீன சோஷலிஸத்தின் கீழ் வரிக் கொடுங்கோன்மை ஏற்பட்டுள்ள நம் நாட்டில் புரட்சி ஏற்பட வாய்ப்பில்லை. எனவே வரி கொடுப்பவர்கள் சட்டங்களை ஏமாற்றுவதில் கவனம் செலுத்துகிறார்கள். வரி கொடுக்காமல் ஏமாற்றிப் பணம் பதுக்க இயலும் வரைதான் முதலீடு செய்பவர்களுக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் ஓரளவேனும் ஊக்கம் இருக்கும். இந்தக் குற்றத்தைச் சர்க்கார் பூரணமாகத் தடுத்துவிட்டால், அதன் பின் லாபத்தையெல்லாம் சர்க்காருக்கு வரியாகச் செலுத்த வேண்டுமென்பதால் முதலீடு செய்பவர்கள் உற்பத்தியில் ஈடுபாடு காட்ட மாட்டார்கள். குற்றத்தைத் தடுப்பதால் தொழில் அபிவிருத்தியையே தடுக்கிற விசித்திர நிலை இந்நாட்டில் ஏற்படும், மானுட இயல்புகளை அறியாமல் ஆட்சி செய்பவர்களின் கொள்கையின் விளைவாக. அப்போதுதான் வரிக் கொடுங்கோன்மையின் விபரீத விளைவு வெளியாகும்.

* * *

நான் ஹிந்தியின் விரோதியல்ல. 'தென்னிந்தியாவின் ஹிந்தி இயக்கத்துக்குப் பிதா'

என்று என்னைப் பற்றி ஒரு பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது ஓரளவு உண்மையே. அதனாலேயே இன்று நான் ஹிந்தி வேண்டாம் என்று சொல்வதிலுள்ள உண்மையை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தென்னாட்டு மக்களை ஹிந்தியர்கள் போர்க்களத்தில் யுத்தம் செய்து வென்று விட்டதாகக் காட்டிக் கொள்வது விசித்திரம். இந்த இராணுவக் கோலம் இந்தியாவை ஓர் ஐக்கிய நாடாக உருவாக்குவதற்கு வழியல்ல. ஆட்சி மொழிச் சட்டத்தைத் தள்ளி வைத்து விட்டு, நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாப்பையும் கவனிக்கும்படி ஹிந்திப் பிரியர்களுக்கு நான் சொல்லும் யோசனை நட்பிலும் நல்லெண்ணத்திலுமே பிறந்த யோசனையாகும்.

வின்ஸ்டன் சர்ச்சில் மறைந்து விட்டார். புத்துயிரும் பொலிவும் பெற்றுள்ள ஐரோப்பாக் கண்டமே அவருக்கு நினைவுச் சின்னமாகும். இந்தச் சகாப்தத்தின் மிகப் பெரும் குற்றவாளியாகிய ஹிட்லரைத் தீவிரமாக எதிர்த்துப் போர் செய்து வெற்றி காணுமாறு தமது நாட்டை ஊக்கி வழிகாட்டிய சர்ச்சிலைக் குறித்து பிரிட்டன் என்றென்றும் பெருமிதம் அடையும். பெரிய ஆபத்து காலத்தில் பிரிட்டிஷ் மக்களின் தைரியத்துக்கு ஒரு மூர்த்தியாக விளங்கினார். இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதைச் சர்ச்சில் எதிர்த்தது உண்மை; எனினும் சுதந்திர இந்தியாவானது காமன்வெல்த்தில் அங்கம் வகிக்க இசைந்த போது அவர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

இரண்டு திருப்பணிகள்

கோயம்பேடு திருக்கோயில்

பரபரப்புமிக்க சென்னை மாநகரத்துக்கு வெகு அருகிலேயே பரம சாந்தமான ஒரு புராதன ஸ்தலமாக விளங்குகிறது கோயம்பேடு. அடியார்கள் வந்து வணங்கப் பரம சௌகரியமாகப் பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு அருகிலேயே அமைந்தகரையிலிருந்து இரண்டு மைல் மேற்கே அமைந்துள்ள கோயம்பேட்டில் குசலவபுரீச்வரரான சிவபெருமான், வைகுண்டவாஸப் பெருமாளாகிய திருமால் இருவருக்குமே திவ்வியமான ஆலயங்கள் உள்ளன. புராணச் சிறப்பும், சரித்திரச் சிறப்பும், சிற்பச் சிறப்பும் கொண்ட இவ்வாலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்கு ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அநுக்கிரகத்தில் அன்பர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

திருப்பணியின் முதல் கட்டமாக பிப்ரவரி 8ந் தேதியன்று குசலவபுரீச்வரர் ஆலயத்தில் நூதன நவக்ரஹப் பிரதிஷ்டை, திருவலம் சிவானந்த மௌன ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது. சென்னைவாசிகள் இந்தக் கைங்கரியத்தில் அவசியம் பங்கு பற்ற வேணும். திருப்பணிக்குப் பொருள் அனுப்ப வேண்டிய முகவரி : காரியதரிசி, திருப்பணிக் கமிட்டி, குசலவபுரீச்வரர் - வைகுண்டவாஸப் பெருமாள் தேவஸ்தானம், கோயம்பேடு, சென்னை 49.

ஸ்ரீவரதன் கைங்கரியம்

தஞ்சை மாவட்டம் கணபதி அக்கிரகாரத்திலுள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்ய 20,000 ரூபாயில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ காமகோடி ஆசாரிய ஸ்வாமிகளின் ஆசியுடன் இந்தத் திருப்பணி தொடங்கப்பட்டுள்ளது. 'மதுரையம்பதியில் அன்னை மீனாக்ஷிக்கு மகோன்னதமான முறையில் திருப்பணி செய்து 'ஆலி' வந்த கைபடைத்த திரு பி. டி. ராஜன் அவர்கள் இந்தப் பணிக்கு ஆதரவு தந்திருப்பது திருப்பணி சிறப்பாக நடைபெற ஒரு நல்ல அடையாளம். ஆஸ்திகர்கள் கைங்கரியம் செய்ய வேணும். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி அய்யர், பொருளாளர், ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் திருப்பணிக் கமிட்டி, கணபதி அக்கிரகாரம், அய்யம்பேட்டை வழி, தஞ்சை மாவட்டம்.



தன்னிகரில்லாச் சிறப்பு! கண்ணைப் பறிக்கும் வெளுப்பு! துப்புரவான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை, கரைகடந்த நுரைவளம். சலவையே வெகு எளிது. ஆம், சிறுவர் உடை முதல், சட்டை, சேலைவரை எல்லாத் துணிகளையும் கைப்பட வீட்டிலேயே சலவை செய்துகொள்ளச் சாலச் சிறந்தது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

SU. 45-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



சாலை பேசுகிறது!

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையின் குரலில் துயரம் முட்டி மோதி நின்றது:

"முன் காலத்தில் சாலை ஓரம் மரம் நடுவது வளர்ப்பது பெரும் புண்ணியமாகக் கருதி வந்தார்கள்....ஆனால் இன்று என்ன நடக்கிறது? காலம் எல்லாவற்றிலும் மாறிப் போனது போல இதிலேயும் மாறிப்போச்சு. இந்தக் காலத்திலே சாலை ஓரம் இருக்கிற மரம் வெட்டுவது தர்ம கைங்கரியமாகப் போச்சு! போன வாரம் கூடச் சாலைப் போக்குவரத்து வாரம் கொண்டாடினீர்களே. கார்கள் வசதியாகப் போக என் நண்பர்களைப் பலி வாங்கி விடவேண்டியதுதான் என்று தானே தீர்மானித்துக் கொண்டார்கள்.....!"

"வாஸ்தவம்.... ஆனாலும் சாலையை விரிவுபடுத்த வேண்டியதுதானே! இல்லையானால் எத்தனை ஆக்ஸிடென்ட் நடக்கிறது?" என்றான் பாதசாரி.

"ஆனால் என் சகோதரர்களாகிய மரங்கள் எத்தனை பேரை வாழ வைத்தார்கள். அதை நினைத்துப் பார்த்தாயா?"


"என்ன! வாழ வைத்து வந்தார்களா? எனக்குப் புரியவில்லையே!"

"என் நண்பர்களின் நிழலில் எத்தனை பட்சி ஜோசியக்காரர்கள், கைரேகை ஜோசியக்காரர்கள் உட்கார்ந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பார்கள். செருப்பு தைக்கும் தொழிலாளிகள் தம் பட்டறைகளைப் பரப்பி வேலை செய்வார்கள். வீடு வாசலற்ற ரிக்ஷா வண்டி இழுப்பவர்கள், வெயிலில் களைத்து வந்தால் என்னிடம் வந்து, மர நிழலின் அருமையை அனுபவிப்பார்கள்! ஆமாம், சென்னையில் எந்தச் சாலையிலாகிலும் கோடை நாட்களில் பாதசாரி வெயில் தாங்காமல் 'ஸன்ஸ்ட்ரோக்' வந்து சுருண்டு விழுந்தான் என்று செய்தி வந்தாலும் வரும். பூந்தமல்லி சாலையில் விழுந்தான் என்ற செய்தி படித்ததுண்டா? இப்படிப் பரோபகாரம் செய்தவர்கள் யார்?—என் சகோதரர்கள்!

"இதெல்லாம்போகட்டும், சென்னைவாசிகள் அவ்வப்போது மழை பெய்த சுகத்தையும் தண்ணீர்த் தட்டுப்பாடற்ற நிலையும் அனுபவித்து வந்தார்கள் என்றும் அதில் முக்கிய பங்கு என் தோழர்களுக்கு உண்டு. வான வீதியில் செல்லும் வருண பகவானைக் கரம் நீட்டி வரவேற்று, சென்னை வாசிகளுக்கு அருள் புரியச் செய்தோம். உதவியவர்களுக்கு நல்ல கைம்மாறு சென்னை அரசாங்கம் செய்து விட்டது" என்று ஆற்றாமையோடு நெடுஞ்சாலை பேசியது.

"அதனால் என்ன? அரசாங்கம் லட்சக் கணக்கில் ரூபாய் செலவழித்து வனமகோற்சவம் கொண்டாடிவிடும்!" என்றான் பாதசாரி.







திருமுருக கிருபானந்தவாரியார்

14. மாயம் தீர்க்கவந்த மயிலோன்

விடையவன்பால் தேவர்கள் விடை பெற்றபின் திருமால், வாயுதேவனைப் பார்த்து "நீ ஆறுமுகக் கடவுளுக்குத் தேர்ப்பாகனாக இருந்து தேரைச் செலுத்தக் கடவாய்" என்று கட்டளையிட்டார். அதன்படி, வாயுதேவன் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த தேர் மேல் பாய்ந்து தன் இனமாகிய நாற்பத்தொன்பது வாயுக்கள் பக்கத்தே சூழ்ந்து வர மகிழ்ச்சியோடு தேரைச் செலுத்திக் கொண்டு குமரக் கடவுள் திருமுன்னே வந்தான். கந்தக் கடவுளைக் கைதொழுத வாயுதேவன், "எம் பெருமானே! இத்தேர் மீது ஏறியருளுக" என்று வேண்டிக் கொண்டான். முருகக் கடவுள் அத்தேர் மீது ஏறியருளினார்.

சிவபெருமானுடைய சாரதி பிரமன்; விஷ்ணுவுடைய சாரதி தாருகன் ; இந்திரனுடைய சாரதி மாதலி ; தனஞ்சயனுடைய சாரதி தாமோதரன்; முருகவேளுடைய சாரதி வாயுதேவன்.

முருகவேள் போருக்கு ஆரோகணித்ததைக் கண்ட இந்திரன் முதலிய இமையவர்கள் "இனிச் சூரன் இறந்தான்" என்று அப்போதே நிச்சயம் பெற்றுத் துள்ளி ஆர்த்தனர். இலக்கத்தொன்பது வீரர்களும் முருகக் கடவுளைச் சூழ்ந்தார்கள். இமையவர்களும் இருடிகளும் அவ்வீரர்களைச் சூழ்ந்தார்கள். திருக்கயிலாயத்தில் இருந்த அனந்தவெள்ளம் பூதங்களுள் இரண்டாயிரம் வெள்ளம் கணங்கள் நாற்றெட்டு சேனாபதிகளோடு முருகக் கடவுளிடம் வந்து வணங்கித் துதித்து ஆரவாரித்தன. பூதர்களில் சிலர் பலவித வாத்தியங்களை முழக்கினார்கள். படைக்கலங்கள் பல தாங்கிய படைகள் சூழ முருகக் கடவுள் திருக்கயிலாய மலையை நீங்கிப் பூமியின் மேல் சென்றருளினார். அப்போது எழுந்த புழுதியால் விண்ணுலகும் மண்ணுலகும் மறைந்தன.

செவ்வேட் பரமன் சேனையுடன் செல்லும் பொழுது கிரௌஞ்சமலை வழியில் வந்தது. அதனைக் கண்ட தேவர்கள் நடுநடுங்கினார்கள்; இந்திரனும் கலங்கினான்.

நாரதர் வந்து கந்தக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! இதுதான் கிரௌஞ்ச மலை. அந்தணர் அருந்தவர்

முதலியோர் இவ்வழியில் செல்லும் போது, இது வழிகாட்டிபோல் பாவனை செய்து தவருன வழி காட்டி மாயை செய்து அவர்களைக் கொல்லுவது வழக்கம். அகத்திய முனிவர் கொடுத்த சாபத்தால் இது இவ்வடிவில் நிற்கிறது.

''இந்தக் கிரௌஞ்ச மலையைச் சார்ந்துள்ள மாயாபுரியிலே சூரனுடைய இரு தம்பிகளில் ஒருவனுன தாரகாசுரன் வாழ்கிறுன். அவன் யானை முகத்தை உடையவன். போரிலே விஷ்ணுவை வென்று அவருடைய சக்கராயுதத்தை மார்பில் பதக்கமாக அணிந்தவன். இவனைக் கொன்ருல் இவனுடைய தமையனுகிய சூரனைக் கொல்வது எளிது'' என்று விண்ணப்பம் செய்தார்.

முருகவேள், ''அவ்வாறே செய்வோம்'' என்று திருவாய்மலர்ந்தருளினுர். இந்திரன் முதலிய தேவர்கள், ''தாரகன் இன்றே இறந்தான்'' என்று மனக் கவலை நீங்கி மகிழ்ந்தார்கள்.

வீரவாகுதேவர் வேலவனை வணங்கி, ''அண்ணலே! தாரகன் சூரனுக்குத் தம்பி. ஆதலால் பகைவன் தம்பி மேல் தங்கள் தம்பியாகிய என்னை ஏவுங்கள் நம்பி! அவனை அழித்து வருவேன்'' என்ருர்.

முருகவேள், அவ்வாறே வீரவாகுவைப் பணித்தருளினுர்.

''நீங்கள் வீரவாகுவுடன் செல்லுங்கள்'' என்று வீரர்களையும் பூதர்களையும் பணித்தார் ஐயன். தேவதச்சனைக் கொண்டு ஒரு கணப்பொழுதில் குதிரைகள், பூதங்கள், சிங்கங்கள் பூட்டிய பல தேர்களைச் செய்து வீரவாகு தேவருக்கும் மற்ற வீரர்களுக்கும் கொடுத்தருளினுர். வீரர் யாவரும் முருகப் பெருமானை மும்முறை வலம் வந்து வணங்கித் துதித்து விடைபெற்றுத் தேரில் புறப்பட்டார்கள். நானுவித வாத்தியங்கள் முழங்க ஆயிரம் வெள்ளம் பூதங்களோடும், பூத சேனுதிபதிகளோடும், இலக்கத்தெட்டு வீரர்களுக்கும் தலைவராக வீரவாகு தேவர் சென்ருர். பிறிதோர் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகள் சூழவும், இந்திரன் முதலியோர் வணங்கவும் பின்னணியாகச் செல்லும் படை வகுப்பில் முருகக் கடவுள் சென்ருர்.

வீரவாகு தேவர் மாயமாபுரியை அடைந்தார். பூதர்கள் நகரினுள் புகுந்து எதிர்ப்பட்ட அசுரர்களோடு போர் புரிந்து நின்ருர்கள். அசுர தூதர்கள் ஓடிச் சென்று தாரகாசுரனை அடைந்து ''அரசே! 'சூரபன்மன் சிறையிட்ட தேவர்களை மீட்கும் பொருட்டு சிவபெருமான் ஒரு குமாரரைப் பெற்ருர்; அக்குமாரசுவாமி அசுரர்களைக் கொன்று விடுவார்' என்று ஆகாயத்திலே செல்லும் தேவர்கள் கூறக் கேட்டோம். அதனை நாங்கள் பொருட்படுத்தாதிருந்தோம்; இப்பொழுது அவர்கள் கூறியவாறே இரண்டாயிரம் வெள்ளம் பூதர்கள் சூழக் கந்தசுவாமி வந்திருக்கிருர்; அப்படையின் தூசியே நமது நகரத்தை அழிக்கிறது'' என்று கூறினுர்கள்.

தூதர்கள் கூறியதைக் கேட்ட தாரகாசுரன் வடவைத் தீயைப்போல் கொதித்து அண்டங்கள் நடுங்க எழுந்தான். ''உலர்ந்த புற்காட்டில் இட்ட தீயைப் போல, இந்த நகரத்தை வளைத்துள்ள சேனையை விரைந்து சென்று அழிப்பேன். தூதர்களே! நமது படைகளைத் திரட்டுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

அசுரர் படை விரைந்து வந்தது. ''நமது தேரைக் கொண்டு வாருங்கள்'' என்று தாரகாசுரன் பரிசனரிடம் ஆணை



யிட்டான். தேர் வந்தது. அத்தேரில் தாரகாசுரன் ஏறிக் கொண்டான். சகல இராஜ விருதுகளுடனும் யானை, குதிரை முதலியன சூழத் தாரகாசுரன் பவனி சென்றான். பல சிங்கங்களால் இழுக்கப் பட்ட தேரில் மகாமேரு மலையைப் போன்ற வயிர தண்டமும், பல படைக் கலங்களும் சென்றன. ஏழு கப்பல்களைப் போல் அசுரர் சேனைகள் சூழ்ந்தன.

அசுரர் அணிவகுப்பைக் கண்ட பூதர்கள் ஆரவாரித்துக் குமரக் கடவுளின் திருவடித் தாமரையைச் சிந்தித் துக் குன்றுகளையும், மரங்களையும், சூலங்களையும், தண்டங்களையும் பகைவர்கள் மீது வீசினார்கள். அசுரர்கள் பூதர்கள் மீது அம்புகளையும், வேல்களையும், சக்கரங்களையும் வீசினார்கள். இரு திறப்படைகளுக்கும் போர் மூண்டது. போரிலே உதிர நதி பெருக்கெடுத்து ஓடியது. சிரங்களும், கரங்களும், தோள்களும் துண்டுபட்டுத் துள்ளின. அசுரர்களில் பலரும் பூதர்களில் சிலரும் இறந்துபட்டனர்.

பூதர்களால் தன் சேனை அழிவதைக் கண்ட தாரகன் பெரும் கோபம் கொண்டான். தேரினின்றும் பூமியில் குதித்துத் தன் கையிலிருந்த பெரும் தண்டத்தால் அடித்துப் பூதர்கள் பலரைக் கொன்றான்; அண்டங்கள் அதிரும்படி ஆர்த்தான்.



தாரகனும் பூதர்கள் அழிந்ததைக் கண்ட பூத சேனாதிபதிகள் தாரகனை எதிர்க்கும் வன்மையின்றி மனம் தளர்ந்து ஓடினார்கள். அது கண்ட இலக்கம் வீரர்கள் மிகுந்த கோபத்துடன் வில் வளைத்துக் கணைகளைத் தொடுத்துத் தாரகனை வளைத்துக் கொண்டார்கள். இலக்கம் வீரர்கள் விடுத்த கணைகள் தாரகனுக்கு எவ்விதத் தீமையும் புரியவில்லை. இதனைக் கண்ட இலக்கம் வீரர்கள் வெருண்டு தெய்வப் படைக்கலங்களைத் தாரகன் மீது வீசினார்கள். அவையும் தாரகனுக்குத் தீங்கு விளைவிக்காமல் துகளாயின. தேவர்கள் செய்வதறியாது கலங்கி நின்றனர்.

தாரகன் தன் வயிர தண்டத்தைச் சுழற்றினான்; யானை முகம் படைத்த அவன் தன்னைச் சூழ்ந்த இலக்கம் வீரர்களின் தேர்ப் படைகளை யெல்லாம் அடித்துத் தனது துதிக்கையினை நீட்டி வீரர்களைப் பற்றி எடுத்துக் கடலில் வீசினான். கடலில் வீழ்ந்த வீரர்கள் வில்லுடன் எழுந்து ஒதுங்கிச் சென்றார்கள்.

இக்காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வீரகேசரிக்குக் கோபம் பொங்கியது. குமாரக் கடவுளின் திருவடிகளை மனத்தில் நினைத்து நூறு கணைகளைத் தாரகன் மீது விடுத்தார். அக்கணைகள் தாரகனுடைய மகுடத்தைத் தள்ளின. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தன்னுடைய மகுடம் வீழ்ந்ததைக் கண்ட தாரகன் நாணமும் சினமும் கொண்டான். கைதண்டத்தை வீரகேசரி மீது எறிந்தான். தேர் மீது ஏறி வேறு ஒரு மகுடத்தை அணிந்து கொண்டான். தாரகன் எறிந்த தண்டம் மார்பிலே பட்டதும் வீரகேசரி மயங்கி விழுந்தார். அதனைக் கண்ட வீரவாகு தேவர் தாரகன் மீது பல் வகைக் கணைகளைப் பொழிந்து, அவன் உடலைப் புண்படுத்தினார்.

தாரகனுக்கும், வீரவாகு தேவருக்கும் போர் மூண்டது; கணை மழை பொழிந்தது. வீரவாகு தேவர் பதினொரு பாணங்களை விடுத்துத் தாரகனுடைய வில்லை ஒடித்தார். தாரகன் சினத்துடன், ''இனி நீ இறந்தாய்'' என்று கூறி ஒரு சூலத்தை விடுத்தான். அந்தச் சூலம் மார்பில் பட்டதும் வீரவாகு தேவர் மயங்கினார். தாரகன் இடிபோல் ஆர்த்தான். எஞ்சி நின்ற வீரவாகுதேவரின் தம்பியர் எழுவரும் தாரகனை எதிர்த்துப் போர் செய்து தோற்றார்கள். இதற்குள் வீரவாகு தேவர் மயக்கம் தீர்ந்து எழுந்தார். தாரகனுடன் மீண்டும் போர் புரிந்தார். போர் கடுமையாயிற்று. வீரவாகுதேவர் வில்லை வளைத்து நாண் ஒலி செய்தார். மலைகள் சுழன்றன; அசுரர்கள் காதுகளைப் பொத்திக் கொண்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். தாரகனை நோக்கிய வீரவாகு தேவர், ''வீரர்களையும் பூதர்களையும் வென்று விட்டோம் என்று எண்ணாதே ; உன்னை நான் விரைந்து கொல்வேன்'' என்றார்.

அதற்கு விடையாகத் தாரகன், ''திருமால் விடுத்த சக்ராயுதத்தை என் மார்பில் பதக்கமாக அணிந்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னைக் கொல்லுவேன் என்று நீ சொன்னது சிங்கத்தை நரி வெல்லுவதாக வீரம் பேசுவதே போன்றது! உன் வீரர்கள் அழிந்தார்கள்; வீரம் பேசும் நீயும் சிறிது நேரத்தில் அழியப் போகிறாய்'' என்று கூறினான்.

அலுவலகத்தில் சுறுசுறுப்பு அன்றாடம் அவசியம்...

வெள்ளை உடைகளுக்கு டினோபால் தருவது

துல்லிய வெண்மை துலங்கும் மேன்மை



இந்த சுறுசுறுப்பான ஊழியர் மேலதிகாரியின் நன்மதிப்பைப் பெற்றவர். துடிப்புள்ளவர் என்று பார்த்தாலே தெரியவில்லையா? எப்பொழுதும் இவர் தூய வெள்ளை உடைகளையே அணிவதின் ரகசியம் மனைவியின் கைவண்ணமும் டினோபால் சலவையும் தான்!

துவைத்த வெள்ளைத் துணிகளைக் கடைசியாக அலசுவதற்கு முன் நீரில் சிறிதளவு டினோபால் சேர்த்தால் போதும்— ஷர்ட்டுகள், புடவைகள், ப்ளவுஸ்கள், டவல்கள், குழந்தைகளின் உடைகள், எல்லாம் வெண்மை பளிச்சிடும். இத்தனைக்கும் ஆகும் செலவு என்ன தெரியுமா? ஒரு துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவே! உங்கள் உடைகள் இடையறு வெண்மையுடன் விளங்க, இன்றே வாங்குங்கள் டினோபால்— விஷயமறிந்தவர்கள் எப்போதும் வாங்குவது டினோபால்தான். எவ்விதமான துணிகளுக்கும் கேடுதலின்றி உபயோகிக்கக்கூடிய நவீன சலவை சாதனம் டினோபால்.



டினோபால் என்ற பெயர் ஜே. ஆர். கெய்கீ, எஸ்.ஏ. பாஸ், ஸ்விட்ஸர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கீ லிமிடெட், P.B. 965, பம்பாய்-1 பி.ஆர்.



வீரவாகு தேவர் ஆயிரம் பாணங்களைத் தொடுத்தார். தாரகன் தன் வில்லை வளைத்து ஆயிரம் பாணங்களை எதிர்த்து விடுத்தான்; வீரவாகு தேவரின் பாணங்கள் பொடியாகின. தாரகன் மேலும் நூறு பாணங்களை விடுத்தான். அதனை எதிர்த்து வீரவாகுதேவர் நூறு பாணங்களை விடுத்தார். 'வில் வன்மையில் இணையற்ற இவ்வீரனைத் தெய்வப் படைக்கலங்களால் தான் வெல்ல வேண்டும்' என்று எண்ணிய அவன் அக்கினிக் கணையை' ஏவினான். வீரவாகு தேவரும் அதற்கேற்ற எதிரிடைத் தெய்வக் கணையை ஏவித் தாரகன் விடுத்த கணையை அழித்தார். தாரகன் விடுத்த வருணாஸ்திரம், சூரியாஸ்திரம், வாயு அஸ்திரம், பிரம்மாஸ்திரம் தெய்வப் படைக் கலங்களுக்கும் இந்தக் கதி நேரிட்டது.

வீரவாகு தேவரைப் படைக்கலங்களால் வெல்வது இயலாது என்று கருதிய தாரகன், 'இவனை மாயையால் தான் வெல்ல முடியும்' என்று கருதி மாயா மந்திரத்தை உச்சாரணம் செய்யலானான். எண்ணில்லாத மாய வடிவங்களை எடுத்துக் கணக்கில்லாத கணைகளைச் செலுத்தினான். இருட்படலம் எங்கும் பரந்தது போல் தாரகன் ஒருவனே எங்குமாய் நின்று கடும் போர் செய்வதைக் கண்ட தேவர்கள் திக்கு திசை தெரியாது ஏங்கினார்கள்.



முன்னரே ஒதுங்கி நின்ற பூதர்கள் பின்னும் அஞ்சியோடினார்கள்; போர் செய்து இளைத்த வீரர்களும் வெருண்டு நின்றார்கள்; அசுரர்கள் அகமகிழ்ந்து வீராவேசத்தால் கொக்கரித்துக் குதித்துக் கூத்தாடினார்கள்.

தாரகனின் மாயப் போரையும், அது கண்டு தமது படையினர் கலங்கி நிற்பதையும் பார்த்த வீரவாகுதேவர் அனற்பொறி சிந்த நோக்கினார். ஊழிக் காலத்தில் எழும் பெருந்தீயைப் போல் வெகுண்டு வீரபத்திரப் படைக் கலத்தை எடுத்தார். அவ்வாயுதத்தை எடுத்தவுடனேயே சூரியன் முன் இருள் மறைந்தோடுவதுபோல் தாரகனுடைய மாயா உருவுகளெல்லாம் அழிந்தன. தாரகன் தனித்து நின்றான். ஞான ஒளியின் முன் மாயத் தோற்றம் யாவும் மறைய வேண்டியதுதானே?

வீரவாகுதேவருடன் பின்பு ஏமாற்றுப் போர் புரியலாம் என்று வஞ்சனையாக எண்ணித் தன் தேரை விட்டு இறங்கி ஓடினான் தாரகன். தோற்று ஓடுபவன் மேல் ஆயுதம் விடுத்தல் வீரமும் அல்ல; போர் நெறிக்கு உகந்ததும் அல்ல என்று எண்ணிய வீரவாகுதேவர், வீரபத்திரப் படைக்கலத்தைத் தூணியுள் இட்டார். 'வலியிழந்து ஓடிய தாரகனை எவ்வாறேனும் பிடித்துக் கட்டி எம்பெருமான் திருமுன் கொண்டு போய்ச் சேர்ப்பேன்' என்று கருதி ஆறுமுகப் பரஞ்சுடரது அடிமலரைச் சிந்தித்துத் தாரகனைத் தொடர்ந்து ஓடினார். தாரகனோ தன் சூதுத் திட்டத்தின்படி மாயைக்கு உறைவிடமாகிய கிரௌஞ்ச மலையின் குகை யொன்றில் புகுந்து ஒளிந்தான்.



இருள் அடர்ந்த அம்மலையின் குகையினுள் வீரவாகு தேவர் மெல்லப் புகுந்து சென்று தாரகனைத் தேடினார். தாரகனைக் காண இயலவில்லை; மலையினின்று மீளும் வழியையும் காண இயலவில்லை. 'ஓ, இதுவும் இம்மலையின் மாயையோ?' என்று சிந்தித்து நின்றார் வீரவாகுதேவர். அப்பொழுது அக்கிரவுஞ்ச மலையாகிய அசுரன், "இதுதான் நல்ல சமயம்" என்று எண்ணி வீரவாகு தேவரின் அறிவை மயக்கினான். அவரும் தமது முந்தை அறிவினை இழந்து தூங்குவதுபோலக் கிடந்தார்.

மாயையின் வீச்சில் ஞானியரும் மயங்குவர் என்பதை உணர்த்தும் வரலாறே இது. அந்த மயக்கத்தைப் பரம்பொருளின் அநுக்கிரகமே தெளிவிக்கும் என்பதைப் பிற்பாடு காண்போம்.

வீரவாகுதேவர் திரும்பி வராததைக் கண்ட அவருடைய அன்புடைத் தம்பியர்கள் இலக்கத்தெண்மரும், பூதப் படைத் தலைவர்களும் சிறகொடிந்த பறவைகள்போல மனமுடைந்து வருந்தினர். 'நமது தலைவர் தோற்று ஓடிய தாரகனைத் தொடர்ந்து சென்று போர் புரிகின்றார் போலும்! நாமும் அங்கே செல்வோம்' என்று கருதி விரைந்து சென்று, கிரௌஞ்ச மலைக் குகையினுள்ளே புகுந்தனர். கிரௌஞ்ச மலை வீரவாகுதேவரை மயக்கியது போலவே, எண்ணில்லாத மாயத்தைச் செய்து இலக்கத் தெண்மரையும் அறிவிழக்கச் செய்தது; அவர்களும் அறிவிழந்து மயங்கித் துயின்றார்கள். மாயை என்பது அத்தகைய இருள் சூழ்ந்த பெருமலையாகும்! அண்ட சராசரத்திலுள்ள உயிர்கள் அனைத்தையுமே அஞ்ஞான இருட் குகையில் ஆட்படுத்தி யிருப்பதல்லவா அது?

தாரகன் மகிழ்ந்தான். "நம் மாயையினால் இவர்கள் இறந்தார்கள்" என்று எண்ணிப் பூரித்தான். வானவர்கள்



கண்ணீர் விட்டுக் கலங்கி னார்கள்; பூதப் படைகள் தலைவரின்றி அச்சமுற் றன. மலை மீது எழுந்த தாரகன் தேரில் ஏறிக் கொண்டான்; அசுரர்கள் பலரும் வந்து அவனைச் சூழ்ந்து ஆரவாரித் தார்கள். பூதப்படைகள் மீது தாரகன் மீண்டும் கோடி கோடிக் கணை களைப் பொழிந்தான். முக்கியமான வீரர்களை இழந்து நின்ற பூதர்கள் பல திசைகளிலும், ஆகாயத்திலும் சிதறி யோடினர்.

இவற்றையெல்லாம் கண்ட நாரதர் இமையவருடன் சேர்ந்து முருகப் பெரு மானை அடைந்து அவரது திருவடிகளை வணங்கினார். தாரகனுடைய மாயப் போரை எடுத்துக் கூறினார்.

நாரதர் கூறியதைக் கேட்ட அடிய நாயகனாகிய அறுமுக அருள்மூர்த்தி, "தேவர்களே! வருந்த வேண்டாம். நாமே போர்க்களம் சென்று, தார கனை வேற்படையினால் கொல்லுவோம். கிரௌஞ்ச மலையைப் பிளந்து அதனுள் குகையில் சிறைப்பட்டு மயங்கியுள்ள நம் வீரர்களைக் கணப்பொழுதில் மீட் டருள்வோம்" என்று திருவாய் மலர்ந் தருளினார்.

தாரகனின் மாயத்தை மாய்ப்பதற் காக மாமயிலோனே எழுந்தருளுவார் என அறிந்த இமையவர்கள் ஆனந்த பரவசமுற்று ஐயனின் அடியிணைத் தொழுதனர்.

ஃ ஃ ஃ

முருகப் பெருமான் தமது சாரதி யாகிய வாயுதேவனைப் பார்த்து.



"மனத்தினும் விரைந்து செல்லும் வண்ணம் தேரைச்செலுத்து" என்று பணித்தருளினார். வாயு தேவன் குதிரைகளைத் தூண்டி ஆர்த்தான். விண் ணும், மண்ணும், மலை களும், கடல்களும் திக்கு யானைகளும் நடுங்கின.

குமரக் கடவுளுடைய தேர் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்றது. பூத சேனைகள் முருகப் பிரானைச் சூழ்ந்து சென்றன. போரில் தோற்று ஓடிய பூதர்கள் எல்லோரும் முருகக் கடவுளைத் தரிசித்தவுடன், புது உற்சாகம் பெற்று அவனை வணங்கிச் சூழ்ந்தனர். வான வர்கள் மகிழ்ந்து வாழ்த்தியப் முழக்கினர்

முருகப் பெருமான் தாரகனுடைய போர்க்களத்தை யடைந்தார். பூதப் படைகளுக்கும் அசுரப் படைகளுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. ஐயன் பிரசன்னமானதால் ஊக்கமும் உற் சாகமும் பெற்ற பூதர்களால் அசுரர் பலர் மாண்டனர். மாண்டு போகாத வர்கள் தோற்று ஓடினர்.

தாரகன் கடுங் கோபம் கொண் டான். தன்னை எதிர்த்த கணநாதர் களின்மீது பல பாணங்களைச் சொரிந்து துரத்திக் கொண்டு முருகக் கடவுள் திருமுன்னரே வந்து விட்டான். ஆறு முகக் கடவுளை நேருக்கு நேராகக் கண்டான்.



பூரண சந்திரனை யொத்த ஆறு திருமுகங்களையும், அரு ளொழுகும் பன்னிரண்டு நய னங்களையும், ஞான சக்தி யாகிய வேலையும், மற்ற திவ்வியாஸ்திரங்களையும், அவற்றைத் தாங்கும் செவ் விய திருக் கரங்களையும், அழ கிய நவரத்தினத் தண்டை ஒலிக்கும் திருவடித் தாமரைகளையும் தாரகன் கண்டான்.

முழுமதி அன்ன ஆறு
முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும்
அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியும் கண்டான்;
அவன்தவம் செப்பற் பாற்றே!

—

அந்த மகாகரனை எதிர்க்க வந்த மூர்த்தி பச்சிளம் குழந்தை என்பதைக் காட்டவே கச்சியப்பர், 'அடிமணித் தண்டையார்க்கும் செழுமலர் அடி' என்கிறார். அசுரன் கோபாக்னி மயமாக வருகிறான். அப்போதும் ஐயன் குளிர்ச்சி பொழியும் பூரண சந்திரனை யொத்த திருமுகமும் விழிகள்பொழியும் கருணையு மாகத் தரிசனம் சாதிக்கிறார். இத்த கைய தரிசனம் பெற்ற தாரகன் செய்த தவம் என்னவோ எனக் கவி வியக்கிறார். முழுமதி முகமும், விழி பொழி அருளும் தாரகனைத் திருத்தி நல்வழிப்படுத்தாது என்பதாலேயே ஐயன் 'வேலும் வேறுள படையும்' தாங்கி வந்ததையும் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)





கலங்காத வீரர்



1942-ம் ஆண்டு. உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம். ஜெர்மன் விமானங்கள் லண்டன்மீது குண்டுகளை வீசி, சரித்திரப் புகழ்பெற்ற பல கட்டடங்களையும் மக்களையும் பொருள்களையும் அழித்துத் தரை மட்டமாக்கிக் கொண்டிருந்தன. எந்த நிமிஷமும் ஹிட்லரின் படைகள் இங்கிலாந்தில் வந்து இறங்கலாம் என்று பீதி ஏற்பட்டிருந்தது. அப்போது, நெ. 10. டௌனிங் தெருவிலே, ஒரு கிழவர் கையில் 'புருஷை'ப் பிடித்துக் கொண்டு, மிக்க அமைதியாக ஒரு வர்ணப் படம் வரைந்து கொண்டிருந்தார். அவர்தான் வின்ஸ்டன் சர்ச்சில்! தைரியத்தையும் கலங்காத உள்ளத்தையும் பார்த்து மக்கள் புத்துணர்ச்சியும் உற்சாகமும் பெற்றார்கள்.

பிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் பேராபத்து ஏற்பட்டு அழிந்து போகக் கூடிய நிலைமையில் இருந்த போது—மற்றவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கி நம்பிக்கையைக் கைவிட்ட சமயத்திலே—அவர் அரசாங்கப் பொறுப்பை ஏற்றார்; பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை உயரத் தூக்கிப் பிடித்தார்; முடிவில், வெற்றியையும் தேடிக் கொடுத்தார். அன்று அவர் சொன்ன சொற்கள் — மக்களுக்கு உற்சாகமூட்டிய வார்த்தைகள் — இன்று வரலாற்றில் அழியா இடம் பெற்று விட்டன.

அவர் கூறியதாவது: ''வரட்டும், அவர்கள்! வரட்டும்! நம் நாட்டை, இந்தத் தீவை, என்ன பாடுபட்டாவது காத்தே தீருவோம். கடற்கரையில் நின்று அவர்களை (ஜெர்மானியரை) எதிர்ப்போம்; அவர்கள் கப்பல்களிலிருந்து வந்து இறங்கும் இடங்களில் நின்று எதிர்ப்போம்; வயல்களிலும்



தோட்டங்களிலும் நின்று அவர்களை எதிர்ப்போம். தெருக்களில் நின்று போராடுவோம்; மலைகள் மீதும், குன்றுகள் மீதும் தங்கியிருந்து அவர்களை எதிர்ப்போம். ஆனால், பணிய மாட்டோம். ஒருகாலும் நாம் பணிய மாட்டோம்.''

என்ன உறுதியான, திடமிக்க வீராவேசம் நிறைந்த சொற்கள்!

அந்த முழக்கமும் கர்ஜனையும் பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் ஊட்டின. ஒற்றுமையாக, கட்டுக்கோப்புக் குலையாமல் அவர்கள் எதிரியை எதிர்த்தார்கள். மகாயுத்தத்திலே வேறு எந்த நாடும் அனுபவிக்காத அத்தனை இன்னல்களையும் அவர்கள் அனுபவித்தார்கள்; இறுதியில் வெற்றியடைந்தார்கள்.

சர்ச்சிலின் முக்கிய குணமே போர்க்குணம். எதைக் கண்டும் அவர் அஞ்சுவதில்லை. வாழ்க்கையைப் பற்றி அவர் கூறுவதைக் கேளுங்கள்: ''ஆபத்து மிக்க வாழ்க்கை வாழ வேண்டும். நிகழ்வதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். அஞ்சாதீர்கள். எல்லாம் நன்றாக முடியும்.''

வாழ்க்கை முறையிலும், ஒவ்வொரு சிறிய செயலிலும் அவருக்கு இந்த இயல்பு இருந்தது. பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த போது ஆசிரியர்களுக்கும் அவருக்கும் ஆகவில்லை. அவர்களைத் தாக்கிப் பத்திரிகைகளில் எழுதி வந்தார். ஒரு நாள் தலைமை ஆசிரியர் அவரை அழைத்து, ''ஏன், இப்படி எழுதினாய்?'' என்று கேட்டார்.

''அதனால் என்ன சார், என் சொந்தப் பேர் போட்டு அதில் எழுதவில்லையே; புனைபெயரில்தானே எழுதியிருக்கிறேன்!'' என்றார் சர்ச்சில்.

''சொந்தப் பெயரோ, புனைபெயரோ இனிமேல் அப்படி நீ ஏதாவது எழுதினால் செம்மையாய் உதை கிடைக்கும்'' என்றார் தலைமையாசிரியர்.

சர்ச்சில் சிரித்துக் கொண்டே அங்கிருந்து போய்விட்டார்.

படிப்பில் அக்கறையோ, உற்சாகமோ அவருக்கு இல்லை. ஒரு வகுப்பில் இரண்டு முறை 'கோட்' அடித்தார். செய்யுளை மனப்பாடம் செய்வது அவருக்குக் கஷ்டமாக இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்! தந்தை பையனுடைய போக்கைப் பார்த்து விட்டு, ''சரி, நீ பட்டாளத்திலே சேருகிறாயாடா?'' என்று கேட்டார்.

''ஓ!'' என்றார் சர்ச்சில் கும்மாளத்தோடு.

ராணுவக் கல்லூரியில் சேர்ந்தார். நன்றாய்ப் படித்து எல்லாப் பரீட்சைகளிலும் சிறப்பாய்த் தேறினார். கல்லூரியை விட்டு வெளியே வந்தார். பட்டாளத்தில் சேர்ந்தார். வெறும் ராணுவக் கல்லூரிச் சிப்பாயாக மாத்திரம் அவர் இருக்க விரும்பவில்லை. சண்டை போட வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்.





போரில் நேரடியாகக் கலந்து துப்பாக்கியையும் பீரங்கியையும் கையாள விரும்பினார். அப்படியே பல போராட்டங்களில் கலந்து சண்டை போட்டார். அப்போது, பலமுறை எமலோக வாசலைக்கூட எட்டிப் பார்த்தார்.

அவருடைய தந்தை அந்தக் காலத்துப் பிரிட்டிஷ் அரசியலில் பிரபலமாக விளங்கியவர். மகனுக்கும் அந்த 'வாசனை' அடிக்கத் தானே செய்யும்? துப்பாக்கி பிடித்துச் சண்டை போட்ட வின்ஸ்டன், போர் ஓய்ந்த பிறகு, வாய் மூலம் சண்டை போடுவதற்காக அரசியலுக்குள் புகுந்தார். அப்போது பார்லிமெண்ட் உபதேர்தல் ஒன்று நடந்தது. சர்ச்சில் அதில் ஓர் அபேட்சகராக நின்றார். ஆனால் பாவம் தோற்றுப் போனார். என்ன செய்வதென்று யோசித்தார். இந்தச் சமயத்தில் தென்னாப்பிரிக்காவில் போயர் யுத்தம் தொடங்கியது. ஆங்கிலேயர்களுக்கும் போயர்களுக்கும் யுத்தம். வின்ஸ்டன் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் அங்கு போனார்.

1890-ம் வருடம் ஆப்பிரிக்காவில் நடந்து வந்த போயர்களின் யுத்தத்தை நேரில் கண்டு அதைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து அனுப்புவதற்கு 'மார்னிங் போஸ்ட்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகைக்கு ஒரு நிருபர் வேண்டியிருந்தது. இருண்ட கண்டம் என்று பெயர் பெற்றுப் பயங்கரங்கள் நிறைந்த ஆப்பிரிக்காவுக்கு. அதுவும் அங்கு யுத்தம் நடக்கும் போது செல்வதை எந்தப் பத்திரிகைக்காரரும் விரும்பவில்லை. உயர்ந்த சம்பளம். மாதம் 250 பவுன்கள். யாருமே முன்வராத இந்த அபாயம் நிறைந்த நிருபர் வேலைக்குத் தாமாக முன் வந்தார் இருபத்தி நான்கே வயதான வின்ஸ்டன் சர்ச்சில். வீர தீரச் செயல்கள் புரிவதில் சிறு வயது முதலே விருப்பம் கொண்டவர் சர்ச்சில். செய்திகளை மட்டும் அவர் அனுப்பவில்லை. தம் செயல்களையே பரபரப்பூட்டும் செய்தியாக்கி விட்டார். விரோதிகளின் பகுதியில் துணிந்து உட்புகுந்து, பீரங்கிகளின் குண்டு வீச்சுகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் செய்திகளைச் சேகரிக்கும் காரியத்தில் ஈடுபட்டார். போயர்கள் இவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர். சூடான சுவையான செய்திகளை அளித்து வந்த சர்ச்சில் சிறையில் வாடுவதைக் கேட்ட பிரிட்டிஷ் மக்கள் தவித்தார்கள். ஆனால் அடுத்து சர்ச்சில் சிறையிலிருந்து தப்பி விட்டார் என்ற செய்தியும், அவரைத் தப்ப விட்டதனால் அவமானமும் ஆத்திரமும் அடைந்துள்ள போயர்கள் அவரை உயிருடனோ, சவமாகவோ கொண்டு வருபவர்களுக்குப் பெருந் தொகை தருவதாக அறிவித்திருப்பதையும் கேட்டுப் பிரிட்டிஷ் மக்கள் அந்த இளைஞர் சர்ச்சிலின் தீரத்தைப் பற்றி வியந்தார்கள்.

சிறையிலிருந்து தப்பிய சர்ச்சில் விரோதிகளின் பிரதேசத்தில் பல நூறு மைல்கள் அவர்களுடைய கட்டுக்காவலுக்கெல்லாம் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு நடந்தும் கூட்ஸ் வண்டிகளில் ஒளிந்தும், கானகங்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் மறைந்திருந்தும், சதுப்பு நிலங்களில் சிக்கித் தவித்தும் நதிகளை நீந்திக் கடந்தும் பிரயாணம் செய்த விவரங்கள் பிரிட்டிஷ் மக்களை வியப்பிலாழ்த்தின. சர்ச்சில் வீரபுருஷராக அவர்கள் உள்ளத்தில் உயர்ந்து விட்டார். ■

'அபாயத்தைக் கண்டு அஞ்சி ஓடாதே'. இதுவே சர்ச்சிலின் தாரக மந்திரம். 1921ல் அமெரிக்காவுக்குப் பிரசங்கங்கள் புரிவதற்காக அழைக்கப்பட்டிருந்தார் வின்ஸ்டன். நாற்பத்தைந்து பிரசங்கங்கள். ஒரு பிரசங்கத்துக்கு 220 பவுன்கள். பிரபல துப்பறியும் ஸ்தாபனமான ஸ்காட்லண்ட் யார்ட் சர்ச்சில் அமெரிக்கா செல்வதால் மிகப் பெரிய அபாயத்தை எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்று அறிந்தார்கள். ஒரு கோஷ்டியினர் அவரை அமெரிக்காவில் அவர் பிரசங்கம் புரியும்போது கொலை செய்யத்திட்டமிட்டிருப்பதாக அறிந்தார்கள். அதைச் சர்ச்சிலுக்கு அறிவித்துப் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அபாயத்தைக் கண்டு அஞ்சாத சர்ச்சில் தமது முடிவை மாற்றிக் கொள்ள வில்லை. அமெரிக்காவின் மேற்கத்திய நகரங்களில் ஒன்றுக்கு வந்தபோது அந்தக் கொலைகாரக் கும்பலில் முக்கியமானவர்கள், அவரது பிரசங்கத்துக்கு டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டு கூட்டத்துக்கு வருவதற்குத் தயாராக இருப்பது பற்றிய செய்தி தெரிய வந்தது. நகரின் பிரதான போலீஸ் அதிகாரி நடுங்கிப் போய் அசம்பாவிதத்தைத் தவிர்க்க உடனே பிரசங்கத்தை ரத்து செய்துவிடும்படி கூறினார். ஆனால் சர்ச்சிலின் மானேஜரான ஜாபி ஜே. ஆல்பர் கட்டாயமாக மறுத்து விட்டார். அவரது அந்த உறுதியைப் பாராட்டி, "ஆல்பர்! உன் முடிவுதான் நியாயமானது. இப்படிப்பட்ட பயமுறுத்தல்களுக்கெல்லாம் பணிந்து நாம் புறமுதுகு காட்டக் கூடாது. அதனிடமிருந்து ஓடி ஒளியவும் கூடாது. அப்படிச் செய்வதால் அந்த அபாயத்தின் வலிமையை இரட்டிப்பாக்கி விடுகிறோம் நாம். முறையாக நடுக்கமின்றி அதை எதிர்நோக்கினால் அந்த அபாயத்தின் தன்மை பாதியாக்கப்படுகிறது. எதைக் கண்டும் எப்போதும் ஓடாதே!" என்றார். அபாயங்களைக் கண்டு ஓடுவதற்குப் பதில் சர்ச்சில் அபாயங்களை நோக்கி ஓடலானார்.


சர்ச்சில் 1911ல் பிரிட்டிஷ் கடற்படையின் தலைமையை ஏற்றபோது பன்னிரண்டு விமானங்களே இருந்தன. பறப்பது பழக்கப்படாத அந்தக் காலத்தில் சர்ச்சில் தாமே விமானத்தை இயக்கிப் பறக்கலானார். ஒவ்வொரு தடவையும் மயிரிழையில் உயிர் தப்பித் திரும்பினார். அரசாங்கம் அவரை விமானம் ஓட்ட வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டது. ஆனால் சர்ச்சிலா கேட்பார்? வீரச் செயல்கள் புரிவதை, சாகஸங்கள் செய்வதை விரும்பும் சர்ச்சில் விமானம் ஓட்டுவதில் வல்லவரானதோடு இனி வருங்காலத்தில் யுத்தத்தின் போக்கையே இந்த விமானங்கள் மாற்றியமைக்கப் போகின்றன என்ற உண்மையையும் உணர்ந்து கொண்டார். கடற்படைக்கான பிரத்தியேக விமானப் படையை நிறுவுவதற்குச் சர்ச்சிலே முக்கிய காரணம்.





அத்தியாயம் ஆறு

பர்மா அகதி




அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களையும் விட்டு விட்டு மனம் திறந்து வாய் திறந்து துள்ளிக் குதித்துச் சிரிக்கும் ஒரு முரட்டுக் கன்னிப் பெண்ணைப் போல் வெண்ணுரைகள் கரை கட்டிய சிறு சிறு அலைகளை முறுக்கி யெழுப்பி உதறிப் பிரித்து மோத விட்டுக் கொண்டிருந்த நீலக் கடலையே வியப்புடன் பார்த்தவாறு கடற்கரையின் ஒரு புறமாகத் தன்னந் தனியே நின்று கொண்டிருந்தான் சபேசன்.

பைத்தியக்காரனையும், ஆகாயத்தில் பறக்கும் விமானத்தையும், குறவனின் குரங்கையும், அலை மோதும் கடலையும் பார்ப்பதிலே மனித மனத்துக்கு எப்போதுமே அலுப்புச் சலிப்பு இல்லாத ஒரு நிரந்தரமான அநுதாப உணர்ச்சியும் வியப்பு உணர்ச்சியும் உண்டல்லவா?

வட கிழக்குத் திசையின் தொலைதூரத்தில் அமைந்திருந்த துறைமுகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஐந்தாறு கப்பல்கள்





நின்று தமது பூதாகாரமான புகை போக்கிக் குழாய்களின் வாயிலாகக் கரிய புகையை நிர்மலமான வான வெளியில் திரி திரியாகப் பரப்பி அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கும் காட்சி இப்போது அவன் கவனத்தைக் கவர்ந்தது. அந்தக் கப்பல்களையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

'கப்பல்....! மூன்று பகுதி நீராலும் ஒரு பகுதி தரையாலும் சூழப்பட்ட உலகம் உருண்டையானது தான் என்பதை உலகுக்கு உணர்த்த உதவிய மூலப் பெரும் சாதனம்! அகண்ட அளவில் விரிந்து பரந்திருந்த காலத்தையும், நேரத்தையும் குறுக்கிப் பூமண்டலத்தை ஒரு கைப் பந்து அளவினதே என்னும் பிரமை கொள்ளும்படியாகச் சுருட்டிப் பாரதூரமான இடைவெளியால் தொடர்பே இல்லாமல் சிதறிக் கிடந்த பல்வேறு தேசங்களையும் பலப் பல இன மக்களையும் ஒன்றோடொன்றும் ஒருவர்க்கொருவரும் தொடர்புபடுத்தி அறிமுகமாகிக் கொள்ள உதவி செய்த முதற் பெரும் ஒற்றுமைத் தேவதை! ஒரு தேசத்துக்குச் சொந்தமான ஊர்வன, நடப்பன, நீந்துவன, பறப்பன ஆகிய ஜீவராசிகளையும்; செடி, கொடி, மரம் முதலான தாவர வர்க்கங்களையும்; பொன், மணி, நவதானியங்கள் முதலான பொருட் செல்வங்களையும் மட்டுமல்லாது; அந்தத் தேசத்தின் மொழி, மதம், கலை, நாகரிகம், பண்பாடு, அரசியல், சமூகக் கோட்பாடுகள் ஆகியவற்றையும் எடுத்துச் சென்று உலகின் எட்டுத் திசைகளிலும் பரப்பும் பணியைப் பன்னெடுங் காலமாகவே இடைவிடாது புரிந்து வரும் ஞான தூதன்! இத்தகைய இறவாப் புகழுக்குரிய இந்தக் கப்பல் என்னும் அரிய சாதனம், அழியா அபகீர்த்திக் குரிய பல காரியங்களுக்கும் உதவி வந்திருக்கிறது. பொன்னையும் பொருளையும் சுமந்து சென்று ஒவ்வொரு தேசத்து மக்களின் வாழ்விலும் வளத்தை நிரப்ப உதவிய இது,

கத்தி, கேடயம், துப்பாக்கி, வெடிகுண்டு முதலான அழிவுக் கருவிகளையும் ஏற்றிச் சென்று ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடிமை கொள்ளவும் அடக்கி ஆளவும் அதன் சுதந்திர வாழ்வைப் பறித்துச் சூறையாடவும் உதவியிருக்கிறது! எனினும் இதை யெல்லாம்கூட ஒருவாறு மன்னித்து மறந்து விடலாம்; ஆனால், இன்றோ அதனினும் கொடிய காரியம் ஒன்றுக்கு இது பயனாக முன் வந்துள்ளதே? ஆமாம்; திரைகடலோடித் திரவியம் சேர்க்கவும், உடலை வருத்தி உழைத்துப் பிழைக்கவும் ஆவல் கொண்ட மக்களைப் பல நூறு ஆண்டு காலமாகவே உலகின் நாலா திசைகளுக்கும் ஏற்றிச் சென்று அவர்களது வாழ்வையும், அவர்கள் வாழச் சென்ற நாடுகளின் வளத்தையும் பெருக்கி உயர்த்தப் பேருதவி புரிந்த இந்தக் கப்பல் என்னும் சாதனம், இப்போது அப்படிப் பல நாடுகளிலும் குடியேறி வாழ்ந்த மக்களில் பலரை வாழவும் விடாமல் சாகவும் வைக்காமல் வாரிப் போட்டு அடைத்துக்கொண்டு வந்து அவரவர்களின் ஜன்ம பூமியிலே கொட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. சுதந்திரம், சுயாட்சி, சுதேசாபிமானம், சுய இனப் பற்று என்பனவற்றின் பெயரால், கூடி வாழும் பண்பை இயற்கையாகவே கொண்ட மனித குலத்தைச் செயற்கையாகப் பிரிவினைப்படுத்தி வாழத் துடிக்கும் மக்களின் வாழ்க்கையைச் சூறையாடி, இத்தனை காலமும் வாழ்ந்து வந்த மண்ணை விட்டு வெளியேற்ற முனைந்துள்ள சில தேசங்களுக்கு உதவும் சாதனமாகவும் செயல்பட ஆரம்பித்து விட்டிருக்கிறது. சமத்துவம், சுபிட்சம், உலக சகோதரத்துவம் என்ற கோஷம் மூலைக்கு மூலை எழுந்து ஒலிக்கும் இந்தக் காலத்தில்தான், இம்மாதிரியான சுலோகத்தைச் சில நாடுகள் எழுப்பிக் கொண்டே இத்தகைய காரியத்தையும் செய்து வருகின்றன! இதற்குத் துணை போக இந்தக் கப்பல் என்னும் இதயமற்ற அரக்கனும் முன் வந்திருக்கிறது!.....' —

தொலைதூரக் கடலோரத்தில் நின்றிருந்த கப்பல்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சபேசனின் கண்களில் நீர்த் திரை போர்த்தி அந்தக் காட்சியை மறைத்தது.

அவன் தொய்ந்து துவண்டு மணற்பரப்பில் அப்படியே உட்கார்ந்து விட்டான். இப்போது அவனுக்கு அந்தக் காட்சி தென்படவில்லை. அருகிலிருந்த படகு ஒன்றின் சிறிய முனையில் அமர்ந்திருந்த காகம், அத்தனை பெரிய கப்பல்களையும் மறைத்து விட்டிருந்தது. ஆனாலும் கண்ணீரில் மிதந்த அவனது கண்ணுக்குள்ளே ஒரு கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருப்பதை அவனுடைய மனக் கண் நன்றாகப் பார்த்தது. அந்தக் கப்பலில் பொருத்தப்பட்ட பலகைப் படிகளின் வழியே நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும் மூட்டை முடிச்சுக்களுடன் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத் தலை குனிந்து தள்ளாடித் தள்ளாடி இறங்கி வரும் காட்சியும் அவனுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. அப்படி இறங்கிய மக்களில் அவனும் ஒருவனாக இருந்து தேம்பித் தேம்பி அழுதவாறு இறங்கி வருவதையும் அவன் இப்போது பார்த்தான்.

பாரத மண்ணில் அவனது கால்கள் பதிகின்றன. உடல் ஒரு குலுங்குக் குலுங்கிச் சிலிர்க்கிறது. 'ஓ'வென்று கதறி அழுகிறான் அவன்!....

ஆமாம்; இது அவனுடைய மனக் கண்ணில் மட்டுமே புலப்பட்ட காட்சி அல்ல; ஒரு வாரத்துக்கு முன் உண்மையாகவே நடந்த நிகழ்ச்சிதான்.

பன்னெடுங் காலமாகவே பர்மாவைச் சேய்த் திருநாடாகக் கொண்டு குடியேறி, அதன் பொருளாதார ஆன்மீக வளர்ச்சிகளையன்றி வேறு எவ்வித நோக்கமும் கொள்ளாமல் அமைதியாக வாழ்ந்து வந்த இந்திய மக்களை, அந்நாட்டின் அரசாங்கம், 'சோஷலிஸ சமுதாய அமைப்பு' என்னும் ஒரு நல்ல கொள்கைக்குச் செய்து கொண்ட தவறான வியாக்கியானத்தை அமுலாக்குவதற்காக, அவர்களது சுய உழைப்பின் மூலம் சேர்த்த ஆஸ்திகளையும் கடை கண்ணிகளையும் பறித்துக் கொண்டு விரட்டியடிக்க, அப்படி விரட்டப்பட்டவர்களில் ஒரு பகுதியினரை ஏற்றிக்கொண்டு சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்தது ஒரு கப்பல்.

வாழ்விழந்து, வளமிழந்து, பரதேசிகளாய்த் தாயகம் திரும்பிய அந்த மக்களைச் சிற்றுண்டி உபசரிப்புடன் வரவேற்றது சென்னை நகரம்!

தங்களுடைய உழைப்பைத் தனக்குத் தராமல் வேற்று நாட்டு மண்ணில் கொண்டு போய் வீணடித்து விட்டு வெறுங் கையராய் வந்து சேர்ந்த தன் மக்களை அன்போடும் பரிவோடும் ஆறாத் துயரோடும் அணைத்துத் தாங்கிக் கொண்டது பாரத மண்.

இப்படி வந்த பல நூறு பர்மா அகதிகளில் இளைஞன் நடன சபேசனும் ஒருவனாயிருந்தான்!

அவனுடைய வாழ்நாளில் மறக்க முடியாத இந்த நாளைப் போலவே இன்னொரு நாளும் வந்து போயிருந்தது. அதாவது, கோவை, கவுண்டன் பாளையத்துக்கு அண்மையில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்த அவன், ஏழு வயதுச் சிறுவனாயிருந்த போதே தன் தாயிடமிருந்து பிரிந்து, பர்மாவில் ரப்பர்த் தோட்ட முதலாளியொருவரிடம் கணக்கராக வேலை பார்த்து வந்த தனது தந்தை சொந்த ஊருக்கு வந்து சில நாட்கள் தங்கிவிட்டு மீண்டும் பயணப்பட்ட போது அவருடனேயே கிளம்பினான். ரங்கூனில் போய் அவன் இறங்கின அன்றுதான், அப்போதைய சுதந்திர பர்மாவின் முதல் பிரதமராயிருந்த ஜெனரல் அவுங்ஸான் சுட்டுக் கொல்லப்பட்டார்.



''நான் முதல் தடவையாகச் சமையல் செய்தேன்! அதிலேயே எனக்குப் பெரிய வெற்றி கிட்டி விட்டது!''
''அப்படியா?''
''ஆமாம்! மறுநாளே என் கணவர் ஒரு சமையல்காரனை அழைத்து வந்து விட்டார்!''

அந்தச் சம்பவம் பற்றி அவனுடைய பிஞ்சு மனம் அப்போது அச்சமோ, கவலையோ படவில்லை. விவரம் அறியாத இளம் பாலப் பருவம் அது. ஆனால் அவ்வன்முறைச் செயலுக்கும், இன்று தன் வாழ்க்கையில் வந்துள்ள இருள் சூழ்ந்த இந்நாளுக்கும் ஏதோ ஒரு மிக மெல்லிய இழை போன்ற தொடர்பு இருப்பதாகவே அவனுக்கு இப்போது தோன்றியது.

எதையும் வேடிக்கை பார்ப்பதில் சென்னை நகர மக்களுக்கு நிகராக வேறு எவரையும் சொல்ல முடியாது. லாரியில் தெரு நாய் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கிறதா, அது ஒரு வேடிக்கை; அரிசி 'க்யூ'வில் இரண்டு பேர் அடிதடி சண்டையில் இறங்குகிறார்களா, அது ஒரு வேடிக்கை; தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி ஊர்வலம் போகிறார்களா, அது ஒரு வேடிக்கை; கோர்ட்டில் கொலை வழக்கு விசாரணை நடக்கிறதா, அதை வேடிக்கை காண ஒரு கும்பல்; பசி மயக்கத்தில் கிழப் பிச்சைக்காரி சுருண்டு விழுந்து கிடக்கிறாளா, அது ஒரு வேடிக்கை; சினிமா நடிகர் காரில் போகிறாரா அது ஒரு வேடிக்கை; வெள்ளத்தில் குடிசைகள் அடித்துக் கொண்டு போகின்றனவா, அது ஒரு வேடிக்கை! இந்தவிதமான வழக்கப்படியே இப்போது சென்னை நகர மக்கள், பர்மா அகதிகள் வருவதை வேடிக்கை பார்க்கத் துறைமுகத்தில் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

தங்களை வேடிக்கை பார்க்கும் ஜனங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே கப்பல் படிகளைவிட்டுக் கீழே இறங்கினான் சபேசன். அவனுக்குத் திடீரென்று தொண்டை அடைத்துக் கொண்டது. முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மிப் பொருலானான்.

காரணம், அவனோடு வந்த அகதிகளில் சிலரை அவர்களது உறவினர்கள் வந்து அழைத்துச் சென்றார்கள். மற்றும் சிலருக்குத் தங்கள் ஊர்களிலிருந்து ஆட்கள் மூலம் செய்திகள் கிடைத்தன. இன்னும் சிலரை, அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் வந்து பார்த்து ஆறுதல் கூறிவிட்டுப் போனார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் அநாதரவான நிலையிலேயே இருந்தனர். ஆயினும் அவர்கள் பர்மாவிலிருந்தே தத்தமது குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் சேர்ந்து வந்திருந்ததால் சிறு சிறு குழுக்களாகக் கூடி நின்றனர். சபேசன் ஒருவன்தான் தனி மரமாகக் காணப்பட்டான். அவனுடைய தந்தைக்கு அந்தக் கப்பலில் இடம் கிடைக்கவில்லை. அடுத்த கப்பலில் வருவதாகச் சொல்லி, மகனை மட்டும் ஏற்றிவிட்டார். அவரது நண்பர் ஒருவரின் துணையோடு கப்பல் பயணத்தை மேற்கொண்ட அவன், அந்த நண்பர் கல்கத்தாவில் இறங்கி விடவே தனித்து நின்று விட்டான். சென்னையில் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது. பிள்ளை வரும் செய்தியை அவனுடைய தாயாருக்குத் தந்தை கடிதம் எழுதித் தெரிவித்திருந்தார். என்றாலும், அவள் சென்னைக்கு வந்து அவனை அழைத்துப் போகும் நிலையில் இல்லாதவள். கிராமத்து மௌடீகம், வயது முதிர்ச்சி, வறுமை — இவை காரணங்கள். எனவேதான் தன் ஆதரவற்ற நிலையைக் கண்டு வருந்தினான்.

அரசாங்க ஏற்பாட்டின்படி சென்னைப் புறநகர் பகுதியொன்றில் அமைந்த அகதிகள் முகாமுக்கு அந்தப் பர்மா அகதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். சில தினங்கள் அங்கே இருந்தபின், உற்றார் உறவினர் உள்ளவர்களை அவரவர்களின் சொந்த ஊருக்கு ரயிலில் அனுப்பி வைப்பதெனவும், அப்படிப் போக்கிடம் இல்லாதவர்களை 'மண்டபம் காம்பு'க்கு இட்டுச் சென்று அவர்களது புனர் வாழ்வுக்கு வழி செய்து தருவதெனவும் ஏற்பாடு. சபேசனும் அந்த அகதி முகாமில் போய்த் தங்கினான். ரயில் வசதி கிடைத்ததும் நேரே தன் தாய் இருக்கும் சொந்த கிராமத்துக்குப் போய் விடுவதென்பது அவனுடைய திட்டம்.

மறு நாள் காலை. முகாமைச் சுற்றிப் போடப்பட்டிருந்த முள் வேலியின் அருகில் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து, அகதி யொருவரிடமிருந்து இரவல் வாங்கிய தினப் பத்திரிகையொன்றைப் படித்துக் கொண்டிருந்தான் சபேசன். சற்றுத் தொலைவில் ஆண்களும் பெண்களுமாக ஏழெட்டுப் பேர் கூடி, வேலிக்கு வெளியே நின்றிருந்த இளைஞனொருவனிடம் ஏதோ பேரம் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. பத்திரிகையை மடித்து வைத்துக் கொண்டு எழுந்து போய்ப் பார்த்தான். டக்காக உடையணிந்து கட்டை குட்டையாகவும் கறுத்த மேனியாகவும் தோற்றமளித்த அந்த இளைஞன், அகதிகளிடம் வெகு சாமர்த்தியமாகவும் வேடிக்கையாகவும் விவகாரத்தோடும் பேசிக் கொண்டிருந்தான். அவன்தான் நச்சி!

சில விநாடிகளுக்குப் பிறகு சபேசனுக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது. அகதிகளிடமிருந்து பேனா, கைக் கடிகாரம் முதலான சிறு சிறு பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்க அவ்விளைஞன் பேரம் பேசிக்கொண்டிருந்தான். இந்த வெளிநாட்டுப் பொருட்களைப் பாதி விலைக்கு வாங்கி உள்ளூரில் அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பது அவனுடைய நோக்கமாயிருக்க வேண்டும். அகதிகளில் சிலர் தம் அவசரத் தேவைகளுக்காக விலை உயர்ந்த பேனாக்களையும் கைக்கடிகாரங்களையும் அவனிடம் விற்றனர். சில பெண்கள் தம்மிடமிருந்த நீளமான 'இணை மூடி'களையும், பிஸ்கட் டின்களையும்கூட விற்க முன் வந்தனர்.

சபேசனுக்கும் ஓர் ஆசை எழுந்தது. அவனிடம் அழகிய 'பெலிக்கன்' பேனா ஒன்று இருந்தது; அது விலை உயர்ந்தது. இவ்வூரில் கிடைக்காதது. அவன் கையில் அப்போது மூன்று ரூபாய் இந்திய நாணயங்களே இருந்தன. ஊர் போய்ச் சேர இலவச ரயில் பிரயாணம் கிடைத்தாலும் தன் கைச் செலவுக்கும் கிராமத்தில் உள்ள தனது தாய்க்கு ஏதாவது வாங்கிக் கொண்டு போகவும் கொஞ்சம் பணம் இருந்தால் நல்லது என்று நினைத்தான். அந்தப் பேனாவை நச்சியிடம் விலை பேசினான். இரு தரப்புக் கெஞ்சல் மிஞ்சலுக்குப் பின் ஐந்து ரூபாய்க்குப் பேனா கைமாறியது. அதன் அசல் விலை எழுபத்தைந்து ரூபாய்! ஆனாலும் சபேசனுக்குத் திருப்திதான். நச்சிக்கு அதை விடத் திருப்தி. அந்தப் பேனாவின் மூலம் அவனுக்குப் பத்து ரூபாய் இலாபமாவது கிடைக்கும்.

அன்று நச்சியால் சிறிதளவே கொள்முதல் செய்ய முடிந்தது! அவனுடைய மூலதனம் அவ்வளவுக்கே இடம் தந்திருக்கலாம்.

அடுத்த நாளும் நச்சி வந்தான். அன்று அவனது டெரிலின் சட்டை ஜேபியில் ரூபாய் நோட்டுக்கள் துருத்திக்கொண்டிருப்பது தெரிந்தன. சபேசனிடம் இழைந்து குழைந்து பேசி அவனைச் சிநேகம் பிடித்துக்கொண்டு அவன் மூலம் மற்ற அகதிகளிடமிருந்து பொருட்களை விலைக்கு வாங்க முற்பட்டான். தங்கள் தலைவிதியை நினைத்து நொந்தபடி வெளியே வராமல் கொட்டடிகளிலே குந்திக் கிடந்த அகதிகளிடம் சபேசன் விஷயத்தை விளம்பரப்படுத்தவே, நச்சிக்கு அதிக அளவில் பொருட்கள் கொள்முதல் ஆயின. இதனால் நச்சி — சபேசன் நட்பும் முற்றியது.

இளைஞனை சபேசனுக்கு இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாகவே அந்த அகதி முகாம் வாசம் சலித்துவிட்டது. நாள் முழுதும் அங்குள்ள அகதிகளின் அழுத முகங்களையும், தங்கள் நம்பிக்கையற்ற எதிர்காலத்தைப்பற்றிய சோகப் பேச்சுக்களையும் பார்த்துப் பார்த்துக் கேட்டுக் கேட்டு ஒருவித பீதியால் அவன் மனம் மருண்டு விட்டது. இந்த நிலைமைக்கு முற்றிலும் மாறாக நச்சி விளங்கவே அவனை அவனுக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. மறுநாள் முகாமுக்கு வந்த நச்சியிடம், தான் நகரத்தைச் சுற்றிப் பார்க்க விரும்புவதாகச் சொன்னான். அவனும் மகிழ்ச்சியுடன் அவனை அழைத்துச் செல்லச் சம்மதித்தான். முகாம் அதிகாரிகளின் அனுமதி பெறாமலே அவனோடு கிளம்பி விட்டான் சபேசன்.

நச்சியிடம் அப்போது நிறையப் பணம் இருந்தது. சபேசனின் கையை எதிர்பார்க்காமல் அவனுக்கு நன்றாகச் செலவு செய்து சென்னைப்பட்டணத்தின் நாகரிகக் கோலாகலங்களை யெல்லாம் சுற்றிக் காட்டினான். சினிமா என்ன, சர்க்கஸ் என்ன, மல்யுத்தப் பந்தயமென்ன, பெரிய பெரிய ஹோட்டல்கள் என்ன, டாக்சி சவாரி என்ன!— நச்சியின் டாம்பீகமான நடையுடை பாவனைகளையும், பணத்தைப் பண மென்று பாராமல் தண்ணீராகச் செல விடுவதையும் கண்டு அவன் ஓர் இலட்சாதிபதி வீட்டுப் பிள்ளையாயிருப்பானோ என்று எண்ணிப் பிரமித்துப் போனான். இதனால் அகதி முகாமை விட்டு வெளியே வந்து இரண்டு நாட்களாகியும் அந்த நினைவே இல்லாமல் அவனோடு ஜாலியாக ஊர் சுற்றிக் கொண்டிருந்த அவனுக்கு, மூன்றாம் நாள் இரவு நச்சி படுப்பதற்காகச் செங்காங் கடைத் தெரு ஒன்றின் பிளாட்பாரத்தைத் தேடிச் சென்ற போதுதான் 'அவன் யார்' என்ற விஷயம் தெளிவாயிற்று! பயந்துவிட்டான் சபேசன்.

மறு நாள் காலை விடிந்ததும் விடியாததுமாக எழுந்து முகாமுக்கு ஓடினான். அது கலைக்கப்பட்டு விட்டிருந்தது. அங்கிருந்த அகதிகளெல்லாம் அவரவர் ஊருக்கும், மண்டபம் காம்புக்குமாக ரயிலில் அனுப்பப்பட்டு விட்டார்கள் என்ற தகவல் அறிந்து அப்படியே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டான். இனி என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. தன் நிலைமையை முகாம் அதிகாரிகளிடம் சொல்லவும் பயந்தான். அனுமதி பெறாமல் முகாமை விட்டுப் போனது அவனுடைய தவறு அல்லவா?

சபேசனுக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. தனியாக ஊருக்குப் போகவும் கையில் பணமில்லை. மனத்தில் ஏதேதோ பயமெல்லாம் சூழ்ந்து கொண்டு அவனைப் பாடாய்ப்படுத்தின. பரந்து விரிந்த சென்னை நகரத்தின் ராட்சஸ கோலத்தையும், அதன் மர்ம மயமான படாடோப இயக்கத்தையும் நினைக்கும் போதே குலை நடுக்கம் ஏற்பட்டது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து நன்றாக அழுது தீர்த்துவிட்டு மெல்ல எழுந்து நடந்தான். அவனுடைய மனத்தில் இப்போது நச்சியின் நினைவு ஒன்றுதான் ஆறுதல் தரக் கூடியதாக இருந்தது. அவனிடம் போய்த் தன் நிலைமையைச் சொன்னால் நிச்சயமாகத் தனக்கு அவன் உதவி செய்வான் என்ற நம்பிக்கையுடன் போன வழியே திரும்பி வந்தான். ஆனால் நச்சியைக் கண்டு பிடிப்பது அத்தனை எளிதான காரியமாக அவனுக்கு இருக்கவில்லை.


சென்னை நகரை நாளெல்லாம் சுற்றி யலைந்தபின் எப்படியோ அவனைக் கண்டு பிடித்து விட்டான். அவனுடைய நம்பிக்கை வீண் போகவில்லை. நச்சி அவனுக்குப் பலபடியாக ஆறுதல் கூறி அபயம் அளித்தான். அவனது தந்தை அடுத்த கப்பலில் வந்து சேரும்வரை சென்னையிலேயே தங்கியிருந்து பிறகு அவருடன் ஊருக்குப் போகலாம் என்றும், அதுவரையில் அவன் பிழைப்புக்கு ஏதாவது வழிகாட்டி விடுவதாகவும் கூறினான். சபேசனுக்கு இந்த யோசனை பரம திருப்தியாகவே இருந்தது. ஆயினும், நச்சியின் நடவடிக்கைகள் அவ்வப்போது அவனுக்குப் பீதியை ஏற்படுத்தின. அவனை நம்பவும் முடியாமல், விட்டுப் போக வேறு வழியும் இல்லாமல் அவன் சொன்னபடி நடந்து, கடைசியில் இதோ இந்தக் கடற்கரையில் வந்து அமர்ந்திருக்கிறான்!....


"அப்போ, நான் வரட்டுமா நச்சி? கூட்டம் ஆரம்பமாகப் போகுது. கவனிச்சுக் காரியத்தைச் செய். இசைபிசகா மாட்டிக்கக் கிட்டிக்கப் போறே, ஜாக்கிரதை!" என்று, இந்நேரம் நச்சியிடம் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டிருந்த மப்ளர்காரர் கடைசியாக இப்படி எச்சரித்துவிட்டுக் கூட்டம் நடக்கவிருந்த இடத்தை நோக்கி விரைந்தார்.

"அதைப் பத்தியெல்லாம் நீ கவலைப் படாதே, வாத்தியாரே! நான் கவனிச்சுக்கறேன்" என்று அலட்சியமாகக் கூறிச் சிரித்தவாறு சபேசனிடம் வந்தான் நச்சி. சற்றுமுன் வரை காலியாயிருந்த அவனது சட்டை ஜேபியில் இப்போது ஓர் ஐந்து ரூபாய் நோட்டு மடிந்து கிடப்பது நன்றாகத் தெரிந்தது. "இன்னா, பிரதர்! எப்படி இருக்குது பார்த்தியா இந்தப் பீச்சு? இந்நேரத்திலே இங்கே வந்து சும்மா ஒரு ரவுண்ட் அடிச்சா போதும்; உலகத்திலே இருக்கிற அத்தனை புஸ்தகங்களையும் படிச்ச மாதிரி ஆகிப்பிடும்! இன்னா, நான் சொல்றது சரிதானே?"

நீர் நிறைந்த தன் கண்களை அவசரமாகத் துடைத்து விட்டுக்கொண்டு எழுந்தான் சபேசன்.

அதே சமயம், "தோழர்களே.... தோழிகளே,..... வணக்கம்...."— பொதுக்கூட்ட மேடைப் பந்தலில் பொருத்தப் பெற்றிருந்த ஒலிபெருக்கி இவ்வாறு அலறியது. (தொடரும்)









பாலோ, பால்!

சென்னை சர்க்கார் பால் விநியோகம் செய்யும் ''கியாஸ்க்'' என்னும் நகரக் கொட்டகைகளுக்குப் போனால் பல சுவையான சம்பாஷணைகள் காதில் விழும்.

''சர்க்காரு பால் சப்ளை பண்ண ஆரம்பிச்சுட்டானே, இனி மேல் நிரந்தரமாக நாம் கேட்ட பால் கிடைக்கும் என்று நினைச்சுப் பத்து வருஷங்களாகத் தண்ணிப் பாலோ, நல்ல பாலோ ஊற்றிக் கொண்டிருந்தவனை நிறுத்தியாச்சு.... இவர்களும் பால் சரியாக சப்ளை பண்ண மாட்டேங்கிறார்கள்.....'' என்பார் ஓர் அம்மணி.

''என்னமோ அம்மா! பாட்டில் பாலை விநியோகம் செய்யும் பையன்களால்தான் பால் தண்ணியாகப் போகிறது என்கிறார்கள். இப்போ நேரே இங்கே வந்து வாங்குகிறோம். அப்பக்கூடப் பால் ஏனோ தண்ணியாகத்தான் இருக்கு!'' — இப்படி ஓர் அம்மையார் கூறுவார்.

''முன்னே யெல்லாம் பசும் பால் நிறையக் கிடைத்துக் கொண்டிருந்தது. இப்ப பசும்பாலுக்கும் பஞ்சம் வந்து விட்டது. நாலு நாட்களாகப் பசும் பால் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டு வரா....'' என்பார் மற்றொரு தாயார்.

இப்படிக் குறைப்படுபவர்கள் இன்று சென்னையில் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள்.

இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் இப்படிப் பால் வாங்குபவர்கள், பசு மாட்டுக்கும் பாலுக்கும் தொடர்பிருப்பதையே மறந்து, பாட்டில்களில் எப்படியோ பால் நிரம்பி விடுகிறது, அதை விநியோகிக்கிறார்கள் என்று சொல்லத் தலைப்பட்டார்களானால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நகரவாசிகள் நெல் எப்படி வருகிறது என்றால் நெல் காய்ச்சி மரத்திலிருந்து வருகிறது என்று சொல்வார்களாம். அதே போல், ''பால் எப்படிக் கிடைக்கிறது?'' என்றால், ''பாட்டில் கொடுக்கிறது'' என்று சொல்லும் காலம் வரலாம்.

சர்க்காரின் மாதவரம் பால் பண்ணையில் வெட்கை என்னும் நோய் (ரெண்டர் பெஸ்ட் — என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள்) பசு மாடுகளுக்கு ஏற்பட்டு நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்து விட்டன. இந்த நோயைக் கட்டுப்படுத்த என்னவெல்லாமோ முயற்சிகள் செய்து வருகிறார்கள். ஒன்றும் கணிசமான பலனை அளித்ததாகச் சொல்வதற்கில்லை.

திடீரென்று பசு மாட்டுக்குப் பேதியாகிறதாம். பிறகு இரத்தமாகப் போகிறதாம். வாயிலும் நுரை கக்குகிறதாம். மாட்டுக்கு உஷ்ணம் அதிகமாகி நல்ல ஜுரம் அடிக்கிறதாம். திடீரென்று உஷ்ணம் குறைந்து ஜன்னி காண்கிறதாம். மாட்டின் கால்கள் எல்லாம் உதறல் எடுக்கின்றன. சில மணி நேரத்தில் இறந்து விடுகிறது. இப்படி ஒரு நாளைக்குப் பத்து மாடுகள், பதினைந்து மாடுகள் வீதம் இறந்து வந்தால் அது ஒரு பண்ணைக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.






அந்தக் கார் எந்த இடத்தில் ஆக்சி-டெண்ட் ஆகிறதோ அந்த இடத்தில் ஒரு பானையைக் கவிழ்க்க வேகமாய்ப் போகிறார்!

மனிதர்களுக்கு அம்மை நோய் காண்பது போல், இந்த வெட்கை நோய் மாடுகளுக்கு வரும் பயங்கர மான நோய் என்கிறார்கள். இது வேகமாகத் தொத்தக் கூடியது. இந்த நோய் சென்னையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வந்ததாம். இடைக்காலத்தில் இந்த வியாதியின் தொல்லை இல்லாமலிருந்தது. மீண்டும் இது எப்படியோ வந்திருக்கிறது.

இந்த நோய் மேனாட்டு மாடு களுக்கு வருவதில்லையாம். இந்த நோய் முக்கியமாக வெப்பம் அதிக மாக உள்ள நாடுகளில்தான் காணப் படுகிறதாம். அதனாலேயே இதற்குச் சரியான மருந்தில்லை என்கிறார்கள்.

இந்த மாதவரம் பால் பண்ணையில் ஒரு லைசென்சுதாரர் என்றால் எட்டு அல்லது பத்து மாடுகள் வைத்துக் கொண்டு, சர்க்காருக்குப் பால் கொடுப்பவர் என்று பொருள்.

மாதவரம் பால் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாள நண்பரை அணுகி, ''இப்ப எப்படி ஐயா, இருக்கிறது இந்த நோய்?'' என்று விசாரித்ததும், ''என்னங்க சொல்றது! லைசென்ஸ் லைசென்சாகச் செத் துப் போகிறதே!'' என்றார் அழாக் குறையாக.

அப்படியானால் மாடுகள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்பதை ஊகிக்கலாம். இந்தப் பேரிடியை அவர்களால் எப்படித் தாங்க முடியும்?

ஏற்கனவே சர்க்கார் பால் பண்ணை நஷ்டத்தில் இயங்கி வருகிறது. இப் படி ஒரு மாடு எழுநூறு ரூபாய் எண் ணூறு ரூபாய் வீதம் வாங்கிச் சர்க் காருக்குப் பால் கொடுத்து வந்த வர்கள் நஷ்டப்பட்டால் அவர்களுக்கு ஏதாகிலும் கணிசமான தொகை நஷ்டஈடு கொடுக்க வேண்டாமா? அந்தச் செலவு சர்க்கார் பால் பண் ணைக்குச் சேர்ந்தால் நஷ்டம் இன்னும் அதிகமாகத்தானே செய்யும்?

இப்படிச் சர்க்கார் பால் பண்ணை பலவித எதிர்பாராத செலவுகளுக் கும் நஷ்டங்களுக்கும் உள்ளாகி யிருக்கிறது.

காலையில் எழுந்ததும், காப்பியின் முகத்தில் விழிக்கப் பழகியுள்ள சென்னை நகர மக்களுக்குப் பால் கிடைக்கவில்லை என்றால் கூக்குரல் எழுப்புகிறார்கள். இந்நிலைமையில், சர்க்கார், இரண்டு பாட்டில் பால் கொடுக்க வேண்டிய வாடிக்கைக் காரர்களுக்கு ஒரு பாட்டில் பால் கொடுக்கவாவது ஏற்பாடு செய்து, விநியோகம் செய்து வருகிறார்களே என்று நன்றி செலுத்த வேண்டும்.

— எஸ். வி. எஸ்.



ஈக்கள் நமக்கு நண்பர்களா?

கீழே உள்ளதைக் கத்தரித்து வைத்துக் கொள்ளுங்கள். ஈக்களால் உண்டாகும் நோய்களிலிருந்தும் காத்துக்கொள்ள இது உதவும்.

நோயின் பெயர்	அதனைக் கண்டுகொள்ளும் விதம்	எடுத்துக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள்
டைபாய்ட்	கடுமையான தலைவலியும் அதிகக் காய்ச்சலும் இருக்கும். களைப்பும் சோர்வும் காணப்படும்	ஆண்டுக்கொரு முறை தவறாது டி.ஏ.பி. இன்ஜெக்ஷன் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், டைபாய்ட் நோய் பரவியிருந்தால் தண்ணீர், பால் ஆகியவற்றைக் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும். சோடா-கலர், ஐஸ்கிரீம், அதிகமாகக் கனிந்த பழங்கள், தூசுகள் படிந்துள்ள உணவுப்பொருட்கள், வெளியில் விற்கும் ஈக்கள் மொய்த்தவண்ணம் திறந்தபடியுள்ள தின்பண்டங்கள் ஆகியவற்றை விலக்க வேண்டும்.
காலரா	அடிவயிற்றில் கடுமையான வலியிருக்கும். அடிக்கடி வாந்தி, பேதியாகும். திடீரென்று வலிப்பு ஏற்படும்.	ஆண்டுக்கொருமுறை இன்ஜெக்ஷன் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஈக்களால் பரவும் பிற வியாதிகள் : சீதபேதி மற்றும் பேதி.

இல்ல விரோதிகள், ஆபத்து நிறைந்த பயங்கர நோய்களைப் பரப்பக்கூடிய பூச்சிகளாகும் ஈக்கள். ஈ, தனது சுற்றுப்புறங்களிலுள்ள அசுத்தங்களிலிருந்து கேடு தரும் கிருமிகளைத் தன் கால்களில் எடுத்துச் செல்கிறது. அது, நமது சமையலறையினுள் நுழைந்து, தான் சுமந்து வரும் கிருமிகளை உணவுப்பண்டங்களில் சேர்க்கின்றது. ஈக்கள் வராமல் தடுப்பது சுலபம். வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்கவும். இறுக்கமாக மூடியுள்ள டின்களில் குப்பை கூளங்களைக் கொட்டி, அவற்றை அவ்வப்போது அப்புறப்படுத்தவும். எல்லா உணவுப் பொருட்களையும் மூடியே வைத்திருக்கவும். உங்கள் கண்களிற் படும் ஒவ்வொரு ஈயையும் இரக்கமின்றிக் கொன்றுவிடவும்.

முதல் அறிகுறி தோன்றிய உடனேயே மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள்

வாழ்க்கை ஒப்பற்றது.

அதனைக் காப்பீர் ஆயுள் இன்சூரன்சு மூலம்.





கேரள சர்க்கார்
'இருநூறு போலீஸ்
காரர்கள் தேவை'
என்று விளம்பரம்
செய்திருந்தார்கள்.
அந்த வேலைக்கு,
கோட்டயம்
கலெக்டர்
காரியாலயத்தின்
முன்பு குழுமியிருந்த
இளைஞர்கள்
கூட்டத்தின் ஒரு
பகுதியைத்தான்
பார்க்கிறீர்கள்.
சுதந்திரம் வந்து
பதினேழு
ஆண்டுகள் ஆகியும்
நாட்டில்
வேலையில்லாத்
திண்டாட்டம்
எவ்வளவு
கடுமையாக
இருக்கிறது
என்பதைக் காட்ட
இந்தப் படமே
போதுமல்லவா?

படம்
உதவியவர்கள்:
மலையாள மனோரமா



பழனி

பழனிப்பஞ்சாமிர்தம் மிகவும் பிரசித்தமானது. இப்படம் ''பழனி''யும் ஒரு பஞ்சாமிர்தம்தான். ஆனால் பழனிப் பஞ்சாமிர்தத்தின் ஈடு இணையற்ற சுவையை இதில் எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான் கிடைக்கும்.

மண்ணை நம்பிப் பயிர்த்தொழில் செய்து வாழும் நான்கு சகோதரர்களில் மூத்தவன்தான் பழனி. சகோதரர்களின் அமைதியான வாழ்க்கையில் வில்லனாகக் குறுக்கிடுகிறான் பண்ணை முதலாளி. போதாக்குறைக்கு, சகோதரர்களில் இரண்டாமவனின் மனைவி தன் கணவனுடன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து விடுகிறாள். ஒற்றுமையாயிருந்த குடும்பம் சீர்குலைகிறது. சகோதரர்களில் ஒருவன் பாம்பு கடித்து இறக்கிறான். மூத்தவனான பழனியை விட்டு விட்டு, பட்டணத்துக்குச் செல்கின்றனர் மற்ற இரு சகோதரர்களும். — கடைசியில், கிராமத்துக்கே திரும்பி விவசாயம் செய்கின்றனர். ''மக்களைப் பெற்ற மகராசி'', ''பாகப் பிரிவினை'', ''படிக்காத மேதை'' ஆகிய படங்களின் அவியல் ''பழனி''.

சிவாஜி கணேசன் பட்டிக்காட்டு மனிதனாக, சூதுவாது தெரியாதவனாக, ரொம்பவும் நல்லவனாக வருகிறார். அருமையாக நடிக்கிறார். பண்ணையாராக நடிக்கும் டி. எஸ். பாலையாவின் நடிப்பு தத்ரூபமாயிருக்கிறது. பட்டிக்காட்டுப் பெண் தேவிகாவும், படித்த பெண் புஷ்பலதாவும் படத்துக்குக் கவர்ச்சியூட்டுகின்றனர். ஆனால் புதுப் படம் பார்க்கிற மாதிரியே இல்லையே! ✿



தி விஸிட்

சர்வதேச திரைப்பட விழாவில் பல படங்களைப் பார்த்திருந்தாலும் ஒன்றிரண்டு நினைவை விட்டகலாது. அந்த வகையில் மறக்க முடியாத படங்களுள் ஒன்று 'தி விஸிட்'.

நியாயமற்ற முறையில் அவமானத்துக்குள்ளாகி ஒரு சிறிய ஊரிலிருந்து வெளியேறிச் சென்ற மங்கை பிரபலமடைந்து பெரிய பணக்காரியாகவும் ஆகிவிடுகிறாள். எனினும், தன்னை அவமானத்துக்குள்ளாக்கிய மனிதனைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் மாறவில்லை. சொந்த ஊருக்கு விஜயம் செய்கிறாள்.

பழி வாங்கும் படலம்தான் என்றாலும் இப்படியெல்லாம் எங்கேயாவது நடக்குமா என்று கேட்க இடமில்லாமல் தர்க்க ரீதியில் படிப்படியாக உருவாகி வரும் நிகழ்ச்சிகள் நம்பும்படியாக இருப்பது மிகப் பெரிய சாதனை. இத்தனைக்கும் தன் கோபத்துக்குள்ளானவன் மீது அவள் ஒரு துரும்பையும் எடுத்து வீசவில்லை. மாறாக, அவனிடம் ஆதி நாட்களில் தான் கொண்ட காதலால் கட்டுண்டு இன்னமும் அவள் தைப்பட்டுக் கொண்டல்லவோ இருக்கிறாள்! ஆனால் ஊராரே அவளுக்காகப் பழி வாங்க முன் வந்து விடுகிறார்கள். மரண தண்டனை இனி யாருக்குமே விதிப்பதில்லை என்ற சட்டத்தையே மாற்றியமைத்து அவனைத் தூக்கிலிடவும் தயாராகி விடுகிறார்கள். இத்தனை அழகாகத் தன் எண்ணம் நிறைவேறிய பிறகு அவள் அவனை மன்னித்து விடுவதன் மூலமே எப்படிப்பட்ட கொடிய தண்டனையைக் கொடுத்து விடுகிறாள்!

இன்கிரிட் பெர்க்மனும் ஆன்தனி குவின்னும் தங்களையேதான் மிஞ்சி விட்டார்கள் நடிப்புக் கலையிலே! ✿



அமெரிக்கா அமெரிக்கா

சர்வதேச திரைப்பட விழா சென்னையில் திமிலோகப்பட்டது. உயர்ந்த படங்கள் என்பதால் பார்க்க வந்த பலருடன் வரிச் சலுகைகள் காரணமாய் டிக்கெட்டுகள் மலிவாகக் கிடைக்கின்றன என்பதாலும் சென்ஸார் செய்யப்படாத படங்கள் என்பதாலும் பலர் டிக்கெட்டுகளைப் பெற 'க்யூ'வில் நின்றார்கள். அவ்விதமாக இரவு ஒன்பதரை மணி ஆட்டத்துக்கு வந்து விட்டுப் படம் 'போர்' அடிக்கிறது என்று சலித்துக் கொண்டோரும், கொட்டாவியும் குறட்டையும் விட்டோரும்கூட உண்டு!

ஆம், கிளியோபாட்ராவை ரசிக்கும் கூட்டம் 'அமெரிக்கா அமெரிக்கா'வை அத்தனை ஆவலுடன் பார்த்து இன்புறுதுதான்.

எப்படியாவது கப்பலேறி அமெரிக்காவைச் சென்றடைந்து விட வேண்டும் என்று துடிக்கும் ஒரு வாலிபனின் கதைதான் இது. 'அமெரிக்கா அமெரிக்கா' என்று அவன் உள்ளம் ஒவ்வொரு விநாடியும் ஜபிப்பதையே படத்தின் தலைப்பாக்கி விட்டார்கள்.

அமெரிக்காவிலேயே தலைசிறந்து விளங்கும் டைரக்டர்களுள் ஒருவர் எனப் போற்றப்படும் எலியா கஸானின் உன்னதப் படைப்பு 'அமெரிக்கா அமெரிக்கா!' படத்தில் விநாடிக்கு விநாடி உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன. ஆனால் ஒரு காட்சி கூடச் செயற்கையாகத் தோன்றாமல் இயற்கையாக அமைந்திருப்பதைக் காணப் பிரமிப்பு ஏற்படுகிறது. ✿



காம்பெராலியா

சர்வதேசத் திரைப்படக் காட்சியிலே முதற் பரிசு பெற்ற சிங்களப் படம் இது. வாழ்க்கைக்கு ஒவ்வாத பல படக்காட்சிகளைப் பார்த்துப் பழகியவர்களுக்கு வாழ்க்கையோடு இயைந்து செல்லும் இந்தப் படம் மனத்துக்குப் பெரு நிறைவை அளிக்கும். நடிகர்கள் எத்தகைய 'மேக்கப்'பும் செய்து கொள்ளாமலே இயல்பான முறையில் தோன்றி நம் கருத்தைக் கவருகிறார்கள்.

ஓர் இளம் பெண், தான் காதலித்த உபாத்தியாயரைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாமல், தனது சமூக மரபை ஏற்று வேறு ஒருவனை மணந்து கொள்ளுகிறாள். பிறகு அவள் தன் காதலன் கரம் பற்றும் காட்சியைக் கண்டு எழும் நாம் ஒரு கலியாணம் செய்து வைத்த மகிழ்ச்சியைப் பெறுகிறோம். புண்ய ஹீன்நியா, காமினி பொன்ஸேகா, ஹென்றி ஜயசேனா, குணவர்த்தனா ஆகிய நடிகர்கள் நடிப்பாக நடித்துக் காட்டாமல், வாழ்வாக வாழ்ந்து காட்டிய இப்படத்தின் டைரக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பெரீஸின் திறமையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். சிங்களத்தில் திரைக் கலை இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. ஆனால் ஆண்டன் விக்ரமசிங்கே தயாரித்துள்ள இந்தப் படத்தின் மூலம் விளையும் பயிர் முளையிலேயே தெரிந்து விட்டது. பாரதத்தில் நடக்கும் சர்வதேச திரைப்பட விழா அதன் பெருமையைப் பாருக்குப் பறைசாற்றி விட்டது.



திரைப்பட விழாவில் முதற் பரிசுப் படம்

உன்னைப் போல் ஒருவன்

[ஸ்ரீ சத்யஜித் ரேயுடன் ஒரு கற்பனை உரையாடல்]

''உன்னைப் போல் ஒருவன்' — படம் எடுத்திருக்கிறானே, பார்த்தாயா?''

''என்னைப் போல் ஒருவனா? படம் எடுத்திருக்கிறானா? என்ன படம் எடுத்திருக்கிறான்?''

''என்ன அப்படி அலட்சியமாகக் கேட்டு விட்டாய்? 'உன்னைப் போல் ஒருவன்' படம் எடுத்திருக்கிறான். திரைப்பட அனுபவமில்லாத புது முகங்களைப் போட்டுக் குறைந்த செலவில் எடுத்திருக்கிறான்!''

''அப்படியா? நல்ல வேலை! அதிகப் பணம் செலவிட்டு மாட்டிக் கொள்ளவில்லை அல்லவா?''

''நீ ஓர் ஓவியக் கலைஞன். அவன் ஓர் எழுத்தாளன்.''

''பேஷ்! அப்படித்தான் எழுத்தாளன் முன்னுக்கு வர வேண்டும். கதை....?''

''யதார்த்தவாதக் கதைதான்!''



''அதற்கும் ஓர் ஆதரிசம் வேண்டும் அல்லவா? 'ரியலிஸம், ரியலிஸம்' என்று கூறிக் கொண்டு 'ஐடியலிஸ'த்தை விட்டு விடக் கூடாது, பார்!''

''உன்னைத்தான் ஆதரிசமாகக் கொண்டிருக்கிறான்! கீழ்த்தர வகுப்பினரது வாழ்க்கையை அப்பட்டமாகப் படமெடுத்திருக்கிறான்; திரைப்படமாகப் பிடிக்கவில்லை....!''

''நானும் அப்படித்தானே படம் எடுக்கிறேன்! அது மட்டும் உனக்குப் பிடிக்கிறதோ?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டாய்? படம் எடுக்கும் கலை உனக்குக் கைவந்த கலை.''

''அவனுக்கு?''


''கைவர வேண்டிய கலை!''

''ஏகலைவனென ஒரு முனைப்போடு ஈடுபட்டால், வெற்றி தானாகக் கிட்டுகிறது!''

''சரியாகச் சொன்னாய்! இரு ஜயகாந்தனுக்கு அந்த வெற்றி விரைவிலேயே கிட்ட வேண்டும். இதுவே என் ஆசை!''

''சரி, படு, ஆசைப்படு!''







பிரமிட்டுகள்

மனிதன் மனம் வைத்தால் முடியாத காரியம் இல்லை. தமிழகத்தின் வானளாவ உயர்ந்து நிற்கும் கோயில் கோபுரங்களையும் எகிப்திய பிரமிட்டுகளையும் உருவாக்கிய அதே உடல் உழைப்புத்தான் மற்றுமொரு மகத்தான திட்டத்தையும் நிறைவேற்றி யிருக்கிறது.

ஜோக் அருவிகளுக்குச் சில மைல்கள் முன்னதாகக் கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள சராவதி நீர் மின்சாரத் திட்டம் ஆண்களும் பெண்களுமான நாற்பதினாயிரம் மக்களின் சலியாத சரீர உழைப்பின் பலன். இரண்டு மாபெரும் அணைகளை எழுப்பி, தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நீர் மின் நிலையமாக இதனைப் பொறி இயல் நிபுணர்கள் விளங்கச் செய்திருக்கிறார்கள். அமெரிக்க மக்கள், அரசாங்கத்தின் உதவியும் கிட்டி யிருக்கிறது.







பிரமிக்கின்றன

பி. எல். 480 திட்டத்தின் கீழ் நமக்கு அனுப்பி வைக்கும் உணவு தானியங்களுக்கு டாலர்களைக் கோராமல் ரூபாய்களாகவே பெற்றுக் கொண்டு நமக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதுடன் அந்த ரூபாய்களை மீண்டும் நம் நாட்டின் அபிவிருத்திக்கே பயன்படுத்துகிறது அமெரிக்கா. இவ்வகையில் 34.5 கோடி ரூபாய் இதுவரை சராவதி திட்டத்துக்கு மட்டுமே கிடைத்துள்ளது. இதைத் தவிர மின் உற்பத்தி இயந்திரங்களைத் தருவிப்பதற்கான அன்னியச் செலாவணிக் கடன்களும் கிடைத்துள்ளன.

சென்ற மாத இறுதியில் இந்தத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்தார் பாரதப் பிரதமர். அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸ் அருகிலிருந்தார்.

சராவதி திட்டத்தால் மைசூர் ராஜ்யம் விவசாயம், தொழில் வளம் இவற்றில் மேலும் சிறந்தோங்கிட வாழ்த்துவோம்.





கயல் விழி

அகிலன்

> "மதுரையும் அரசுங்கொண்டு
> ஜயஸ்தம்பம் நட்டு,
> மதுரையும் அரசும் நாடும்
> பாண்டியற் களித்தருளி,
> மெய்ம் மலர்ந்த வீரக்கொடியுடன்
> தியாகக் கொடி எடுத்த
> செம்பொன் வீர சிங்காதனத்துக்
> குலோத்துங்க சோழதேவர்..."
>
> —மூன்றாம் குலோத்துங்கர் மெய்க்கீர்த்தி

எட்டாம் அத்தியாயம்

புலி ஆணை போய் அகல...

ஊழிக் காலத்துக் கடல் அலைகள் போன்று சுந்தர பாண்டியனின் படைகள் கங்காபுரியை நோக்கிச் சீறி வரும் செய்தி, சோழ சாம்ராஜ்யத்துக் கடைசிப் பெருந் தலைவரான குலோத்துங்க சோழருக்கு, அவருடைய கடைசிக் காலத்தில் எட்டியது. முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டதாக எவனை நினைத்தாரோ, அவனே சீறும் புலியென, சாடும் மின்னலென, கோடை இடியெனக் குமுறிக்கொண்டு வருவதை அறிந்தார்.

உறந்தை நகரம் வீழ்ந்தவுடனேயே அந்தச் செய்தியோடு புரவிகளில் பறந்தோடி வந்தனர் வீரர்கள். அவர்கள் கங்காபுரிக்குள் நுழைவதற்கு முன்பாகவே தஞ்சைப் பெருநகரத்தின் வீழ்ச்சியும் தலைநகரத்துக்கு எட்டி விட்டது.

செய்தியைக் கேட்டவுடனேயே கங்கை கொண்ட சோழபுரம் அல்லோல கல்லோலப்பட்டு விட்டது. குடிமக்கள் தங்கள் வீடு வாசல்களையும் உடைமைகளையும் அப்படி அப்படியே விட்டு விட்டு வெளியேறி ஓடினார்கள். காடுகளில் ஒளிந்தவர்கள் பலர்; தோப்புத் துரவுகளில் அலைந்து திரிந்தவர்கள் பலர்; வயல் வரப்புக்களிடையிலும் புதர்களினூடேயும் பதுங்கியவர்கள் பலப் பலர்; மக்களிடம் நம்பிக்கையூட்டி அமைதியைக் காக்கும் ஆண்மை இராஜ ராஜனிடம் இல்லை. படைவீரர்களிடமும் அச்சம் புகத் தொடங்கியது.

பல தினங்களாகத் தந்தையைச் சென்று காணாதிருந்த இராஜராஜன் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நடு நடுங்க அவரது கட்டிலருகில் போய் நின்றான். மாதக் கணக்காக நோய்ப் படுக்கையில் கிடந்தவர், எழுந்து நடமாடவும் சக்தியின்றி இருந்தவர், அப்போது வீராவேசம் கொண்டவர்போல் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.


பசித்திருக்கும் புலி பசுங் கன்றைப் பார்க்கும் பார்வை இராஜராஜன் மேல் பதிந்தது. சுட்டு எரித்து விடுபவர் போல் அவன் அருகில் வரும்வரையில் பார்த்துக் கொண்டிருந்தார். சுற்றியிருந்த பணியாட்கள் ஒவ்வொருவராக அச்சத்தோடு வெளியேறினார்கள்.

எங்கிருந்துதான் அவருக்கு உடல் வலிமை வந்ததோ! திடீரென்று கட்டிலிருந்து தாவித் தமது குமாரன் மீது பாய்ந்தார். பளீர் பளீரென்று தமது கை ஓயுமட்டும் அவனது கன்னத்திலும் முகத்திலும் அறைந்தார். அப்படியும் அவரது ஆத்திரம் தீரவில்லை.

"அதிகாரத்துக்கு ஆசைப்பட்டாயே, அதைக் கட்டிக் காக்க முடிந்ததா உன்னால்? விஜயாலய சோழன் ஏற்படுத்திய சாம்ராஜ்யமடா இது! இராஜ இராஜ சோழனின் பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கிறாயே, அவனுடைய தகுதியில் நூற்றில் ஒரு பங்கு உனக்கு வேண்டாமா? கங்கையும், கடாரமும், ஈழமும், பழந்தீவு பன்னீராயிரமும் புலிக்கொடி நாட்டிய வேங்கையின் மைந்தன் இராஜேந்திர சோழனின் பரம்பரையில் வந்தவனடா நீ! வங்கத்தை அவன் வென்று வந்ததின் வெற்றிச் சின்னமடா இந்தக் கங்காபுரி!"

பிறகு அவர் தமக்குத் தாமே வெறி கொண்டவர்போல் தலையில் அடித்துக் கொண்டார். தேம்பித் தேம்பி அழுதார். புலம்பினார்.

"எல்லாமே என்னுடைய குற்றம்! என் குற்றம்!" என்று பழியைத் தம் மீதே சுமத்திக் கொண்டார். மேலும் அவர் குமுறினார்: "இந்திலேயே



வளைத்து வளர்க்க வேண்டிய உன்னைச் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டேன். எல்லாப் பொறுப்புக்களையும் கடமைகளையும் நானே சுமந்துகொண்டு உன்னை உன் போக்கில் விட்டு விட்டேன். ராமனுடைய காவியத்தை நான் இங்கு பாடச் செய்தேனே தவிர, அதன்படி உன்னை இங்கு நடக்கச் செய்யவில்லை. தந்தை சொல்லுக்காக அவன் காட்டுக்குப் போனான். நீயோ தந்தையிடமிருந்து நாடாளக் கற்றுக் கொள்ளாமல் காடாளப் போகிறாய்! ஆட்சி நெறி அறியாதவன், மக்கள் வாழ்க்கை அறியாதவன், படைகளை அடக்கி ஆளத் தெரியாதவன், அதிகாரிகளிடம் ஆணையிட்டு வேலை வாங்கிப் பழகாதவன்.... பாசத்தால் நான் தவறு செய்து விட்டேன்!''

இராஜ ராஜனுக்கு ஏதுமே பேசத் தோன்றவில்லை. ஏதாவது ஆலோசனைகள் கிடைக்கும் என்ற துடிப்பில் அங்கு வந்திருந்தான் அவன். அவரோ ஆத்திரப்பட்டு விட்டார்.

''படைத் தலைவர்கள் என்ன கூறுகிறார்கள்?'' என்று கேட்டார்.

''அவர்களுக்கும் நம்பிக்கையில்லை; எதிர்த்து நிற்பதற்கு அஞ்சுகிறார்கள்.''

''சே! இதைக் கூற நாணமில்லை, உனக்கு?'' என்று வெகுண்டார் குலோத்துங்கர்; ''தலைவன் எப்படியோ அப்படித்தானே படைத் தலைவர்கள்? படைத்தலைவர்கள் எப்படியோ அப்படித்தானே படை வீரர்கள்?''

''இரண்டு வழிகள்தான் புலப்படுகின்றன.....'' என்று இழுத்தான், இராஜ ராஜன்; ''ஒன்று, சரண் அடைந்துவிட வேண்டும்; அல்லது எதிர்த்து அழிய வேண்டும்.''


காறி உமிழ்ந்தார் குலோத்துங்க சோழர். மூன்றாவது வழியொன்று அவர் சிந்தனையில் மின்னலெனப் பளிச்சிட்டது. திடீரென்று அவர் முகத்தில் ஒளி பரவியது.

''எழுது, திருமந்திர ஓலையை!'' என்று கர்ஜித்தார்; ''நான் கூறுகிறேன், எழுது!''

பாரெக்ஸ் புகட்டும் பருவம்

உங்கள் கைக்குழந்தைக்கு ஏறக்குறைய நாலு மாதம் என்றால், பால் மட்டுமின்றி வேறுவகை உணவும் கொடுக்கத் தேவைப்படும். பாரெக்ஸ் புகட்டத் தொடங்குங்கள்: ஊட்டமளிக்கும் நன்செய் தானிய உணவு அது. வைட்டமின் D, கால்சியம் முதலியவை சேர்ந்த தயார்ப் பக்குவ உணவாகிய பாரெக்ஸ், பற்களையும் எலும்புகளையும் வலுவாக்கி, உறுதியான உடல் வளர்ச்சிக்கு உறுதி தருகிறது. தாயுள்ளம் நம்பும் பாரெக்ஸ், இளம் குழந்தைகள் பாலுக்கு அடுத்தபடி முதன்முதலாக உண்ண உன்னதமானது. வளர்ந்த குழந்தைகளுக்கும் உகந்ததே. இன்றே வாங்குங்கள் பாரெக்ஸ்.







பாரெக்ஸ்-ஒரு கிளாக்ஸோ தயாரிப்பு

இலவசம்: 'தி பாரெக்ஸ் கைடு' (ஆங்கிலம்): குழந்தைகளை ஊட்டி வளர்க்கும் முறைபற்றிய இந் நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 பைசா தபால் வில்லைகளை அனுப்பி எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்-1

எழுத்தாணியும் ஏடும் எடுத்துக் கொண்டு அமர்ந்தான் இராஜ ராஜன். அவர் கூறத் தொடங்கினர்:—

''சோழர் குலப் பாதுகாவலரான கோசல நாட்டுச் சக்கரவர்த்திகள் வல்லாள தேவருக்கும் அவருடைய திருக்குமாரரும் பாண்டிய யானைக்குச் சிங்கமுமான வீராதிவீரர் வீரநர சிம்மருக்கும் சோழ நாட்டுச் சக்கர வர்த்தி குலோத்துங்க சோழர் எழுதிக் கொள்வது. இப்போது பாண்டிய நாட்டு இளவரசன் சுந்தரபாண்டியன் உறையூரையும் தஞ்சையையும் தீயிட்டு அழித்து விட்டுக் கங்காபுரியை நெருங் கிக் கொண்டிருக்கிறான். வீரநரசிம்மர் இங்கு விஜயம் செய்தபோது பாண் டிய நாட்டுப் புலவனாக வந்திருந்தவனே சுந்தர பாண்டியன் என்பது அப்போதே தெரியாமல் போய் விட்டது. இந்த ஓலை அங்கு கிடைப்பதற்குள் கங்காபுரி யும் வீழ்ந்து விடக் கூடும் — ஆனால், இந்த வீழ்ச்சியைத் தற்காலத் தோல்வி யாகவே நான் கருதுகிறேன். சோழ சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க வேண் டியது அதன் பாதுகாவலரான வல்லாள தேவர் கடமை. பாண்டிய யானைகள் இரண்டையும் அழித்து ஒழித்து இராஜ ராஜனுக்குத் துணை நிற்க வேண்டியது வீரநரசிம்மர் பொறுப்பு. ஓலை கண்ட வுடன் வீரநரசிம்மர் தலைமையில் பெரும் படை இங்கு வந்து சேருமென்று எதிர்பார்க்கிறேன். வாழ்க, கோசல சாம்ராஜ்யம்! — வாழ்க சோழ சாம் ராஜ்யம்! — குலோத்துங்க சோழர் கூற இராஜ ராஜன் எழுதியது.''

ஓலையை முதலில் காஞ்சிக்கும், பிறகு அங்கிருந்து கோசல அதிகாரி யின் துணையோடு துவார சமுத்திரத் துக்கும் கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்தார் குலோத்துங்கர்.

செய்தியைக் கேட்ட விநாடியி லிருந்தே அவர் மீண்டும் எல்லா அதிகாரங்களையும் குமாரனிடமிருந்து பறித்து விட்டார். அவருடைய நோய் எப்படி மறைந்து ஒழிந்தது என்பது அவருக்கே வியப்பாக இருந்தது. இரு தயத்தில் புது ரத்தம் பாய்வதுபோன்ற ஓர் உணர்ச்சி.

''இந்தச் சாம்ராஜ்யத்தை என் தலையில் உள்ள சிந்தனையாலும் இரு தயத்தில் உள்ள உணர்வாலும் நான் கட்டிக் காத்தவன். என் தலை உள்ள வரையிலும் இருதயத் துடிப்பு நிற்கும் வரையிலும் நானே இதை ஆளப் போகிறேன்!'' என்று அவர் தம் குமாரனிடமே அறைகூவல் விட்டார்.

இராஜராஜனுக்கும் இப்போது அந்த உதவிதான் தேவையாக இருந் தது. இன்ப வாழ்வை அனுபவிப்பதற்கு மட்டிலுமே அரசுரிமை வேண்டு மெனப் போராடியவன் அவன். இப் போதோ நாடே பயங்கரமான சோத னைக்குள்ளாகித் தவித்தது. 'நாடாள் வது என்றால் இவ்வளவு துன்பம் உண்டா?' என்று முதன் முதலாக நடுங்கினான் அவன்.



''முரசறையச் சொல்!'' என்று முழங்கினர் சக்கரவர்த்தி. ''நான் நகரத்துக்குள் வலம் வந்துவிட்டுப் போர்ப் படைகளின் அணிகளைப் பார்வையிட வேண்டும்! முன்னதாகச் செய்தி அறிவித்து விட்டு, என் யானையை அலங்கரித்து நிறுத்தச் சொல்!''

இராஜ ராஜன் ஆணையை நிறை வேற்றுவதற்காக வெளியில் சென்றான். கைகளைத் தட்டி அரண்மனைப் பணி யாட்களை அழைத்தார். அவருடைய தோற்றத்தைக் காண்பதற்கே பயங் கரமாக இருந்தது அவர்களுக்கு.

''என்னுடைய ஆடை ஆபரணங்கள், முடி, உடைவாள் எல்லாவற்றையும் எடுத்து வாருங்கள். நொடிப் பொழுதில் நான் சித்தமாக நகரத்துக்குள் கிளம்ப வேண்டும். தாமதம் வேண்டாம்!''



சக்கரவர்த்திகளுக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டதோ என்றுகூட ஒரு பணியாள் நினைத்தான். என்றாலும், எல்லாக் கட்டளைகளுமே மளமளவென்று நிறைவேற்றப்பட்டன.

குலோத்துங்கரின் யானை அவரைக் கண்டவுடனேயே ஆனந்தக் கண்ணீர் விட்டுப் பிளிறியது. அதற்கு இருந்த பாசமும் நன்றியுங்கூடத் தமது மைந்தனுக்கு இல்லையே என்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. வழக்கம்போல் யானை தனது முழங்காலை மடித்துக் காட்டியது அவரிடம். வேங்கையென அதன் மீது பாய்ந்து ஏறும் வழக்கமுள்ளவர் அவர்.

அவர் தயங்கி நின்றார். யானையின் கண்ணீர் மிருதியானது. துதிக்கையால் அவரைத் தூக்கி மத்தகத்தில் வைத்துக் கொள்ள அதற்குத் தெரியாமல் இல்லை. அது தமக்கு இழுக்காகும் என்று அவர் கருதுவாரே !

மடித்த கால் மடித்தபடி நின்றது அது. அருகில் நின்ற வீரர் தலைவன் பக்கம் திரும்பினார். அவன் வந்து குனிந்து கொண்டு தரையில் அமர்ந்தான். முதலில் தம் வலது காலை அவன் தோளில் வைத்தார். அடுத்தாற்போல் யானையின் செவியைப் பற்றியவண்ணம் இடது பாதத்தை அவன் தலையில் வைத்தார். மெதுவாக அவன் எழுந்து நின்று அவர் ஏறிக் கொள்வதற்குத் துணை செய்தான்.

குலோத்துங்கரின் கரங்கள் நடுங்கின. அவர் கால்கள் நடுங்கின. அவருடைய கண்கள் இருண்டன. தட்டுத் தடுமாறி அம்பாரியின் மீது எப்படியோ போய் உட்கார்ந்தார் அவர். மேலே வெண்கொற்றக் குடையின் நிழல் இருந்தது. கவரி வீசும் பெண் ''ஓ!'' என்று திடுக்கிட்டுக் கூவினாள்.

குலோத்துங்க சோழரின் தலை ஒரு புறமாகச் சாய்ந்து விட்டது. எந்தத் தலைக்குள்ளே அவர் சாம்ராஜ்யத்தை வைத்துப் போற்றினாரோ, அது சரிந்து விட்டது. எந்த இதயத்தால் அவர் அதைப் பேணி வளர்த்தாரோ அதன் துடிப்பு நின்று விட்டது.

வீர வேங்கை வீர சுவர்க்கம் புகுந்து விட்டார். போர்க்களத்தில் வேல் முனை பாய்ந்து விட்டது போல் பட்டத்து யானை பயங்கரமாகப் பிளிறியது.

ஒன்பதாம் அத்தியாயம்

கயல் ஆணை கைவளர.....

''பொன்னி சூழ் நாட்டில்
புலி ஆணை போய் அகலக்
கன்னி சூழ் நாட்டில்
கயல் ஆணை கைவளர
வெஞ்சின இவுளியும்
வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையும்
செந்தழல் கொளுத்திக்
கூடமும் மாமதிலும்
கோபுரமும் ஆடரங்கும்
மாடமும் மாளிகையும்
மண்டபமும் பல இடித்துச்
செம்பியனைச் சினமிரியப்
பொருது சுரம் புக ஓட்டிப்
பைம்பொன் முடிபறித்துப்
பாணருக்குக் கொடுத்தருளி...''

—சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி

குலோத்துங்க சோழரின் வீரமரணம் இராஜ ராஜனிடம் கூட வீரத்தை ஊட்டி விட்டது. கோசல சாம்ராஜ்யத்துப் பெரும் படைகளுடன் வீர நரசிம்மன் வந்துவிடுவார் என்ற நம்பிக்கையை அவன் படைத் தலைவர்களிடம் பரப்பினான். மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தோல்வியையே கண்டறியாத சோழப் பெரும் படைக்கு ஊக்கம் பிறந்து விட்டது. தலைநகரத்தின் தற்காப்புக்காகக் கடைசிவரையில் போராடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டனர் வீரர்கள்.

எப்படியாவது கங்காபுரியைக் காத்து விட்டால், பிறகு வீர நரசிம்மனும், கோசலப் படைகளும் வந்த பின்னர் சாம்ராஜ்யத்தையே என்றும் போல் நிலை நாட்டி விடலாம்.

ரூ. 20,000 ரொக்கப் பரிசுகள்!

'கோலினஸ் புன்னகையின்'

ராஜா ராணி-போட்டி

56 பரிசுகள்!

ரூ. 2,500 கோலினஸ் புன்னகையின் ராஜாவுக்கு ● ரூ. 2,500 கோலினஸ் புன்னகையின் ராணிக்கு ● ரூ. 1,000 கோலினஸ் புன்னகையின் முடிசூடும் இளவரசுக்கு ● ரூ. 1,000 கோலினஸ் புன்னகையின் முடிசூடும் இளவரசிக்கு ● ரூ. 250 கோலினஸ் புன்னகையின் 26 இளவரசர்கள் ஒவ்வொருவருக்கும் ● ரூ. 250 கோலினஸ் புன்னகையின் 26 இளவரசிகள் ஒவ்வொருவருக்கும்

நுழைவுக் கட்டணமோ, வயது வரம்போ கிடையா!

உங்கள் வியாபாரிகளிடமிருந்து அச்சிட்ட நுழைவுக் கூப்பனைப் பெறவும். அதனைப் பூர்த்தி செய்து, "தி கிங் அண்ட் குவீன் ஆப் கோலினஸ் ஸ்மைல்ஸ்", த.பெ. எண். 13030, பம்பாய்-1 என்ற முகவரிக்கு அனுப்பவும். அத்துடன், உங்கள் புன்னகைபுரியும் முகத்துடன் கூடிய 'அன்மிடச்டு' புகைப்படம் ஒன்றையும் (குறைந்த பட்ச அளவு 3½" x 2½") அனுப்பவேண்டும். மற்றும், கோலினஸ் டெண்டல் கிரீமின் (சூபர் ஒயிட் அல்லது குளோரபில்) ஒரு 'ஜயண்ட்-சைஸ்' காலி காகிதப்பெட்டி அல்லது ஒரு 'கிங்-சைஸ்' காலிக் காகிதப்பெட்டி அல்லது இரண்டு 'லார்ஜ்-சைஸ்' காலிக் காகிதப்பெட்டிகளையும் இணைத்து அனுப்பவேண்டும். சிறந்த புன்னகைகள் பரிசுகள் பெறும். போட்டியின் முடிவுகள் இந்தப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

முடிவு தேதி: பிப்ரவரி 15, 1965

விரைவீர்! இன்றே!
இப்பொழுதே!
உங்கள் புன்னகை
பரிசு பெற ஒரு
வாய்ப்பு!

●

நுழைவுக் கூப்பனை
உங்கள் வியாபாரி
யிடமிருந்து இன்றே
கேட்டுப்பெறுங்கள்

களிப்பில் மலரும் புன்னகை... அது கோலினஸ் தரும் புன்னகை

ஆரா கோலினஸ்...



ASP/GM/A1 TAM

கங்காபுரியை முதன் முதலில் உரு வாக்கிய கங்கை கொண்ட சோழர் அதைப் பாதுகாப்பு மிக்க கட்டுக் காவலுடன்தான் அமைத்திருந்தார்; புறமதிலை அடுத்த அகழிபோல் சோழ கங்கப் பேரேரி நீர் நிறைந்து நகரத் தின் ஒரு பாதியைக் காத்து நின்றது. புற மதிலுக்குள்ளே பயங்கரமான கருவேலங்காடு. முட்புதர் நிறைந்த காட்டு அரண் அது.

மறுபாதியைக் காப்பதில் தான் வீரர்கள் கண்ணும் கருத்துமாக இருந் தனர். நகர வாயில்களை மூடிவிட்டு நீண்ட நாள் முற்றுகையைத் தாங்கும் வசதிகளைச் செய்து கொண்டு கோசல நாட்டின் படைகள் வரும் வரையில் உள்ளிருந்தே போராடுவது என்பது சோழநாட்டாரின் திட்டம்.

நகர வாயிலுக்கு முன்பாகத் தொலை தூரத்தில் சுந்தர பாண்டியனின் பாசறைகள் தெரிந்தன. அங்குதான் அவனும் இருக்க வேண்டும் என்று நம்பினான் இராஜ ராஜன்.

பின்புறம் சோழ கங்கத்தை அடுத் திருந்த கிராமத்து மக்கள் முன்ன மேயே அதைத் துறந்து விட்டு ஓடி ஒளிந்தார்கள். அந்தக் கிராமத்தில் வந்து பாதிப் படையினரோடு குடி புகுந்தான் சுந்தர பாண்டியன்.

பொழுது புலர்ந்தவுடன் படை நடத்திச் செல்வது என்று திட்டம் வகுத்திருந்ததால், கிழக்கு வெளுப்ப தற்கு முன்பே அவன் தன்னைச் சித்தப் படுத்திக் கொண்டிருந்தான். கயல்விழி யும் உய்யவந்தாளும் அவனுடைய அந் தரங்கப் பணிப்பெண்களாக மாறி அவ னுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

''கயல்விழி! உன்னுடைய வேண்டு கோள் எனக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது. என்றாலும் அதை நான் பெருமையுடன் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான்.

''உறந்தைப் பாசறையில் நான் கேட்டதைச் சொல்கிறீர்களா?''

''ஆமாம்; சோழ மாதேவியின் ஆச னத்தில் நீ அமர்ந்திருக்க, இராஜராஜ னின் பட்டத்தரசி உனக்குப் பணி விடைகள் செய்ய வேண்டுமென்றாய். அவள் உனக்குப் பணிவிடைகள் செய் வதை இராஜராஜன் அருகில் இருந்து பார்க்கவும் வேண்டும் என்றாய். பாவம், அவளிடம் உனக்கு என்ன வஞ்சம்?''

''அவளை நான் கண்டதுமில்லை, அவ ளிடம் எனக்கு எவ்விதமான வஞ்சமு மில்லை'' என்றாள் கயல்விழி; ''தங்களை விட அவனுடைய நிலைக்காக நான் மிகவும் இரங்குகிறேன்.''

''பிறகு?''

''பெண்களின் விருப்பு வெறுப்புக் களும் இன்ப துன்பங்களும் தங்களால் புரிந்துகொள்ள முடியாதவைகளாக இருக்கலாம். ஏனோ, அப்படி எனக் கோர் ஆசை தோன்றியது. பாண்டிய நாட்டுப் பெண் குலத்துக்குத் தீங் கிழைத்தவனல்லவா அவன்? அதை அவனுக்கு உணர்த்த வேண்டாமா?''

''இது என்ன வஞ்சமோ?'' என்று தனக்குள் கூறிக் கொண்டு, சரேலென்று வெளியில் வந்தான் சுந்தர பாண்டியன்.

பொழுது புலர்ந்தபோது சோழ கங்கத்தில் பாதி நீர்கூட இல்லை! இரவோடு இரவாக அதன் கரை ஒன்றைத் தகர்த்து விட்டு விட்டது பாண்டியப் படை. வேறொரு புறம் மதிலுக்குள்ளும் வழி செய்து தன் னிரை நகரத்துக்குள் புகவிட்டுவிட்டது. மதிலைத் தகர்க்கும் வேலையில் ஒரு பாதியைச் சோழ கங்கப் பெருவெள் ளமே நிறைவேற்றிக் கொண்டிருந்த தால் அதை அடுத்துப் படை வெள்ளத் தோடு நகரத்துக்குள் பாய்ந்து விட்டான் சுந்தர பாண்டியன்.

கருவேலங்காட்டை அழித்துப் பாதைகள் வகுத்துக் கொடுத்தனர் படைப் பகுதியினரான காடு வெட்டிகள். பாய்ந்தன, பாய்ந்தன, பாய்ந்தன படைகள்!

மதுராந்தகம் செய்வதையே தங்கள் குலத் தொழிலாகக் கொண்டிருந்தவர் களின் தலைநகரம், தங்கள் குலத் துதித்த ஆண்களுக்கு மதுராந்தகன் என்றும், பெண்களுக்கு மதுராந்தகி என்றும் பெயரிட்டவர்களின் தலைநகரம், தங்களது சிற்றூர்களுக்கு மதுராந்தகம் என்று பெயரிட்டவர்களின் தலைநகரம், அந்த மதுரையில் பிறந்து வளர்ந்த ஒருவனுடைய சிந்தனைக் கூர்மை கொண்ட வாள் முனையால் படாத பாடு படத் தொடங்கி விட்டது.

கங்காபுரியின் தரை நிலம் பாண்டி நாட்டு யானைப் படைகளால் அதிர்ச்சி காண, அதன் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் தாமே சரிந்து வீழ்ந்தன. சோழ கங்கப் பெரு வெள்ளம் வேறு பல திசைகளிலிருந்தும் நகரத்துக்குள் அலை மோதிக் கொண்டு வந்தது.

இடிந்தன மதில்கள்; எரிந்தன மண்ட பங்கள்; எழுந்தது புகை மூட்டம். கடலும் கடலும் புயல்பட்டுச் சாடு வது போல் சோழப் படையும் பாண் டியப் படையும் பொருதிக் கொண்டன.

கங்காபுரியின் பிரளயத் தலைவனாகவே மாறிப்போனான் சுந்தரபாண்டியன்.

'உலகில் உள்ள மலைகளெல்லாம் யானைகளாகிப் போர்க்களத்துக்கு வந்து விட்டனவோ! புயற் காற்றனைத்தும் புரவிகளாக மாறி விட்டனவோ! வானத்து மேகங்களனைத்தும் தேர்களாக உருக் கொண்டு விட்டனவோ! கடல்கள் அனைத்துமே காலாட் படை வீரர்களாகி அலைமோதுகின்றனவோ!' என்று சோழர்கள் நடத்தின கலிங்கத்துப் போரை ஜயங்கொண்டார் பாடுகிறாரல்லவா? அதையே அவர் பாடிய நாட்டுக்கே திருப்பிப் பாடும்படி செய்து விட்டான் இளம் பாண்டியன்.

நூற்றுக் கணக்கான போர்க்களங்களைக் கண்ட ஆயிரமாயிரம் சோழ நாட்டு யானைகளின் சடலங்கள் தெருக்கள்தோறும் சரிந்து கிடந்தன. மதம் பொழியும் மத்தகங்களைக் கொண்ட ஏலமலைக் காட்டு யானைகளும் இடையிடையே காணப்பட்டன.

சிதைந்துபோன தேர்கள், வீழ்ந்து பட்ட புலிக்கொடிகள், முண்டங்களாகிவிட்ட குதிரைகள், மாண்டு மடிந்த வீரர்கள் ஆயிரமாயிரம்! நிணச் சேற்றில் துண்டிக்கப்பட்ட அவயவங்களும் துடித்த உடல்களும் காணுவதற்கே பயங்கரமான காட்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. கங்காபுரிக்குள் கதிரொளி புகவிடாமல் கழுகுக் கூட்டம் வானத்தில் வட்டமிடத் தொடங்கியது.

வீரருக்கெல்லாம் தலைவனான மாவீரன் கங்கை கொண்ட சோழன் உருவாக்கிய தலைநகரத்தை, வேங்கையின் மைந்தனும் அந்த வெற்றி வீரனின் கருவில் திருவாகி வளர்ந்த சாம்ராஜ்யத்தை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பதரான மூன்றும் இராஜராஜன், முதல் மாறவர்மனும் சுந்தர பாண்டியன் முன்பு நாணித் தலைகவிழ்ந்து நின்றான்.

மதுரைப் போரில் பெண்ணாசைப் பட்டு இழிசெயல்கள் புரிந்த அந்தக் கோழை இப்போது தன்னுரிமைப் பெண்டிரையும் உற்றார் உறவினரையும் கூடக் காக்க வழியற்றவனாக நின்றான்.

அரண்மனைக்குள்ளே அரசியாரின் ஆசனத்தில் வெற்றித் திருமகளாம் கயல்விழி செருக்கோடு வந்து அமர்ந்தாள். கொற்றவைத் தேவியும் திருமகளும் ஒன்று கலந்த திருக்கோலத்தில் அவள் வந்து ஆசனத்திருந்தாள். அவளுக்கு முன்னே அவளை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியவனாக வந்து நின்றான் இராஜராஜன்.

''அரசே! உம்முடைய தேவியாரை இங்கே சற்று அழைத்து வரச்செய்யும்!'' என்று கட்டளையிட்டாள் கயல்விழி.

அழுத கண்ணீர் ஆறு பெருக்க, தொழுது வந்து கயல்விழியின் முன்பு கைகூப்பி நின்றாள் இராஜராஜனின் மனைவி.

''கவரி வீசலாமே!'' என்று அவளிடம் கூறிவிட்டுத் தன் கண்களை இறுக மூடிக்கொண்டு அங்கயற்கண்ணி அம்மையைத் தியானித்தாள் கயல்விழி. 'அம்மையே! இவ்வளவும் எனக்கல்ல; உனக்குத்தான்!' என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

இராஜராஜனின் இதயத்தில் ஆயிரம் ஆயிரம் வேல்கள் பாய்ந்தாலும் அவன் இப்படிப் பதறியிருக்க மாட்டான். அவன் கண்களுக்கு முன்னால் சோழ சாம்ராஜ்யத்து அரசனின் மனைவி கூத்தாடும் பாணர் குல மங்கைக்குச் சாமரம் வீசி நின்றாள். (தொடரும்)

ஊஞ்சல்



ஏ. எஸ். ராகவன்

வழக்கமாக அமருகிற பாறைதான். அதென்னவோ விக்கிரமாதித்த சிம்மாசனம் போல் அதன் மீது உட்கார்ந்ததுமே ஆயிரம் கனவுகள், ஆயிரம் கவிதைகள் மலர்ந்துவிடும். எதிரே நீலக் கடலும் உயரே நீல வானமும் அவனுடன் சங்கேத மொழிகளில் சம்பாஷிப்பது போலிருக்கும்.

ஆனால் இன்று கனவுகள் இல்லை; கவிதைகளும் இல்லை. பாறை மீது மோதும் கடல் அவனுக்கு அனுதாபம் தெரிவித்தது. நீல வானக் களத்துமேட்டில் பஞ்சுப் பொதிகளாகக் கிடந்த மேகங்கள் மெல்ல அசைந்து பரிதாபமாக அவனைப் பார்த்தன.

ஆறு மாதங்களுக்குப் பிறகு இப்படி ஒரு மாற்றம். நினைத்தாலே வேடிக்கையாக இருந்தது அவனுக்கு. எங்கேயாவது விடுபட்டு ஓடிவிடலாமா என்று தோன்றிற்று. ஆனால் எங்கே போவது, எதற்காக, எந்த முடிவை எதிர்நோக்கி? அப்படிப் போனாலும் விடுபட முடியுமா? இது வரை 'விடுபடுவது' என்பது அவனைப் பொறுத்தவரை ஒரு துன்பத்திலிருந்து மற்றொரு துன்பத்துக்குக் கால் மாற்றுகிற விவகாரமாக இருந்திருக்கிறதே தவிர, பூரண நிம்மதியை அவன் கண்டதே இல்லை. இப்போதும் அது கிட்டும் என்று தோன்றவில்லை.

சே! ஏன் இப்படி ?

நீலக் கடலையே பார்த்தான் வாசு. அது பொங்கிப் பெருகிப் புரண்டு வந்து பாறையில் மோதுவதும் திரும்புவதுமாய் யுகாந்திரமான போராட்டத்தை இடைவிடாது நடத்திக் கொண்டிருந்தது. திடீரென்று மின்னலைப்போல் ஓர் எண்ணம் நெஞ்சிலே பளிச்சென்று வெட்டியது. ஆம், விடுபடுவதற்கு ஒரே ஒரு வழி — மிக நல்ல வழி—இதோ இருக்கிறது. வாய்ப்பாக இருக்கும் இந்தப் பாறையின் உயரத்திலிருந்து கடலுக்குள் குதித்து விட்டால் இந்த வேதனைகளுக்கெல்லாம் மாற்றாக விடுதலை கைமேல் கிடைத்து விடும். அப்புறம் அவன் ஆகாயத்துக்கு மேல் உலகத்துக்கு — போய்ச் சேரலாம்.

என்ன வேடிக்கை இது!

கீழே நீலக் கடலில் அழிவு வாய்த்ததும் மேலே நீல வானத்துக்கு அவன் போய்ச் சேருவான்! அழிவிலே மோட்ச தத்துவமா?

விரக்தியிலிருந்து வியப்பும், வியப்பிலிருந்து பரபரப்பும், பரபரப்பிலிருந்து ஏதோ ஒரு தெளிவும் மெல்ல மெல்ல அவனைப் பற்றுவது போலிருந்தது.

வாசு எழுந்தான். வாஸ்தவமாகவே இது விக்கிரமாதித்த சிம்மாசனம்தான். காடாறு மாதம், வீடாறு மாதம் என்பார்களே, அதுபோல் இப்போது ஆறு மாதங்களுக்குப் பிறகு காடாறு மாதம் பருவம் தொடங்கியிருக்கிறது.

வீட்டுக்குள் நுழைந்ததும் மாடிப்படியின் வாயிலில் செருப்புக்களை உதறி எறிந்து விட்டு ஆளோடிப் பக்கமாக நடந்து உள்ளே சென்றான். ஆளோடியின் பக்கவாட்டுத் திண்ணையில் படுத்திருந்த அத்தை, ''என்னடாப்பா இவ்வளவு நேரம்?'' என்றாள். இரண்டு ஆண்டுகளாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள் அவள். கண்ணும் காதும் என்றைக்குமே அவளுக்குக் கூர்மை.

''நேரம் ஆகி விட்டது'' என்றான் வாசு.

''சரி, சரி. போய்ச் சாப்பிடு...வரவர உன் உடம்பு துரும்பாக இளைச்சுண்டு வரது...காலா காலத்திலே சாப்பிட்டால்தானே?... யாரும்மா உள்ளே, வாசு

வந்திருக்கான் பாரு!'' என்று உப தேசமும், உபசரிப்பும் கூறினாள் அத்தை.

வாஸ்தவத்தில் வீட்டில் யாருக்காவது வாசு பயப்படுகிறான் என்றால் அது இந்த அத்தைக்குத்தான்! இத்தனைக்கும் சர்க்குச்சி போல ஒடிந்து விழுகிற ஆகிருதி படைத்தவள் அத்தை. ஆனால் அவளுடைய உலக ஞானம் இருக்கிறதே, அது யாருக்கும் வராது.

கூடத்துக்கு வந்ததும்தான் நிஜமாகவே அன்று மிகவும் நேரமாகி விட்டதை வாசு உணர்ந்தான். அம்மா தூங்கிப் போய் விட்டாள். சமையற்கட்டின் நிலைவாயிற்படியில் தலை வைத்து, சர்க்கரை வியாதியால் சற்று பருத்துப் போன உடம்பைக் குறுக்கிக் கொண்டு, அவள் தூங்குவதைப் பார்க்கும் போது, இந்த ஒன்றுக்கும் பற்றாத ஜீவன் அந்த அன்பின் திருவுருவம் எதற்காகப் பெற்றுப் போட்டதோ' என்று ஆயாசமே எழுந்தது வாசுவுக்கு. அம்மா இப்படியா இருந்தாள் முன்பு! கொடி மாதிரி இருப்பாள். கால் இப்போது வீங்கினாற் போல, பச்சை நரம்பு தெரிகிறாற் போலக் கனத்திருக்கிறதே, அப்படியா இருக்கும்? ஊஹூம்! அம்மா அழகாக, லட்சணமாக இருப்பாள். அவளைக் கொண்டிருக்கிறான் வாசு என்பதிலும், அதனாலே அவன் அதிர்ஷ்டசாலி] என்பதிலும் அவளுக்குப் பெருமை உண்டு.

சுமதி சமையற்கட்டுக்குள், கதவிடுக்கிலோ அல்லது ஆள் உயர பீரோவின் பின்னே நின்று கொண்டிருந்தாள். வாசு தட்டின் முன் உட்கார்ந்தான். அவள் என்ன பரிமாறினாளோ, அவன் என்ன சாப்பிட்டானோ, சாப்பாடு முடிந்தது.

கையைக் கழுவிக் கொண்டதும் மீண்டும் ஆளோடியைத் தாண்டி வாசற் பக்கம் போய்த்தான் மாடிக்குப் போக வேண்டும். இது ஒரு கண்டம். அத்தை பிடித்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே? அத்தை விடுவாளா? ''வாசு! வா, இங்கே!''

''என்ன அத்தை?'' குரலில் நைச்சியத்தைக் குழைத்துக்கொண்டு கேட்டான் வாசு.

''வாசு, நான் கேட்கிறேனென்று நினைக்காதேப்பா.... ஆறு இந்த ஆறு மாசமாகக் கேட்க வேண்டியதைத்தான் இப்போ கேட்கப் போறேன்.....''

"அவரைக் கூப்பிட வேண்டாமப்பா, போகட்டும். இனி மேல் அவருக்கு இங்கே வேலை இல்லை..."

★

"பட்டியலில் ஒன்று குறைகிறதே சுமதி! எனக்கு இந்தக் கட்டிக்கரும்பையும் பிடிக்கும்."



எது நடக்குமென்று வாசு பயந்தானோ அது நடந்து விட்டது. ஆறு மாதங்களாகக் கேட்காமல் அந்தக் கேள்வியை இன்றைக்குத் தானா அத்தை கேட்க வேண்டும்?

"இப்படி வா என் பக்கத்திலே... நீ நல்ல பிள்ளை.... நான் ஏதும் குத்தம் சொல்லவில்லே உன்னே. வயசுக் காலத்திலே எல்லாருக்கும் ஏற்படற வியாதிதான் இது."

வாசு விழித்தான். அவளே என்னவென்பது! 'காதல்' என்னும் இந்த வயசுக் கோளாறை எத்தனை நாளுக்காக விசிக்கிறான்!

"ஏன் அங்கேயே நிற்கிறே?.... இதோ பார்.... இதிலே வெட்கமென்னடாப்பா? தைரியமாச் சொல்லேன், 'அத்தை, எனக்கு அந்தப் பொண்ணு மேலே கொள்ளை ஆசையாயிருக்கு: அவளையே கல்யாணம் பண்ணி வெச்சுடு'ன்னு... வெட்கப்பட்டால் நிறுமா? எப்படியோ நீ நன்றாக இருக்கணும்னு தானே உயிரைக் கையிலே பிடிச்சுண்டு படுத்துக் கிடக்கிறேன் இங்கே!"

"வெட்கமில்லே, அத்தை....எனக்குப் பயமாக இருந்தது, அத்தை.... அவ்வளவு தான்" என்றான்.

"பயமா?.... என்னிடமா? என்னடா இது?" என்று கேட்டாள் சிரிப்பினூடே.

"உங்கிட்டே இல்லே, அத்தை....!"

"பின்னே அந்தப் பொண்ணுகிட்டேயா?"

"ஊஹூம்.... என்கிட்டேயே பயமாயிருந்தது."

"என்னடாது? நீயே உன்னைக் கண்டு பயப்படறயா?"

"ஆமாம், அத்தை."

அத்தை தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். அவளுடைய கண்ணின் ஓரத்தில் இலேசாக நீர் துளித்து விட்டதை வாசு கவனித்தான். "இப்படி நீ சொல்றதைக் கேட்க மனசு சந்தோஷப்படறதுடாப்பா, வாசு.... நிஜமா இப்படித்தான் பயப்படணும். பயம் இல்லேன்னு நம்ம காலுலே நமக்குப் புரியாது...." என்றாள். பிறகு மெல்லக் கேட்டாள். "ஏன், வாசு, அவள் நல்லவள்தானே?"

"உம்...." என்றான் வாசு.

"குணமெல்லாம் எப்படி?"

"கொஞ்சம் கர்வம் பிடிச்சவள்தான். ஆனால் அதைக் கர்வம்னு சொல்ல முடியாது.. பெருமைன்னு வைச்சுக்கோயேன்."

"இருக்க வேண்டியதுதானே? பொண்ணாப் பொறந்து. அதுவும் அழகாப் பொறந்து. அதுவும் நல்ல வசதியுள்ள குடும்பத்திலே பொறந்துட்டா பெருமை பிடிபடாது தானேப்பா!....."

"கொஞ்சம் பிடிவாதம் உண்டு அத்தை... தான் நெனைச்சதைச் செய்தாகணும், தான் சொன்னதை ஒத்துக்கணும்."

"போடா அசடு. இது பிடிவாதமில்லே. செல்வமா வளர்ந்த பொண்ணு அப்படித் தான் இருக்கும், தெரிஞ்சுக்கோ.... அவ அப்பாவை எனக்கு அந்நாளிலேயிருந்து தெரியும். இந்த ராஜாத்தியைப் பெத்துப் போட்டுட்டு விசாலம் கண்ணை மூடினதும் என்னமா வளர்த்திருக்கான் தெரியுமோ அவளை!.... வெறுமே சொல்லி விட்டால் போதுமா? ஒரு கொறை இல்லாமே, தாய்க்குத் தாயா, கண்ணை இமை காக்கிறாப் போல் காப்பாத்தியிருக்கான்.... விசாலம் கண்ணை மூடறப்போ கோண்டுக்கு முப்பத்தி நாலு வயசுதானே! எத்தனை பேர் நான், நீன்னு பொண்ணை அவன் தலையிலே கட்டறதுக்காக அலைஞ்சா தெரியுமோ? அவன் மசியல்லியே.... கோண்டு கோண்டுதான்."

கோண்டு என்கிற அந்தக் கோதண்டராம அய்யர் ஒரு ரிடையர்டு இஞ்ஜினியர். மனிதரைப் பார்த்தாலே அனல் தெறிக்கும். பத்து குதிரை வரிசையிலே ஓடிக் கொண்டிருக்கிற யந்திரம் போல் எந்த நேரமும் ஒரு பரபரப்பு, அழுத்தம் நிறைந்தவர். அவர் ஓய்வு பெற்று ஆறு மாதம்தானாகிறது. ஐம்பத்தைந்து ஆவதற்கு முன்பே எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டாரென்று உமாவே சொல்லியிருக்கிறாள். வாசு அவருடன் இரண்டு வார்த்தைகள் உரையாடியதில்லை. பயம் என்று சொல்ல முடியாது. என்னவோ அவரைப் பார்த்தால் அளவு கடந்த மரியாதையில் நாக்குப் புரள்வதில்லை.

"அப்புறம்?" என்று தூண்டினாள் அத்தை. உமாவைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அவன் வாய் மூலமே கேட்டு விடுவதென்று அவள் முடிவு செய்து விட்டாள் போலிருந்தது.

"கொஞ்சம் புரிபடாத போக்கு உண்டு சில சமயத்திலே" என்றான் வாசு.

"அப்படீன்னா?"

"அவள் புதிரா இருக்காள் அத்தை."

அத்தை சிரித்தாள். "அது புரிபடாத போக்கு இல்லேடா, வாசு.... உன்னாலே தெரிஞ்சுக்க முடியல்லே....பெண் என்பவளே புதிர்தான். தெரிஞ்சுக்கோ". ஆறு கெட்டிக் கார ஆண்பிள்ளை கூடமா இந்தப் புதிருக்கு விடை கண்டு பிடிச்சுடுவான்...மக்கா இருந்தா சங்கடம்" என்றாள் அத்தை. அடேயப்பா! அவள் எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாள்!

"நீயும் ஆறு மாசமாப் பழகறியே, வாசு, அவளிடம் உனக்கு ரொம்பப் பிடித்தமானது எது?.... அதாவது, அழகு, குணம், பேச்சு, சிரிப்பு, இதிலே...."

"அவளுடைய அழகு, அத்தை... அடுத்த படியா அவள் சிரிப்பு....." என்றான் வாசு.

"அழகு சிரிக்கிறதே அலாதிதான்" என்றாள் அவள்.

குத்தலாகச் சொன்னாளா, இயல்பாகச் சொன்னாளா? வாசுவுக்குத் தெரியவில்லை.


"சரி, நீ போய்ப் படுத்துக்கோ.... நாழியாச்சு" என்றாள் அத்தை.

வாசுவுக்குப் போக மனம் வரவில்லை. அவளிடம் இன்றைக்கு நடந்ததைச் சொல்லாமல் எப்படிப் போவது? "இன்னிக்கு உமா என்ன செய்தாள் தெரியுமோ, அத்தை?" என்று தொடங்கினான்.

"போடா, அசடு.... காலையிலே பேசிக் கொள்ளலாம். அவள் என்ன செய்திருப்பாள்னு எனக்குத் தெரியும் போ" என்றாள்.

"ஊஹூம். உங்களுக்குத் தெரிய முடியாது."

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1965 பிப்ரவரி 16 | **1965 மார்ச் 11**

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி	**கோனா டிராவல்ஸ்**
38, அங்கப்ப நாயக்கன் தெரு	மாஸ்காட் ஹோட்டல்
சென்னை-1	திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1965 பிப்ரவரி 17 | **1965 மார்ச் 12**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

"அவன் உன்னை அலட்சியப்படுத்தி விட்டா னாக்கும்.... இல்லாட்டா இப்படித் துடிச் சுண்டு, எங்கோ போய் அலைந்து விட்டு, நேரம் கழித்து வருவாயா நீ?" என்றான்.

வாசு திகைத்தே விட்டான்.

பிறகு நேரமாகி விட்டதை அத்தை நினைவுபடுத்தவே வாசு பிரமையுடன் அங் கிருந்து நகர்ந்தான். மாடிக்குப் போனதும் நெஞ்சின் கனமெல்லாம் நீங்கினதும் போல் இருந்தது. அத்தை எப்படிக் கண்டு பிடித் தாள்? உமா அவனை அலட்சியப்படுத்தியது அன்றுதான் முதல் முறை. இதற்கு முன் அவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருப்பவள் போல் பங்களாத் தோட்டத்தில் அன்ன நடை நடந்து கொண்டிருப்பவள் இன்று மேல் மாடி யில் இருந்தவாறே வேலைக்காரன் மூலம் தனக்கு உடல் நலமில்லை என்று சொல்லி அனுப்பி விட்டாள். உடல் நலம் குறைந்த நேரத்தில் அவசியம் பார்த்தாக வேண்டும் என்பது தோழமை இலக்கணமாயிற்றே! ஆனால் பத்தடி உயர மாடிக்கு வழி திறக்க வில்லை. அங்கிருந்து உமாவின் அழகுச் சிரிப்பு உச்ச ஸ்தாயியில் கேட்டது. உடல்நலக் குறைவில் இப்படிப் பூரித்த சிரிப்பு எழுமா? வாசுவுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனால் உமா ஒரு புதிர். அவளால் சிரிக்க முடியும் என்றே எண்ணினான். தோட்டக்காரன் கருப்பையா இந்நேரத்தில் அந்தச் செய்தியை, செய்தியா அது? — வெளியிடாதிருந்தால், வாசு திரும்பியிருப்பான் சந்தேகத்துக்கிட மின்றி. "மாடியிலே பட்டணத்துத் தம்பி வந்திருக்குது.... அம்மா அவரோட பேசிக் கிட்டிருக்குது.... நீங்க நாளைக்கு வாங்க ளேன்" என்றான் கருப்பையா. தன்னை அவள் வரவேற்காததற்குப் பட்டணத்துத் தம்பி தான் காரணம், உடல்நலக் குறைவல்ல என் பதே வாசுவைப் பொருமவைத்து விட்டது.

மாடியில் அவன் மேஜை மீது முதல் நாள் தான் எடுத்த அவனுடைய புகைப்படம் கிடந்தது. உமாவின் வேண்டுகோளுக்கிணங் கியே அந்தப் புகைப்படத்தை 'என்லார்ஜ்' செய்தான் வாசு. பழைய 'ஆல்பத்'தில் இதுதான் அவளுக்குப் பிடித்தமானதாக இருந்ததாம். பள்ளிக்கூடத்தில் கிரிக்கெட் போட்டியில் அவனுடைய கட்சி வெற்றி பெற்ற போது எடுத்த படம் அது. ஆல்பத் தில் இன்னொரு படமும் இருந்தது. அது நான்காம் வகுப்பில் அவன் படிக்கும்போது எடுத்தது. கன்னுக்குடுமியும் அரைக்கை சட்டையும் ஜரிகை வேட்டியும் காலில் கொலுசுமாக அதில் காட்சி தரும் வாசுவுக் கும் இந்த வெற்றி வீரனுக்கும் எத்தனை வேற்றுமை! இது நாகரிகத்தின் வாரிசு. அது பழமையின் சின்னம்.

வாசுவுக்கு அந்தக் கன்னுக் குடுமிப் படத்தைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. என்னதான் நாகரிகம் பூண்டாலும், அந்தப் பழமையின் தொன்மைக்கு அலாதிக் கவர்ச்சி இருக்கத்தான் இருந்தது.

ஆல்பத்தைப் புரட்டினான். அப்பாவின் படம், அம்மாவின் படம், பாட்டி, தாத்தா படங்கள் — அடுத்து அவனுடையது! ஆனால் இதென்ன? அந்தக் கன்னுக் குடுமிப் படத் தைக் காணவில்லை! யாரோ பிய்த்து எடுத் திருந்தார்கள். அது நன்றாகத் தெரிந்தது.

வாசு ஆத்திரத்தோடு ஆல்பத்தை மூடினான்.

"பால் கொண்டுவந்திருக்கிறேன்" என்று குரல் மட்டும் கேட்டது. சுமதி கதவிடுக்கில் நின்று பால் பாத்திரத்தை நீட்டினாள்.

"சுமதி, வா இங்கே" என்றான் வாசு.

அவள் வந்தாள். மெல்ல மெல்லப் பூனை போல. இந்தப் பூனை பாலுக்குக் காவலாக வந்திருக்கிறது.

"ஆல்பத்திலிருந்து படத்தை எடுத்தாயா?"

அவள் விழித்தாள்.

"சொல்.... யார் எடுத்தது படத்தை?"

"நான்.... நான்தான்...."

"உன்னை யார் எடுக்கச் சொன்னது?"

அவளுடைய விழிகளில் நீர் நிறைந்தது.

"சரி. சரி.... கண்ணைக் கசக்காதே.... செய்வதையும் செய்து விட்டு எதற்காக மாய் மாலம்?"

அவள் பாலை வைத்து விட்டு ஓடினாள்.

"சுமதி, நில்" என்றான் அவன்.

அந்தப் பெண் கதவைப் பற்றிக் கொண் டாள். அவளால் நிற்க முடியவில்லை என் பதை வாசு புரிந்து கொள்ள வில்லை. பெண் களைப் பற்றி அவனுக்கு என்னதான் புரிந்தது?

"இதைப் போய் அத்தையிடம் சொல் லாதே.... உனக்கு அந்தப் படம் வேண்டு மானால் வைத்துக் கொள்" என்றான் வாசு.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். பசிபிக் மகாசமுத்திரத்தையே ஒரு சிறு கால் வாய்க்குள் நுழைத்து வாங்கியதைப் போல் இருந்த அந்தப் பார்வை. நன்றிப்பெருக்கா, மகிழ்ச்சியா, சாபல்ய உணர்ச்சியா?

வாசு பாலைக் குடித்தான். ஆல்பத்தை மேஜை மீது எறிந்தான். ஜன்னலுக்கருகே போய் நின்று கொண்டான்.

சுமதி கீழே போனாள். அத்தைக்குப் பூனையின் கவடுகளும் தெரியும். "சுமதியா? விசுவாமித்திரர் என்னம்மா சொல்றார்?" என்றாள்.

சுமதி பெருமூச்சு விட்டாள்.

"அசட்டுப் பெண்ணே, அவன் மன சறிந்து நடக்கத் தெரிய வேணுமோ? நீ என்ன செய்வே, நீ வந்த வழி அப்படி. ஆண் மகனுக்கு ஆயிரத்தை நீ கடை பரப்பினாலும் ஆயிரத்தி ஒன்றாவதா ஒரு பொருள் மேலே ஆசை போகும்.... இதோ பாரு, அவன் கோபக்காரனே தவிர நல்லவன். இப்பத் தான் குடுபட்டிருக்கான். கவலைப்படாதே. சீக்கிரமே பிரமை தெளிஞ்சுடும்."

அத்தை அவளுடைய தலையைக் கோதிய படியே, "இதோ பார், இப்படியா தலையை வைத்துக் கொள்வது? ஒரு சரம் மல்லிகைப்பூ வைத்துக் கொள்ளக் கூடாதாம்மா? பட்டுப் புடவைக்குப் பதிலா டெர்லிகாட் இருக்கே, அதைக் கட்டிக் கொள். நாகரிகமா சிரிச்ச முகமா இரு...." என்றும் கூறினாள்.

சுமதி எழுந்தாள். வாசுவுக்கு மாமாவின் பெண் அவள். வடக்கே இருந்தவள்தான். எங்கே இருந்தாலென்ன, தெற்கத்திய

பழமை கொலுவிருந்த வீட்டில் வடக்கு ரூடமாகி விட்டது. படிப்பும் அப்படியே: எட்டாம் வகுப்போடு சரி. அப்புறம் வீட்டில் அம்மாவுக்கு உதவி, அப்பாவின் பூஜைக்குக் கோலமிடுவது, விளக்கு ஏற்றுவது, தூபக்கால் வைப்பது இத்யாதி காரியங்கள். பாட்டிலும் பூஜ்யம். திருவிளக்கு ஸ்தோத்திரம், லட்சுமி அஷ்டோத்திரம் இவைதாம். அவள் வந்த வழி அப்படி.

அத்தையின் ஆறுதல்களால் புது பலம் பெற்று விட்டவள் போல் சுமதி உள்ளே போய்ப் படுக்கையில் விழுந்தாள். தூக்கம் வருவதற்கு முன் டெர்ரிகாட்டும், ஸ்லேக்ஸும், பவுடருமாக அபிஷேகித்தவன் புத்துருவைக் கற்பனை செய்து கொண்டாள்.

இந்த வீட்டுக்கு அவள் வந்து ஓர் ஆண்டுக் காலம் ஆகிறது. தன் கணவனைச் சிறு பிராயத்திலிருந்தே வரித்துவிட்ட வாசு அத்தானின் வீட்டுக்குப் போகிறோம் என்பதில் எத்தனை பெருமைப்பட்டாள் ! ஆனால் இங்கு வந்ததும் தான் பம்பாய்க்கும் சென்னைக்கும் இடையே உள்ள இடைவெளி மட்டுமல்ல, அவனுடைய மனத்துக்கும் அவளுடைய மனத்துக்கும் இடையே உள்ள தூரம் கூட மிகுதி என்பது புரிந்தது. எங்கிருந்தோ வந்தாள் உமா ! அவள் வந்ததும் சுமதி 'அவுட்' ஆகி விட்டாள். சின்ன வயதில் கண்ணைத் திறந்து கொண்டு விளையாடுகிற இந்த விளையாட்டில் கூட அவள் 'அவுட்' தான். அப்போதெல்லாம் கண்ணாமூச்சி ஆடுகிற பொழுது — அவள் கன்னுக் குடுமியோடு இருப்பான். அவள் கவுன் போட்டுக் கொண்டு அரைகுறை இந்தியும் மராத்தியுமாக இருப்பாள்.

மெல்ல மெல்ல உறக்கம் தழுவிற்று: அவளை. ஒரு தூக்கம் போட்டிருப்பாளோ என்னவோ, வாசல் பக்கம் கணகண வென்று மணி அடித்துக் கொண்டு பால்காரன் வந்து விட்டான். அத்தை விழித்துக் கொண்டு, "வாருமம்மா உள்ளே...." என்று குரல் கொடுத்தாள்.

ஆயிற்று. இப்போது ஆரம்பித்தால் போதுக்கும் பாட்டுக்கும் சரியாக இருக்கும்.

வாசு கீழே வந்தான்; பல் துலக்கினான். அம்மா கொடுத்த காப்பியைக் குடித்து விட்டு மறுபடியும் மாடிக்குப் போனான். அப்புறம் எட்டு மணிக்கு மறுபடியும் கீழே வந்து குளித்து விட்டுப் போனவன் கோட்டும், டையும் அணிந்து கொண்டு புறப்பட்டு விட்டான். வாசு எங்கே போகிறான் என்பது அவளுக்குத் தெரியும். உமாவின் வீட்டுக்குத் தான். வாசு அங்கேதான் போனான்.

உமா முன் வாயிலில் உட்கார்ந்திருந்தாள். எதிரே சோபாவில் ஒரு யுவன்—பட்டணத்துத் தம்பி — உட்கார்ந்திருந்தான்:

வாசுவைக் கண்டதும், "ஓ....: நீங்களா? எங்கே இவ்வளவு தூரம்?" என்றாள் உமா:

"அம்மா பார்த்து விட்டுப் போகலாம்னு....." என்றான் வாசு. பிறகு அவளருகே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்:

"நேற்று உடம்பு சரியில்லை என்று....."

"ஆமாம்.... ஆமாம்..." என்றாள் உமா:

"என்ன உடம்பு?"

"தலை வலிதான்...."

"டாக்டரிடம் காட்டினாயா?"

"உம்.... இதோ இவர்தான் டாக்டர்: ஒரு இங்லீஷ் மருந்தும் தமிழ் மருந்தும் கொடுத்தார். சரியாகி விட்டது." எதிரே இருந்த இளைஞனைச் சுட்டிக்காட்டினாள் உமா.

"அலோபதியும் ஆயுர்வேதமும் கலந்த மருந்தா?" என்றான் வாசு.

"ஆமாம்...." என்றான் இளைஞன்: "முதல் காட்சி ஓர் ஆங்கிலப் படம்...: அடுத்தது தமிழ்ப் படம்... இரண்டையும் பார்த்து விட்டு வந்ததில் தலைவலி ஓடிப் போய் விட்டது."

சிரிப்புக்கு இடமானது அந்த ஹாஸ்யமா, வாசுவேதானா என்பது அங்கு நிலவிய மௌனத்தில் கரைந்தது. கடைசியில் வாசுவே சிரித்தான் உரக்க. "இது நல்ல மருந்து தான்.... வியாதிக்கேற்ற மருந்து... என்னைக் கேட்டால் இந்தப் படத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கலாம் என்பேன்" என்றான்.

"அது காய்ச்சலுக்கு" என்றான் இளைஞன்:

உமா எழுந்தாள். "நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்" என்று உள்ளே போனாள்:

இளைஞன் கர்வமாக அமர்ந்திருந்தான். அவன் யார், உமாவுக்கு நோய் தீர்க்கும் மருத்துவனாக அமையும் தகுதி அவனுக்கு எப்படி வாய்த்தது என்பதொன்றும் புரியாமல் பேச்சை எப்படித் தொடங்குவது என்று தவித்துக் கொண்டிருந்தான் வாசு.

"பம்பாய்க்குப் பிளேன் எத்தனை மணிக்கு?" என்று கேட்டான் இளைஞன்.

"பதினொரு மணிக்கு.... போன வாரம் என் நண்பன் ஒருவன் போனதால் நிச்சயமாகத் தெரியும். பதினொரு மணிக்குத்தான் என்று... ஏன், நீங்கள் போகப் போகிறீர்களா?" என்றான் வாசு.

"உம்... உமாவும் வருவேன் என்கிறாள்: அதுதான் கவலையாக இருக்கிறது."

"உமாவுமா ?"

அவன் வாசுவின் கவலையைப் புரிந்துகொள்ளாமல், பம்பாய்ப் பயணம், அங்கிருந்து லண்டனுக்குப் போகப் போகிற பெருமை, லண்டனில் இரண்டு ஆண்டுப் படிப்பு முதலிய வற்றை விவரிக்கலானான்.

கோண்டு வந்தார். "நீ அவளைக் கூட்டிக் கொண்டு போகத்தான் வேண்டும். உமா ஈஸ் வீப்பிங்" என்றார்.

"நோ, மாமா.... தட் ஈஸ் இம்பாஸிபிள். நான் லண்டன் போகணும்."

"போயேன். அவள் 'ஸெண்ட் ஆஃப்' கொடுத்து விட்டுத் திரும்பி விடுவாள்."

"அது எதற்காக?.... என்னுடன் ஒரு ஸ்நேகிதன் வருகிறான், மாமா."

"வரட்டுமே!"

"உங்களுக்குப் புரிய மாட்டேன் என்கிறது. எனக்கு விருப்பமில்லை இது....."

உமாவே வந்து விட்டாள். உமாவா அது ! முகம் ஒன்றரையடி. வெண்கலப் பானை போல் வீங்கியிருந்தது: மகளைப் பார்த்ததும் கோண்டுவின் வற்புறுத்தல்

மிருதுவாகி இறுதியில் கோபமாகவே மாறி விட்டது. "நீ அவளை அழைத்துக் கொண்டு போகப் போகிறாயா இல்லையா? அது தெரிய வேண்டும் எனக்கு" என்றார்.

"அது சாத்தியமில்லை" என்றான் அவன்.

"பேஷ்..... எதிர்கால புருஷன் பேசுகிற பேச்சா இது? நல்ல வேளை. உனக்கு என் பெண்ணை அவசரப்பட்டுக் கல்யாணம் செய்யாமல் இருந்தேனே, பிழைத்தேனே" என்றார் கோண்டு.

இன்னொருவன் விருட்டென்று எழுந்தான். "அவனுடைய அர்த்தமற்ற பிடிவாதங்களைக் கண்டு இத்தனை நாட்களும் இணங்கிய நான் இன்று பிடிவாதமாக மறுத்தேனே, பிழைத்தேனே.... குட் பை. வருகிறேன், மாமா" என்று புறப்பட்டு விட்டான்.

வாசு இந்த நாடகத்தைப் பார்த்து வாயடைத்து உட்கார்ந்திருந்தான். பட்டணத்துத் தம்பியான இன்னொருவனை உமா மணந்து கொள்வதாக ஏற்பாடு இருந்தது என்பது விளங்கியதும் தனது காட்டாறு மாதிரி நிலைமை நன்றாக உணர்ந்து வெட்கினான் அவன்.

"கோபு!" என்று கூவினார் கோண்டு.

"அவரைக் கூப்பிட வேண்டாமப்பா.... போகட்டும்....இனிமேல் அவருக்கு இங்கே வேலை இல்லை" என்றாள் உமா.

வாசுவுக்கு அங்கே உட்கார்ந்திருக்கச் சங்கடமாக இருந்தது. ஒரு குடும்ப விவகாரத்தில் சம்பந்தமில்லாமல் பங்கு கொள்ள நேர்ந்ததே! ஆனால் இதுவும் நன்மைக்கே.

"மிஸ்டர் வாசு, கடற்கரைக்குப் போய் விட்டு வருவோம், வாருங்கள்" என்றாள் உமா. "எனக்கு இங்கே உட்கார்ந்திருக்கவே பிடிக்கவில்லை...."

"எனக்கும்தான்" என்று எழுந்தான் வாசு. "ஆனால் நான் கடற்கரைக்கு வரவில்லை, உமா. குட் பை."

விறுவிறு வென்று நடந்தான் வாசு. கோண்டு அய்யரின் குரலும் அவரை அடக்கி, 'போகும் போகட்டும். வாருங்கள்' என்னும் பெண்ணின் பதிலும் அவன் செவியில் விழுந்தன. அவனுக்குத் தெரியும் முடிவு இது தான் என்று. அவன் புத்தி தெளிந்து விட்டது.

"சாப்பிட வருகிறீர்களா?"

குரல் கேட்டு வாசு தலை நிமிர்ந்தான். வழக்கமாகக் குரலை மட்டும் அனுப்பி விட்டுப் பதுங்கி நிற்கும் கமலி நிலைப்படியருகில் நின்றாள். டெரிகாட் புடவை, டுவிங்கிளிங் நைலான் ஜாக்கெட் மின்னின உடலில்.

வாசு கோபமாக அவள் அருகில் வந்தான். "இதெல்லாம் என்ன? இந்த டெரிகாட் டெல்லாம் இனிமேல் உடுத்திக்கொண்டு வந்து என் எதிரே நிற்காதே...ஆமாம்" என்றான்.

கமலிக்கு அழுகை வந்து விட்டது.

"எனக்குப் பிடிக்கிறது எது, பிடிக்காதது எது, எல்லாம் தெரியுமா உனக்கு?"

"உம்..... அத்தானுக்கு மின் ஆடம்பரம், போலி நாகரிகம் பிடிக்காது. மல்லிகைப் பூவும், கட்டித் தயிரும், உருக்கு வெண்ணெயும் பிடிக்கும்."

"பட்டியலில் ஒன்று குறைகிறது கமலி!" என்றான் வாசு. பிறகு அவள் கைகளைப் பற்றிக் கொண்டு, "எனக்கு இந்தக் கட்டிக் கரும்பையும் பிடிக்கும்" என்றான்.

"சரளா! சர்வ தேசத் திரைப்பட விழாவில் நீ சொன்ன எல்லாப் படங்களுக்குமே டிக்கட் புக் செய்து கொண்டு வந்து விட்டேன்!" மகிழ்ச்சியோடு கூறிக் கொண்டு வந்தான் ராகவன்.

"நானும் தயாராகி விட்டேன்!" என்றாள் சரளா பஞ்சாபி டிரஸில்.

"அலங்காரம், பிரமாதம் போ! ஏன், சரளா! ஒரு சந்தேகம்!"

"என்ன?"

"ஒரு நாளைக்கு நாலு படங்கள் பார்ப்பதாகத் திட்டமிட்டிருக்கிறோம். உன் இந்த டிரஸைப் பார்த்தபின்தான் நினைவுக்கு வந்தது. நான்கு படங்களையும் பார்க்க முடியாதோ என்று! காட்சிக்குக் காட்சி நீ டிரஸ் மாற்றத் தொடங்கினால்...இரண்டு காட்சிகளைக் கோட்டை விட்டுவிட வேண்டியிருக்குமே!"

"நீங்க இப்படிப் பரிகாசம் பண்ணுவீங்கன்னு தெரியும். இந்த விழா முடிகிற வரைக்கும் இந்த டிரஸ்தான்!" என்றாள் நாணிக் கோணிக் கொண்டே.

"சரளா! நீ கெட்டிக்காரி! பஞ்சாபி டிரஸ்ஸைப் பார்த்துத் தேர்ந்தெடுத்ததற்கு இப்பத்தான் காரணம் புரிந்தது!" என்று மகிழ்ந்தான் ராகவன்!



மண் சட்டியின் தனிப்பட்ட உபயோகங்களில் ஒன்று, அதைப் பெண்மணிகள் தங்களுக்குக் கோபம் வரும்போது தங்கள் பிராணநாதர்கள் தலையில் போட்டு உடைப்பதாகும். ''வினுக உடைந்த சட்டி வேணதுண்டு என் தலையில்...'' என்று ஔவைப் பிராட்டி பாடியிருப்பதிலிருந்து இது அறியக் கிடக்கிறது! அதை இன்னொரு முக்



கியமான காரியத்துக்கும் உபயோகிக்கலாம் என்று சென்றவாரம் தெரிந்தது.

சுமார் எட்டு லிட்டர் பிடிக்கக் கூடிய ஒரு சட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் கழுத்தைச் சுற்றிக் கிளிப் பச்சை வர்ண பெயிண்டைப் பூசுங்கள். அதன் மற்றப் பாகம் முழுதும் போகன்விலா பூ வர்ணப் பெயிண்டைப் பூசுங்கள். பெயிண்ட் பளபள வென்று மின்னக் கூடிய உயர்ந்த 'எமல்ஷன்' வகையைச் சேர்ந்ததாயிருக்க வேண்டும். சட்டி அழகானதாய், மாப்பிள்ளை சட்டிக்குப் பக்கத்தில் உட்கார இருக்கும் புது மணப் பெண் சட்டி போல் தோற்றமளிக்கும். அந்த வர்ணச் சட்டி இப்போது ஒரு விளம்பரச் சாதனமாய் உபயோகிக்கப்படத் தயாராயிருக்கிறது.

"இந்த இடத்துக்கு எதிரில், சமீபத்தில் 'ஒருவன் வீதியைக் கடக்க முயன்ற போது, ஒரு டாக்ஸியால் மோதப்பட்டு இறந்தான்'

'வீதி விபத்துத் தவிர்ப்பு வாரம்' கொண்டாடியபோது இது போன்று வர்ணம் அடித்த சட்டிகளில் பிரெழுதி, அவற்றை விபத்து நேர்ந்த இடங்களில் ஒரு மூங்கில் குச்சியில் கவிழ்த்து வைத்திருந்தார்கள்.

இந்த விபத்துத் தவிர்ப்பு வாரம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்ட தினத்துக்கு மறுநாள், பத்திரிகைகளில் பின்வரும் செய்தி வெளியாகியிருந்தது:

''இன்று காலையில் ஒரு பெரிய டாக்ஸி ரிப்பன் கட்டடத்துக்கு எதிரில் நடைபாதையில் ஏறியது. நடைபாதையில் சென்று கொண்டிருந்த கிழவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.''

இந்த விபத்து நேர்ந்த இடத்தில் விளம்பரச் சட்டியில் அதைப் பற்றி எழுதி அதை மாட்டி வைக்கலாம். அதைப் படிக்கும் பாட்டைசாரிகள் இனி நடைபாதையில் போகாமல் ஜாக்கிரதையாக நடு வீதியில் நடந்து செல்வார்கள் அல்லவா?

ஃ ஃ ஃ

சட்டி விளம்பரத்தில் கொட்டை எழுத்தாக இருக்கும் 'ன்' என்பதைக் கவனித்தீர்களா? பாதசாரி மிகவும் கேவலமான ஆசாமி. அந்த ஆசாமியைப் பற்றிச் சொல்லும் போது 'அவர்', 'இவர்' என்று மரியாதையாகக் குறிப்பிடக் கூடாது. அவன் இவன் என்றே சொல்ல வேண்டும் என்று தெரிந்து கொள்கிறோம்!

ஃ ஃ ஃ

பத்திரிகைகளில் குற்ற சம்பந்தமாக வெளியாகும் செய்திகள் பின்வருமாறு இருக்கும்:

சிரிக்கவும்

''ஒரு வீட்டில் கன்னம் வைத்துப் புகுந்து அரைப்படி அரிசியைத் திருடிக் கொண்டு போனதாகக் குற்றம் சாட்டப்பட்ட அழகிரிசாமி என்பவன் ஆறு மாதம் கடுங்காவல் சிறைவாசத் தண்டனை பெற்றான்.''

''....கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி காரியதரிசியான விஷ்ணுலிங்கம் என்பவர் 15000 ரூபாய் வரை சொஸைட்டிப் பணத்தைக் கையாடியதற்காக மாஜிஸ்டிரேட் அவருக்குக் கோர்ட் கலையும் வரையில் சிறைவாசத் தண்டனை விதித்தார்.

இந்தச் செய்திகளில் 'அவன்', அவர்' என்ற வார்த்தைகள் யார் யார் விஷயத்தில் எப்படி எப்படி உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள்.

ஃ ஃ ஃ

நாகரிகமாகவும், கண்ணியமான முறையிலும் பேசிப் பழக வேண்டுமென்றால், யார்யாரை 'அவன்', 'அவர்', 'நீ', 'நீர்', 'நீங்கள்' என்று குறிப்பிட்டுப் பேச வேண்டும் என்பதைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வார்த்தைகளின் உபயோகம் இப்போது ஒரு தர்மசங்கடமான விஷயமாகி வருகிறது.

என் பழைய நண்பர் ஒருவரின் பையனை எனக்குச் சிறு வயது முதற்கொண்டு தெரியும். நண்பரும் நானும் ஒருவரையொருவர் 'நீ' என்று குறிப்பிட்டே பேசிக் கொள்வோம். அவர் பிள்ளைக்குத் தில்லியில் ஓர் இலாகாவில் உதவிக் காரியதரிசி வேலை. அந்தக் காரியதரிசியுடன் பேசும் போது 'நீங்கள்' என்றே பேசத் தோன்றுகிறது. ஒரு பெண், எங்கள் குடும்பப் பெண் போல் எங்களுடன் பழகியவள். அவள் இப்போது ஓர் ஐ. ஏ. எஸ். அவளிடம் பேசும்போது அந்தப் பழைய 'நீ' என்ற வார்த்தையை நாக்கு உபயோகிக்கத் தயங்குகிறது; 'நீங்கள்' தான் வருகிறது;

ஒரு வாலிப நண்பர் திடீரென்று செல்வந்தராகிப் பெரும் புகழும் பெற்று விட்டார். அவரிடம் ஒரு நாள் டெலிபோனில் பேசிய போது அவர், ''நீங்கள் இப்படிப் பேசினால், ரூமாலை வைத்து விடுவேன்'' என்று கோபமாகக் கூறினார். என்ன தவறிப் பேசி விட்டேனோ என்று கவலைப்பட்டேன்.

''என்னை வழக்கம் போல் 'நீ' என்றே குறிப்பிடுங்கள். 'நீங்கள் என்ன வேண்டிக்கிடக்கிறது?'' என்று அன்புடன் கடிந்தார்(ன்).

நமது பழைய நண்பர்களைக் காரியாலயங்களில் பார்க்கச் சென்றால் 'எம். டி.' இல்லை. ஜே. எம். டி.தான் இருக்கிறார்கள். முதலில் கூறப்பட்டவர் மானேஜிங் டைரக்டர். இரண்டாமவர் மானேஜிங் டைரக்டர் அவர்களின் பிள்ளை.

அவர்கள் வீட்டுக்குச் சென்றால், 'பெரியவரைப் பார்க்க வேண்டுமானால் 'சின்னப் பெரியவரைப் பார்க்கவேண்டுமா?' என்று விசாரிக்கிறார்கள். சின்னப் பெரியவர் என்பது மூத்த பிள்ளை. இரண்டாவதாக ஒரு பையன் இருந்தால் 'வாண்டுப் பெரியவர்' என்பார்கள் போலிருக்கிறது.

ஆங்கிலத்தில் ஒரு சௌகரியம். பாட்டாளி முதல் பிரதம மந்திரி வரை எல்லாரிடமும் யூ (you) என்ற ஒரே வார்த்தையை உபயோகித்துப் பேசி விடலாமல்லவா ?

ஃ ஃ ஃ

பழைய ஷேராமாந்திரக் கதைகளுள் 'கல்யாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்துபோன கதை' என்று ஒன்று உண்டு. அதுபோன்ற சம்பவம் சென்ற வாரம் பம்பாயில் நடந்தது.



''நான் உத்தரப் பிரதேசக்காரன். என் ஊர்க்காரர்கள் ஹிந்தி தேசிய பாஷையாவதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். நானே ஹிந்தியில் புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். வீட்டில் தினமும் ஹிந்தியில் பேசிப் பழகி வருபவன். அப்படிப்பட்ட நான் ஹிந்தி எதிர்ப்புக்கு எப்படி இடம் கொடுக்கக் கூடும்?'' என்று சொல்லலாமல்லவா?

சிந்திக்கவும்



பிரதமர் சாஸ்திரி, அவரது அந்தரங்கக் காரியதரிசி, மெய்க் காப்பாளர்கள், கருக்கொழுந்துக் குமாஸ்தா முதலியவர்கள் ஒரு பிரத்தியேக விமானத்தில் பம்பாய்க்குச் சென்றார், டிராம்பேயில் புளூட்டோனியம் ஆலையைத் திறந்து வைப்பதற்காக.

அவர் அங்கே மாலை போட்டுக் கொண்டார்; பிரசங்கம் செய்தார். கடைசியில் தேசியகீதம் பாடியும் விட்டார்கள். அப்போதுதான் திறப்பு விழா நடத்தவில்லை என்பது தெரியவந்தது. திறப்பு விழா நடத்த மறந்து போயிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. எத்தனையோ திட்டங்கள் சம்பந்தமாகத் திறப்பு விழாக்கள் நடத்தியும் அவை அஸ்திவாரக் கல்லோடு நிற்கின்றனவே, திறப்பு விழா நடத்தாமல் அப்படியே இருக்கட்டுமே என்று நினைத்திருக்கலாம்.

ஃ ஃ ஃ

''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பேச எனக்குத் தயக்கமாக இருக்கிறது. ஏனென்றால் எனக்கே ஆறு குழந்தைகள் இருக்கின்றன. இப்போது மற்றவர்களுக்குச் சுலபமாகப் புத்தி சொல்ல முடியும்'' என்று சாஸ்திரி அன்னிய நாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் கூறினாராம்.

காந்திஜி இதற்கு நேர் விரோதமாகப் பேசிக் காரியங்களைச் செய்தார். தமது குறைகளை எடுத்துக் காட்டிக் கொண்டு மற்றவர்கள் அந்தக் குறைகள் உள்ளவர்களாக இருக்கக் கூடாதென்பதற்காகப் புத்திமதி கூறினார். நிற்க.

பிரதமர் கூறியது பொதுவாக அவரது மனப் போக்கை எடுத்துக் காண்பிக்கிறது. அவர் ஹிந்தி விஷயத்தில் பட்டும் படாததுமாய் நடந்துகொள்வதற்கு இந்த மனப் போக்கைக் காரணமாகக் கூறலாம்.

டிஸம்பர் 15ந் தேதி முதல் ஜனவரி 15ந் தேதிவரையி லுள்ள காலத்தை 'வாழ்த்துக் கடிதங்கள் மாதம்' 'என்று கூறலாம்.அதுகாலண்டர்கள், டைரிகள் மாதமுங்கூட. கிறிஸ்துமஸ் பண்டிகை,கிறிஸ்துவப் புத்தாண்டு சம்பந்தமாக கவர்ச்சிகரமான வாழ்த்துக்கடிதங்கள் இப்போது அச்சிட்டு விற்கிறார்கள். சில கிறிஸ்துவ வாழ்த்துக் கடிதங்களில் 'ஓம்', 'ஓம் சரவண பவா!' 'ஓம் முருகா,முருகா!' என்ற மந்திரங்கள் கூட அச்சிட்டிருக்கும். எந்த மத சம்பிரதாயத்தையும் நாம் 'ஸ்வாஹா' செய்து கொள்ளும் பண்பை இது குறிக்கிறது.



வோட்டு ஒன்று துண்டு பல



- ''ஆங்கிலம்
- வெள்ளைக்காரன் சொத்து இல்லே!
- அது யாருக்கும்
- தனி உடைமை என்று
- சொல்ல முடியாது.
- உலகத்துக்கும்
- பொதுவான மொழி.
- அதை ஒழி என்பது அபத்தம்....''

''நான் ஒன்றும் புதுமையாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். உலகத்திலே புதுமை என்பதற்கு இடமே இல்லே என்று அந்தக் காலத்திலேயே சாலமன் சொல்லியிருக்கிறான். ஜெர்மானிய சிந்தனையாளன் கதே என்ன சொல்லியிருக்கிறான்? 'இருந்தது, இருக்கிறது, இருக்கப் போகிறது' என்ற காலங்களில் 'இருக்கப் போகிறது' என்பது ஏற்கனவே 'இருந்ததாக'த்தான் இருக்கும் என்கிறான். எனக்கு எது உசிதம் என்று தோன்றுகிறதோ அதைச் சொல்கிறேன். ஜனநாயகத்திலே அதற்கு உரிய உரிமை இல்லே என்றால் அப்புறம் அதை ஜனநாயகம் என்று எப்படிச் சொல்வது? நான் புரட்சிகரமாகப் பேசுகிறேனா? ஐயா! என்னே ஜெயிலில் கொண்டு போய் வைக்கட்டும். என் காலத்தில் ஜெயிலில் எத்தனையோ அபிவிருத்திகள், வசதிகள் செய்து கொடுத்திருக்கிறேன். அதை நேரடியாக நானே அனுபவித்துப் பார்க்கத் தயார்.''

* * *

''வோட்டு வோட்டு என்று தேர்தல் வந்தால் பறக்கிறார்கள். நாலு லட்சம் வாக்காளர்கள் உள்ள தொகுதியில் லட்சம் பேர்கள்கூட வோட்டுச் சாவடிக்கு வருவதில்லே. அதிலே ஐம்பதினாயிரம் வோட்டுகளைப் பெற்றவர் வெற்றிக் கொடி கட்டிப் பறக்கிறார். நான் கேட்கிறேன். 'ஐயா! ஒரு ரூபாயில் இரண்டணா மதிப்புக்குத்தானே நீ மக்கள் சம்மதத்தைப் பெற்றிருக்கிறாய். இதை எப்படி வெற்றி என்று ஒப்புக் கொள்ள முடியும்?' என்கிறேன். வோட்டுச் சாவடிக்கு வந்து தன் உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு அபராதம் உண்டு என்று சட்டம் செய்தால் அப்போது பொதுமக்களின் கருத்து எப்படி எந்த விதத்தில் பூரணமாக இருக்கும் என்று தெரிந்து கொள்ளலாமே? வெற்றியோ தோல்வியோ அப்போதுதான் ஒப்புக்கொள்ள முடியும்!''

''இங்கிலாந்திலே முப்பது சர்வகலாசாலைகளுக்கு மேலாக இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே, முந்நூற்றி அறுபதுக்கு மேலான சர்வ கலாசாலைகள் இருக்கின்றன. கல்வியின் தரம் அங்கு குறைந்தா போயிருக்கிறது? அங்கே மாத்திரம் ஏன் சர்வ கலாசாலைகள் விஷயத்தில் கஞ்சத்தனம்? தமிழ் நாட்டுக்கு மட்டுமே ஏழெட்டு சர்வ கலாசாலைகள் தேவை. பாரதம் முழுதும் ஒரே மாதிரிக் கல்வி என்று சொல்வதெல்லாம் நடைமுறைக்குக் கொஞ்சமும் பொருந்தாத விஷயமாகும். சர்வ கலாசாலைகள் விஷயத்தில் நான் ஒரு புரட்சியை செய்ய விரும்புகிறேன்.''

* * *

மேலே குறிப்பிட்ட ரீதியில் கடல் மடை திறந்த வெள்ளம் போல் பல பிரச்னைகளைப் பற்றியும் ஒரே மூச்சில் தாமே கேள்விகளையும் போட்டுக் கொண்டு அதற்குத் தயங்காமல் பதில்களையும் கொடுக்கும் ஸ்ரீ டி. எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்கு இப்படிப் பேச முழு உரிமையும் அனுபவமும் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். முதலாவது ஐ. ஸி. எஸ். வர்க்கத்தைச் சேர்ந்த அவர் தமிழ் நாட்டின் சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். மூன்றாவது சர்வகலாசாலை நிர்வாகக் குழுவில் நுழையப் பல நாட்களாகப் பிரயத்தனம் செய்து வருபவர்.

திருவனந்தபுரம், கஞ்சம், மயிலாப்பூர் உயர்நிலைப்பள்ளிகளிலும், ராயப்பேட்டை வெஸ்லி கல்லூரி, சென்னை ராஜதானிக் கல்லூரி இவைகளிலும் படித்து, பி. ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்ற திரு ராமச்சந்திரன் இங்கிலாந்துக்குப் போய் அங்குள்ள லண்டன் பொருளாதாரப் பள்ளியில் பி. எஸ்ஸி. பட்டம் பெற்றார்: கூடவே பாரிஸ்டர் பரீட்சைக்கும் படித்து பாரிஸ்டரானார். இரண்டும் போதாதென்று ஐ: ஸி. எஸ்: பரீட்சைக்கும் உட்கார்ந்து வெற்றி

பெற்றார். 1925ம் ஆண்டில் இந்தப் பரீட்சைகளுக்கெல்லாம் படித்த பல விஷயங்களையும் அறிஞர்களின் பொன்மொழிகளையும் இன்றும் ஓர் அட்சரம் விடாமல் சண்டப்பிரசண்டமாக மேற்கோள்களாகக் காட்டும் அபார ஞாபக சக்தி அவரிடம் இருக்கிறது.

உதவிக் கலெக்டர், கலெக்டர், ஜில்லா நீதிபதி போன்ற பல பதவிகளில் அமர இவருக்கு வாய்ப்புக்கள் கிட்டின. ஒவ்வொன்றிலும் நிறைய அனுபவங்களும் கிட்டின. இத்தனை ஆண்டு காலம் ஜில்லா நீதிபதியாக இருந்த காலத்தில் உயர் நீதிமன்றத்துடன் நிறையச் சண்டைகள் போட்டவர் என்ற பெயர் இவரை ஒட்டிக் கொண்டது.

குற்றவாளிகளும் அவர்களுக்காக வாதாட வரும் வழக்கறிஞர்களும் இவருடைய தீர்ப்புக்களில் தண்டனையையே எதிர்பார்ப்பார்களாம். இவர் தண்டனை அளிக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்வார்களாம். காரணம், இவர் தீர்ப்புக்கு எதிராகவே அப்பீலில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவது சகஜமாய் விட்டிருந்தது!

ஒரு சந்தர்ப்பத்தில் எழுபத்திஐந்து வயதை எட்டிப் பிடித்திருந்த ஒரு தாடிக் கிழவனார் போலீஸாரிடம் சரணடைந்தார். முப்பத்திஐந்து வருட காலத்துக்கு முன் அவர் கிராமத் தலையாரியாக இருந்தபோது கஜானாவில் செலுத்தப்பட வேண்டிய இருநூறு ரூபாய்களுடன் தலைமறைவாகி விட்டாராம். அவருடைய மனச்சாட்சி உறுத்திக்கொண்டே இருந்தது. செய்த தவறுக்குத் தண்டனை வாங்கினால்தான் நிம்மதி ஏற்படும்போலிருந்தது. எங்கெல்லாமோ சுற்றிவிட்டு முப்பத்திஐந்து வருடங்கள் கழித்துத் திரும்பி வந்து தண்டனை பெறத் தயாராக நின்றார். காணாமற்போன பண சம்பந்தமான தஸ்தாவேஜுகளும் காணாமற்போய்விட்டன. ஆனால் கிழவர் மாத்திரம் தாம் குற்றவாளி என்று உறுதி கூறினார்.

திரு ராமச்சந்திரன் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. சட்டங்களின் பிரகாரம் அவர் ஓர் ஆண்டு கடின காவல் தண்டனை வழங்கினார். கிழவர் அப்பீல் செய்யும் கோஷ்டியில் சேர்ந்தவரில்லையாதலால் நேராக ஜெயிலுக்குப் போனார். அப்புறம் சில நாட்கள் கழித்துத்தான் விஷயம் தெரிய வந்தது. தலையாரி இருநூறு ரூபாயை எடுத்துக் கொண்டு கஜானாவுக்குப் போகும் வழியில் சிலர் சீட்டாடிக் கொண்டிருந்தார்களாம். வேடிக்கை பார்க்கத் தலையை நீட்டிய தலையாரி தாமும் பங்குகொள்ள உட்கார்ந்தார். சர்க்கார் ரூபாய் சூதாட்டத்தில் கைமாறிவிட்டது. வெளியே சொன்னால் நம்ப மாட்டார்கள் என்ற பயத்தில் தலைமறைவாகவே போய்விட்டார்.

"என்னுடைய நீதிபதி பதவிக் காலத்தில் நான் எத்தனையோ தண்டனைகள் அளித்திருக்கிறேன். எத்தனையோ நபர்களுக்கு விடுதலையும் கொடுத்திருக்கிறேன். மேலே உள்ளவர்கள் என் தீர்ப்பை எப்படி வரவேற்பார்கள், பாராட்டுவார்கள் என்று நான் நினைத்ததேயில்லை; சட்டங்களும் என் மனச்சாட்சியும் எனக்குத் துணையாக நின்றன. 'எதற்கும் அஞ்சி உன் மனச்சாட்சியைப் புறக்கணிக்காதே' என்று கல்லூரி நாட்களில் என் ஆசிரியர் மகரிஷி வாசுதேவாச்சாரியார் அடிக்கடி சொன்னதை நான் மறந்ததேயில்லை" என்றார் ராமச்சந்திரன்.

திருப்பத்தூரில் அவர் உதவிக் கலெக்டராக இருந்தபோது அங்கு டாக்டர் பேடன் என்னும் ஆங்கிலேயர் ஒருவர் இருந்தார். மதுக் கடைகள் முன்னும் அந்நியத் துணிக் கடைகள் முன்னும் தேசீயப் பற்றுள்ளவர்கள் தீவிர மறியல் நடத்திய காலம். பேடனுக்குத் தாமும் இந்த மறியலில் கலந்துகொள்ள ஆவல். உதவிக் கலெக்டரிடமே ஆலோசனை கேட்டார். மறியல் செய்வது சர்க்காரால் சட்ட விரோதமான செயலாகக் கருதப்படுவதாக விளக்கம் கிடைத்தது. பேடன் சட்ட விரோதமாக ஏதும் செய்யத் தயாராக இல்லை.

அந்தச் சமயத்தில் சென்னைக்கு வேறு வேலையாக வந்த பேடன் சைனா பஜாரில் நடந்துகொண்டிருந்த மறியல்களை வேடிக்கை பார்க்கப் போனார். அவர் எப்போதுமே கதர் வேட்டி, ஜிப்பா அணிபவர். ஆனால் தலையில் மேல் நாட்டுப் பாணியில் நீண்ட தொப்பியும் வைத்திருப்பார்.

வேடிக்கை பார்க்கப் போனவரைச் சென்னை போலீசார் மறியல் செய்தவர் என்று கைது செய்தார்கள். அவர் சட்டைப் பையில் ஆட்சேபகரமான துண்டுப் பிரசுரங்களும் திணிக்கப்பட்டன. பேடன் உண்மையை விளக்கியும் போலீஸ் கமிஷனர் நம்பவில்லை. ஒரு வழியாக ஜாமீனில் வெளி வந்து திருப்பத்தூர் திரும்பினார். உதவிக் கலெக்டரைச் சந்தித்து நடந்ததைச் சொன்னார். ராமச்சந்திரனுக்கு பேடனின் சுபாவம் நன்கு தெரியும். சட்டத்தை ஒரு நாளும் மீறும் எண்ணம் அவருக்குக் கிடையாது. ஆகவே அவர் தம்மிடம் ஆலோசனை கேட்டதிலிருந்து விளக்கமாக ஒரு கடிதம் எழுதி பேடனைக் கைது செய்தது தவறு என்று சுட்டிக் காட்டிச் சென்னையில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினார்.

போலீஸ் நிர்வாகம் உஷாரானது. ஆனாலும் தாங்கள் செய்தது தவறு என்று ஒப்புக்கொள்ளத் தைரியம் இல்லை. 'இனிமேல் இத்தகைய மறியல்களில் பேடன் கலந்துகொள்ள மாட்டார் என்ற நம்பிக்கையில் இப்போது அவர்மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை' என்ற பொடி வைத்த அறிக்கையை விடுத்தது. பேடன் மறியல் செய்ததாக மறைமுகமாக ஊர்ஜிதம் செய்தது. ஆத்திரமடைந்த பேடன் இதை இங்கிலாந்தின் பார்லிமெண்ட்வரை கொண்டுபோய் அங்கிருந்த பிரதிநிதி சர் ஜான் டங்கன் ஹால் இதைப் பற்றி விசாரித்த தன்னாலே அந்தப் பொடிவைத்த அறிக்கையைத் திருப்பி மடித்து வைத்தது சென்னை அரசாங்கம்.

திரு ராமச்சந்திரனுக்குக் கல்வித் துறையில் எப்போதுமே ஈடுபாடு உண்டு. அனந்தப்பூர் மாவட்டத்தில் கலெக்டராகப் பணியாற்றும் போது, மாணவர்களை தலைகாட்டாத சில

பள்ளிகளும், காலி பெஞ்சுகளும் ஆகி காங்கு இருப்பதைக் கண்டார். உடனே அந்த மாவட்டத்தில் நான்கு வயது நிறைந்த குழந்தைகளை ஆரம்பப் பள்ளிகளுக்கு அனுப்பா விட்டால் பெற்றோர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றறிக்கை அனுப்பினர். குழந்தைகள் குவிய ஆரம்பித் தார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய இட வசதியோ, உபாத்தியாயர்களோ கிடைக்க வில்லை. கல்வித் துறை அதிகாரி இந்த இக்கட்டான நிலையை ஒரு நாளும் எதிர்பார்த்தவரல்ல. சர்க்காரை அனுமி கலெக்டரின் அறிக்கையை வாபஸ் பெறும் படி அவர் கோர வேண்டியதாயிற்று.

ஓய்வு பெறுவதற்கு முன் ராமச்சந்திரன், தமிழ் நாட்டின் ஜெயில்களின் இன்ஸ்பெக் டர் ஜெனரலாக இருந்தார்.

''தோராயமாகச் சொல்கிறேன். மூப் பத்தி ஆறுயிரம் கைதிகளில் பன்னிரண் டாயிரம் பேர் சாராயக் கேஸ்களிலும் உள்ளே வருபவர்கள். இந்தப் பன்னிரண்டாயிரத்தில் அறுபது வயதைத் தாண்டியவர்கள் ஒன்பதி னுயிரம். பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த வர்கள் மூவாயிரம். இதிலிருந்து என்ன கவனிக்க வேண்டியிருக்கிறது, தெரியுமா? நடுத்தர வயதுக்காரர்கள் எப்போதுமே வெளியில் தங்கித் தங்கள் தொழிலை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வப் போது போலீஸ்காரர்களுக்குத் திருப்தி யளிக்கத் தேவைப்படாத கிழவர்களையும் குழந்தைகளையும் உள்ளே அனுப்பி வைக் கிறார்கள். மதுவிலக்கு சட்டங்களில் பூரண மாற்றம் தேவை. இப்போதுள்ள சட்டங்களி லும் மக்களுக்குப் பிரயோசனமில்லை'' என்று அழுத்தமாகவே கூறினர் ராமச்சந்திரன்.

இவர் தம் காலத்தில் சிறைச்சாலைகளில் கல்வி வசதியைப் பெருக்க முழு முயற்சிகள் செய்தார். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பள்ளித் தொடர்பு விட்டிருந்த பல வாலிபர்களுக்குப் படிப்பில் ருசி ஏற்படச் செய்து சிலரைப் பரீட்சைகள் எழுதவும் உதவி செய்தார்.

''ஆங்கிலம் வெள்ளைக்காரன் சொத்து இல்லே! அது யாருக்கும் தனி உடைமை என்று சொல்ல முடியாது. உலகத்துக்குப் பொதுவான மொழி. அதை ஒழி என்பது அபத்தம்.''

''நம் நாட்டிலே உணவுப் பற்றாக்குறை என்று சொல்வது ரொம்பத் தப்பிதமான விஷயம்! நிறைய உணவுக்கு வழி இருக் கிறது. ஆனால் நாம் உபயோகிப்பதைவிடப் பல மடங்கு அதிகமாக 'வேஸ்ட்' பண்ணு கிறோம். வியர்த்தமாவதைத் தடுத்தால் வெளிநாடுகளின் உதவியை நாடவேண்டி யிருக்காது.''

''எல்லா விசாரணைகளுமே ஜூரிகளின் உதவிகொண்டுதான் நடக்கவேண்டும். அந்த முறையை நிறுத்தினது ரொம்பத் தப்பு.''

இந்த ரீதியில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் திரு ராமச்சந்திரன் மாம்பலம் தேனும்பேட்டை வட்டாரங் களில் தம் ஸ்போர்ட்ஸ் மாடல் சைக்கிளில் அமர்ந்து டென்னிசனையோ மன்வெள்ளி யையோ, காளிதாஸனையோ கதேயையோ தானாக முணுமுணுத்துக் கொண்டு போவ தைப் பார்க்கலாம். அறுபது வயதைக் கடந்த அனுபவமும் ஆற்றலும், முப்பது வயது ஆர்வமும் இருபது வயதுத் துடிப்பும் நிறைந்த இந்த மனிதரைச் சந்தித்துத் திரும் பியபோது பல உயர்ந்த காப்பியங்கள், காவியங்கள் நிறைந்த புத்தகசாலைக்குள் நுழைந்து அத்தனை புத்தகங்களையும் புரட்டிப் பார்த்த பிரமை ஏற்பட்டது.

''பேட்டிக்குப் பதினைந்து நிமிடங்கள் போதுமல்லவா?'' என்றுதான் ஆரம்பித் தார். பத்துத் தடவைகள் அந்தப் பதினைந்து நிமிட காலம் தொடர்ந்து ஓடியது. அவர் எழுந்தார். எனக்கு என்னவோ முதல் பதினைந்து நிமிடம் இன்னும் தாண்டவில்லை என்ற நினைப்புத்தான் இருந்தது.

— கோமதி ஸ்வாமிநாதன்



பழமையவொளி செறிந்திருக்கும் பழங்கந்தை யுடையைப்
பண்டிருந்த நிறத்திலொரு பகுதிவிளங் குறவே
இழையமுழங் காலளவே எடுத்தணிந்து வருவாள்
எங்கும்வரும் குறக்குடியின் எழில்கனிந்த மகளே!
காலிகளைக் கன்றுகளைக் காராட்டி னத்தைக்
கானகத்துப் புற்றரையிற் கருத்துறவே மேய்ப்பாள்
மாலையிலே கரும்புலிபோல் வளருமிருள் வருமுன்
வழிதெரிந்து மற்றவற்றை மடக்கி நடத்துவளே.
பொங்குபல ஆண்டுகளாய்ப் போங்கால நதியில்
பொருக்கெனவே மாறுபடும் போக்குடைய பெருக்கில்
கங்குகரை யற்றபெருங் கடல்புகுதும் நிலையிற்
காலமெனும் கணக்கறியாக் கடுமாயம் உளதே
மூலமுற அமைந்தவந்த முழுமாயத் துடனே
முனைந்ததுணைப் பிறவியென மொழிந்திடலா மவளைக்
காலமெனும் கணக்கறியாக் கலத்தினிலே யவள்தான்
கலிவுறவே வாழ்வுநலம் காண்பதுவு முண்டலவோ?

— "சித்ரா"

காட்சி 1



[திரிலோக சஞ்சார ஏலக் கம்பெனி மேடைமேல் நின்று ஏலம் போட்டுக் கொண்டிருக்கிறான் சாரதி.]

சாரதி: ஹலோ மகாஜனங்களே! நாரீமணிகள் நிறைந்த இந்தச் சபையிலே புடவை ஒன்றை ஏலம் விடப் போகிறேன். இப்போ தகதகன்னு ஜொலிப்பது இந்தச் சேலை மட்டுமல்ல, உங்கள் கண்களும்தான். இதைப் பார்த்ததும் அவ்வளவு ஆச்சரியம் உங்களுக்கு! ஒரிஜினல் பன்னெண்டு முழம் சேலை எந்தக் கடைக்குப் போனாலும் முழத்துக்கு முப்பது ரூபா சொல்லி வாங்கிடுவான். இங்கே ஓர் ரூபா...! ஓர் ரூபா...!

ஒருவர்: பன்னெண்டு முழம் சரியா யிருக்குமா?

சாரதி: சந்தேகம் எதுக்குங்க, அளந்து விடுவோம்.

[சேலையைப் பிரிக்கிறான். தலை நுழையும் அளவுக்கு ஒரு பொத்தல் காணப்படுகிறது அதில். ஜனக் கூட்டம் சிரிக்கிறது. சாரதி சற்றும் தயங்காமல் சேலையை இரண்டாகக் கிழிக்கிறான்.]





சாரதி: நாகரிக கனவான்கள் போட்டுக் கொள்ளும் நவீன ஷர்ட்டிங் கிளாத்! ரெண்டு சட்டை தைக்கலாம். ஓர் ரூபா... ஓர் ரூபா...

ஒருவர்: பத்து ரூபா!

சாரதி: பத்து ரூபா...ஒரு தரம்...ரெண்டு தரம்...

இன்னொருவர்: பதினைஞ்சுரூபா...

சாரதி: பதினைஞ்சு ரூபா...மூணு தரம் விட்டாச்சு...

[துணியைக் கொடுத்துவிட்டு ஒரு ரேடியோவைத் தூக்கி வருகிறான்.]

அடுத்தபடியாக ஒரு ரேடியோ! அருமையான செட்! உலகத்திலே உள்ள அத்தனை ஸ்டேஷன்களையும் எடுக்கும்; ரெண்டு வச்சா பக்கத்து வீட்டுக்காரன் உயிரையும் எடுக்கும்!

ஒருவர்: என்ன பிராண்டு அது?

சாரதி: ஜகதலப்பிரதாபன் பிராண்டு சார்! அதாவது இந்த ரேடியோ பக்கத்திலே இருந்தால், நான்கு கன்னிகைகள் புடைசூழ நம்ம ஜகதலப்பிரதாபன் என்ன சுகம் அநுபவித்தானோ அது மாதிரி இருக்குமாம்! அதனால்தான் அந்தப் பேரு — கேளுங்க...ஓர் ரூபா....! ஓர் ரூபா.....!

ஒரு குரல்: நூறு ரூபா...

சாரதி: ஆ... அப்படிக் கூறு சார்! நூறு...

இன்னொரு குரல்: நூத்தி ஐம்பது...

பஞ்சவர்ணம்: இருநூறு ரூபா...

சாரதி: தேங்க்யூ மேடம் — இருநூறு ரூபா ஒரு தரம்...

இன்னொரு குரல்: இருநூத்தி ஐம்பது...!

பஞ்சவர்ணம்: மூந்நூறு...

சாரதி (மெதுவாக): பாவம், இந்த ஓட்டைக்கு இவ்வளவு போட்டியா? உம் மூந்நூறு ரூபா.... ஒரு தரம்.... ரெண்டு தரம்... மூணு தரம்.... விட்டாச்சு!

பஞ்ச (பதறி): ஐயயோ — பர்ஸைக் காணுமே — எக்ஸ்க்யூஸ்மி! நாளைக்கு வந்து பணத்தைக் கட்டிவிட்டு ரேடியோவை எடுத்துக்கொண்டு போகிறேன்...

சாரதி: பரவாயில்லே. விலாசத்தைச் சொல்லிவிட்டுப் போங்க. நாளைக்கு கம்பெனிப் பையனே உங்க வீட்டுக்கு ரேடியோவை எடுத்து வருவான்.

பஞ்ச: என் பெயர் பஞ்சவர்ணம்! அப்பா பெயர் நீலவர்ணம்...

சாரதி: என்னது?

பஞ்ச: சாரி! நீலமேகம், லெதர் பங்களா, அபிராமபுரம்....

சாரதி: அடடே! தோல் மண்டி நீலமேகத்தோட மகளா நீங்க? அவரும் அடிக்கடி வருவார்; பார்த்திருக்கிறேன்.

பஞ்ச: நானும் பார்த்திருக்கிறேன்.

சாரதி: யாரை?

காட்சி 2

[இரண்டு நாட்களுக்குப் பிறகு — சாரதியின் அறை — நண்பன் வேணு வந்து சேருகிறான்.]

வேணு: என்னடா வைத்தியம் தெளிஞ்சுதா?

சாரதி: இல்லே. காதல் வைத்தியம் அவ்வளவு சீக்கிரம் தெளியுமா? டேய் வேணு! நீ மட்டும் அவளைப் பார்க்கணும்! அசல் பஞ்சவர்ணக் கிளியேதான்...

வேணு: அட கோரமே! மூக்கு அவ்வளவு சிவப்பாவா இருக்கும்?

சாரதி: கோரமா? வெட்டி எடுத்து மியூஸியத்திலே வைக்க அழகு பார்க்க வேண்டிய மூக்குடா அது!...

வேணு: சாரதி! வேண்டாம். வாபஸ் வாங்கிடு. அந்தத் தோல் மண்டி நீலமேகம் மாட்டுத் தோல், ஆட்டுத் தோல் எல்லாம் ஏற்றுமதி செய்யும் ஆசாமி. நீ அவர் பெண்ணைக் காதலிப்பது தெரிஞ்சுதோ உன் தோலையும் உரிக்க அனுப்பி விடுவார்!

சாரதி: போடா, என்னை என்ன வெங்காயம்னு நெனைச்சிக்கிட்டியோ? லட்சாதிபதி நீலமேகத்தோட பெண்ணை ஒரு சாதாரண ஏலக்காரன் காதலிச்சா எடுபடாதுன்னு தான் அந்தப் பஞ்சவர்ணத்தைச் சந்திக்க ஒரு கதை அளந்திருக்கேன். கதைச் சுருக்கமாவது: நான் ஒரு பணக்காரரின் மகன். அப்பாவிடம் கோபித்துக் கொண்டு வந்து இப்படி ஏலக் கம்பெனியில் வேலை செய்கிறேன். நேற்று திடீரென்று என் அப்பா தோன்றி....

வேணு: தூணிலிருந்தா? துரும்பிலிருந்தா?

சாரதி: கதையைக் கேளுடா. என்னைச் சமாதானப்படுத்தி ஏலக் கம்பெனியிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து விட்டார்.

வேணு: இதை அவள் நம்பினாளா?

காதல் ஒரே தரம்

ஏ.எஸ். சுந்தரராஜன்

பஞ்ச: ஏலம் போடும் பல பேரை. ஆனால் உங்க மாதிரி சங்கடமான சமயத்திலே கூட 'ஜோக்' அடிக்கச் சமாளிப்பவரைப் பார்த்ததில்லே. உண்மையில் நீங்க ஒரு சிறந்த கலைஞர்!

சாரதி: ஹா!... நீங்க இப்போ சொன்ன 'ஜோக்'கை நினைக்கத் தனிமையிலே யிருக்கும் போது நான் கட்டாயம் சிரிப்பேன். போய்விட்டு வாங்க....

[பஞ்சவர்ணம் போகிறாள்.]

சாரதி: பெரியோர்களே! கடைசியாக இந்தக் காதலர்கள் சிலையை ஏலம் விடுவதாக இருந்தேன். இப்போ எனக்கே இது தேவையாயிருக்கு.... [கூட்டத்தினர் சிரிக்கின்றனர்.] மறுபடியும் ஏலம் வழக்கம்போல் நாளை மாலை ஆரம்பமாகும். வணக்கம்!

சாரதி: ஹூம்! ரசம் போன கண்ணாடியையும், காலே இல்லாத நாற்காலியையும் ஏலம் போட்டுக் காட்டும் எனக்கு அந்தப் பஞ்சவர்ணம் நம்பும்படி பேசுவது ஒரு காரியமா? அது மட்டுமல்ல; என்னுடைய நடையுடை பாவனைகளையும் பணக்காரத் தோரணையிலே மாத்திக்கிட்டேன். இரு நூறு ரூபாய்க்கு ஒரு லேடீஸ் வாட்ச் வாங்கி அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தபோது மிகுந்த மகிழ்ச்சியோடு என்னைப் பார்த்தாள்!

வேணு: சாரதி! பொய் பேசறதுங்கறது கம்பி மேலே நடப்பது மாதிரி. நீ சாமர்த்தியமாகத்தான் 'பாலன்ஸ்' பண்றே. ஆனால் நீ செய்யற அளவுக்கு உன் 'பாங்க் பாலன்ஸ்' விழுந்துடுமேடா!

சாரதி: கவலையில்லே: காதலி ஒருத்தியின் கடைக்கண் வீச்சு முன் காசு பணம் எல்லாம் வெறும் தூசு. அப்பனே...

வேணு: சரிதான். கவிதை நடையிலே எனக்குப் பதில் சொல்ல ஆரம்பிச்சுட்டியா? சரியான முத்தல்! உம்... எங்கே புறப்பாடு? சினிமாவா? பீச்சா?

சாரதி: அதெல்லாம் பஞ்சவர்ணத்தைச் சந்திச்ச பிறகுதான் தெரியும். [போகிறான்]

வேணு: அடப் பாவி! நான் கல்யாணம் செய்துக்க நினைச்சிருந்த பெண்ணையே போய்க் காதலிக்கத் தொடங்கிட்டியேடா... இரு. இரு. உன் காதலை உருப்படாமெ செய்ய எனக்கு வழி தெரியும். உன் பணக்கார வேஷத்தை நீலமேகத்திடம் சொல்லி அம்பலப்படுத்தி விட்டால்...? கரெக்ட்... சரியான யோசனை.

[போகிறான்.]

காட்சி 3

[கடற்கரை. சாரதியும் பஞ்சவர்ணமும் அமர்ந்திருக்கின்றனர்.]

சாரதி: அருயிரே! உன்னைக் கண்டாலே போதை தலைக்கேறியது போல் என் சிந்தை மயங்குகிறது. உன் கனிமொழியிலே போதை: சுழலும் கருவிழிகளிலே போதை...

பஞ்ச: ஐயோ, சும்மா போதை போதை என்று சொல்லாதீங்க. யாராவது போலீஸ் காரன் காதில் விழப் போகுது...!

சாரதி: சித்தர்களையும் பித்தர்களையும் போல் காதலனும் அச்சத்தை அறிய மாட்டான் கண்ணே!

பஞ்ச: உங்களை நான் நம்பலாமா? இதோ பாருங்கள். இந்த மணல்களெல்லாம் ஒரு காலத்தில் அலைகளின் அணைப்பில் புரண்டு கொண்டிருந்தவைதானே? இன்று ஒதுக்கப் பட்டுக் கிடக்கிறது. நீங்களும் அது மாதிரி என்னைக் கைவிட்டுவிட மாட்டீங்களே..

சாரதி: அதெப்படிச் சொல்ல முடியும்? இங்கிருந்து ரோட்டுக்குப் போனதும் உன்னைக் கைவிட்டுவிட வேண்டியிருக்குமே. ஏன்னா உன் பங்களாவும், என் பங்களாவும் வெவ் வேறு திசையிலே இருக்கு...

பஞ்ச: எப்பொழுதும் குறும்புதான் உங் களுக்கு!

சாரதி: ஏன், என்னுடைய குறும்புப் பேச்சு உனக்குப் பிடிக்கலியா?

பஞ்ச: எனக்கு எதுவும் பிடிக்கவில்லே. உங்களையும்தான்....

சாரதி: நிஜமாகத்தான் சொல்றியா? இன் னொரு தரம் சொன்னே... இப்படியே கட லிலே குதிச்சு...

பஞ்ச: உயிரை விட்டுடுவீங்களா?

சாரதி: சே, சே, நம்ப காதலுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வீட்டுக்குப் பறந் துடுவேன்...

பஞ்ச: போதும், போதும். என்னைச் சிரிக்க வைக்கணும்னு பயங்கரமான ஹாஸ்யமெல் லாம் சொல்லாதீங்க... உம் நம்முடைய அடுத்த புரோகிராம்?

சாரதி: அவ்விடத்து உத்தரவுப்படியே ஆமென்!.....

பஞ்ச: நேத்து ஹோட்டலுக்குப் போயி விட்டு, சினிமாவுக்குப் போனோமல்லவா? இன்று சினிமாவுக்குப் போய்விட்டு ஹோட்ட லுக்குப் போவோம்:

சாரதி (மனத்துக்குள்): அப்புறம் நான் மட்டும் வட்டிக் கடைக்குப் போகிறேன். மோதிரத்தை அடகு வைக்க...

பஞ்ச: பெரிய பணக்காரர், மூணு கார் இருக்குதுன்னு சொன்னீங்க. காரை எடுத் துக்கொண்டு வரக்கூடாதா?

சாரதி: காரா? ஒரு கார் ரிப்பேர். ஒரு காரை யாரோ என் சொந்தக்காரர் எடுத்துப் போயிருக்கார். இன்னொரு கார்...

பஞ்ச: நன்னுமாடல்... உங்களைப் போல.. உம்... உம்... வேகமாய் நடங்க.. டாக்ஸி யைப் பிடிப்போம்.

காட்சி 4

[சாரதியின் அறை: நாற்காலி ஒன்றில் ஏதோ சிந்தனையுடன் அமர்ந்திருக் கிறான் சாரதி.]

சாரதி (மெல்லிய குரலில்): சே! வேலையை விட்டது மாபெரும் முட்டாள்தனம். பத்தே நாள்லே கையிருப்பு அவ்வளவும் கரைஞ்சு போச்சே? இன்னும் ஹோட்டலுக்கும் லாண் டரிக்கும் கொடுத்தாகணும். ரூம் வாடகை யும் அப்படியே நிக்குது. ஐயோ... இந்த மாசத்தை எப்படிச் சமாளிக்கப் போறேனோ தெரியலே...

[வீட்டுக்காரர் வருகிறார்.]

வீட்டுக்காரர்: என்ன தம்பி, காலண்ட ர்லே தேதி கிழிக்காமெ வெச்சிருக்கே..; நான் ஆகலேன்னு எனக்குக் காண்பிக்கவா?

சாரதி: அப்படியெல்லாம் ஒன்னும் இல் லீங்க. ஏதோ மறதியா...

வீட்டு: என்னைக் கண்டதும் ஞாபகம் வந்திச்சு இல்லே. வாடகைப் பணத்தைக் கொண்டா!

சாரதி: வந்து...

வீட்டு: இழுக்காதே. எனக்குத் தாங்காது: ஒவ்வொரு மாசமும் மூணாம் தேதிக்குள் வாடகையைக் கொடுக்கணும். இல்லாவிட் டால் காலி செய்யக் கடவது என்று நமக் குள்ளே ஒப்பந்தம் இருக்கு. மறந்துவிடாதே.

சாரதி: நீங்க பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும். அடுத்த மாசம் சேர்த்துக் கொடுத்துடறேன்.

வீட்டு: அதுதான் இங்கே நடக்காது: ரூமைக் காலிபண்ணு. இல்லாவிட்டால் நான் காலி பண்ணிடுவேன். டேய், முனியா, வேலாண்டி! சாமானையெல்லாம் தூக்கி வெளியிலே போடுங்கடா.

சாரதி (கோபமாக): யார்ராவன் அறைக் குள்ளே கால் வைக்கிறவன்? டேய்! சோணா சலம் வாத்தியார்கிட்டே மூணு வருஷம் பாணா தடி சுழற்றக் கத்துக்கிட்டவன்டா நான். எங்கே. ஒரு துரும்பையாவது தொடுங்க, பார்ப்போம்.

[சாரதி ஓடிப் போய் ஒரு கம்புடன் வந்து நிற்கவே வேலைக்காரர்கள் தயங்குகிறார்கள்.]

வீட்டு: தம்பி! அடாவடித்தனம் பண்ணாதே. போலீசைக் கூப்பிடுவேன். ஆமாம்.

சாரதி: நீங்க போலீசை மட்டும்தானே கூப்பிடுவீங்க? நான் உங்க மேலே மான நஷ்ட வழக்கே போடுவேன். தெருவிலே எத்தனை பேர் வேடிக்கை பார்க்கிறாங்க பாருங்க. ஐயோ! பனிக்கட்டி மாதிரி உருகுதே என் மானம், மரியாதை யெல்லாம்...

வீட்டு: இதென்னடா வம்பு.. இந்தாப்பா. அடுத்த மாசமாவது ஒழுங்காக் கொடுத்துடு வாடகையை... நான் வரேன்...

[கூம்பிய முகத்துடன் போகிறார்.]

சாரதி: அப்பாடா... ஒரு வழியாக வீட்டுக்காரரைச் சமாளிச்சாச்சு...

[சட்டிக்காரன் வருகிறான்.]

சட்டிக்காரன்: என்னுங்கோய்யா...

சாரதி (திடுக்கிட்டு): ஆ... சட்டிக்காரன்! இவன்கிட்டே பாணுத்தடி. குஸ்தி எதுவும் செல்லாதே.... உம்.... ரைட்.... அதுதான் சரி... வாங்கோய்யா... எவ்வளவு பாக்கி?

சட்டி: டூ ஹண்ட்ரட் ருப்யா ஸாப்!

சாரதி: ஹா! நூத்தி இருபது ரூபாய் தானே வாங்கினேன். சரிதான். உன் பணத்துக்கு மட்டும் ரெட்டைக் கொம்பா?

சட்டி: ரெட்டைக் கொம்பு?

சாரதி: அதாவது டபுள் இன்ட்ரஸ்ட்டான்னு கேட்டேன். சரி. இப்போ பணம் இல்லே. பிடி இதை...

[மோதிரம் கைக்கடிகாரம் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுக்கிறான்]

சட்டி: என்ன ஸாப் இதெல்லாம்...?

சாரதி: வாட்ச் மட்டும் நூத்தி ஐம்பது ரூபா. ரெண்டு மோதிரமும் நூறு ரூபா. உன் பாக்கி போக நீயே எனக்கு ஐம்பது ரூபா கொடுக்கணும் தெரியுமா?

சட்டி: அச்சா ஸாப்....

[பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டுப் போகிறான்.]

சாரதி: கடன்காரனுங்க எல்லாம் நம்ப வீட்டு முன்னாடியே டேரா போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்காணு என்ன? ஒழுங்கிலே வரானுங்களே...

[பஞ்சவர்ணம், நீலமேகம், வேணு— மூவரும் வருகிறார்கள்.]

நீலமேகம்: வணக்கம்!

சாரதி (திகைப்புடன்): நீங்களா... நீங்க எப்படி....?

வேணு: வீட்டைக் கண்டுபிடிச்சாங்கன்னு கேட்கிறியா? நான்தான் அழைத்து வந்தேன்.

சாரதி (மெதுவாக): நீ நாசமாகப் போக. (அசட்டுச் சிரிப்புடன்) உட்காருங்க... நேரா இப்போதுதான் வர்றீங்களா?

நீலமேகம்: இல்லே. வந்து அரை மணி நேரமாச்சு.

பஞ்ச: அதாவது நீங்க வீட்டுக்காரர்கிட்டே ஜெம்பம், குஸ்தி எல்லாம் ஆடிக் காட்டினீங்களே..... அப்போதே வந்து சேர்ந்துவிட்டோம்.

நீலமேகம்: கொஞ்சம் மறைவா நின்னு எல்லாத்தையும் கவனிச்சுட்டுத்தான் இருந்தோம். நீ ஒரு பிறவி நடிகனப்பா.

சாரதி: சார்! சார்!... நான் உண்மையிலேயே ஏழைதான்! காதல் மயக்கத்திலே உங்க மகளிடம் ஏதேதோ கற்பனையாப் பேசி ஏமாத்திட்டேன். என்னை விட்டுடுங்க சார்...

நீலமே: விடுவதா? உன்னைப் போல் ஓர் ஆளைத்தானே மூணு வருஷங்களாக நான் தேடிக்கிட்டிருக்கேன். சாரதி! நீ ஏழை என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லே. கடன் தொல்லைகள் ஏற்பட்டால் சாம, தான, பேத, தண்டம் ஆகிய எல்லா வழிகளிலும் சமாளிக்கும் திறமை உன்னிடம் இருக்கு. அதுதான் எனக்குத் தேவை.

சாரதி: கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க சார்....

நீலமே: சாரதி! நான் ஒரு லட்சாதிபதி என்று உனக்குத் தெரியும். ஆனால் ரெண்டு லட்சத்துக்குக் கடன்காரன்னு உனக்குத் தெரியாது. என்னுடைய கடன்காரர்களைச் சமாளிக்கும் சாதுர்யம் உன் ஒருத்தனுக்குத்தான் இருக்கு. அதனாலேதான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கேன். இனி என் கம்பெனிக்கு நீயே மானேஜர்; என் பெண்ணுக்கு நீயே மாப்பிள்ளே!

[வேணு திடீரென்று மயக்கம் போட்டுக் கீழே விழுகிறான். எல்லாரும் திகைக்கிறார்கள்.]



பள்ளியில் பயிற்சி பெற்ற இருநூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் தொழிலாளர் நல அதிகாரியாகவும், சமூக சேவை நிலையங்களின் அதிகாரிகளாகவும் பணியாற்றுகிறார்கள் என்பது இந்தப் பள்ளியின் பெருமையை எடுத்தியம்புகிறது.

சமூக சேவைப் பள்ளியின் டைரக்டர் திரு ஜார்ஜிடம், ''சமூக சேவைப் பள்ளியில் சேருவதற்கு எது வரையில் படித்திருக்க வேண்டும்?'' என்று கேட்டோம்.

''எங்கள் பள்ளியில் விஞ்ஞான முறைப்படி இரண்டு வருஷங்கள் சமூக சேவைப் பயிற்சி அளிக்கிறோம். இதில் சேரக் குறைந்தது ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும். தொழிலாளர் நலன், நிர்வாகம், கிராம நலன், இளம் குற்றவாளி மனநிலை, குடும்பக் குழந்தை நலன் இப்படி விரிந்த முறையில் பயிற்சி அவர்களுக்குக் கிட்டுகிறது. பாடங்களைப் போதிப்பதோடு அவர்கள் சமூக சேவை நிலையங்களில் நேரிடையான அனுபவமும் பெறுகிறார்கள்.''

''சமூக சேவை என்பது தானாகவே ஏற்பட வேண்டிய காரியமல்லவா? அதற்குப் பயிற்சி எதற்கு?'' என்ற சந்தேகத்தை அவரிடம் எழுப்பினோம்.

நங்கையர் செய்யும் நற்பணிகள்



பெண்களை அடுக்களை ராஜ்யத்துக்குள் அடக்கி, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று முழங்கப்பட்ட காலம். இந்தக் காலத்தில் பெண்களின் விடுதலைக்குப் பாடுபட்டவர்களில் முக்கியமானவர் ஸ்ரீமதி மார்கரெட் கஸின்ஸ். இவருடைய சேவைகளையும் பேச்சுக்களையும் கேட்டுச் சமூக சேவை செய்ய வேண்டும் என்று ஆர்வம் கொண்டாள் உதகமண்டலத்தில் தேசிய கான்வென்டில் ஸீனியர் கேம்பிரிட்ஜ் பயின்ற மாணவி மேரி. பள்ளிப் பருவத்திலேயே மேரிக்குச் சாரணர் படையிலும், செஞ்சிலுவைச் சங்கத்திலும் ஈடுபாடு அதிகம். ஸ்ரீமதி வாடியாவும் மற்றும் ஐரோப்பியப் பெண்மணிகளும் சென்னையில் சேவாமந்திர் (Guild of Service) தொடங்கி அரசியல் கலப்பில்லாது பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் அங்கஹீனமுள்ளவர்களுக்கும் சமூக சேவை செய்து வந்தனர். இந்தச் சேவாமந்திரின் காரியதரிசியாகப் பணியாற்றும் பெருமை ஸ்ரீமதி மேரி க்ளப்வாலாவுக்குக் கிடைத்தது. இன்று எண்ணற்ற சேவா சங்கங்களின் பொறுப்பேற்று நிர்வகித்து வரும் பத்மஸ்ரீ மேரி க்ளப்வாலா ஜாதவ்வின் தொண்டின் சிகரமாகத் திகழ்வது சென்னை சமூக சேவைப் பள்ளி (Madras School Of Social Work). சர்க்காரின் சிவப்பு நாடாக்களுக்குள் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்த இந்தச் சமூக சேவைப் பள்ளியைத் தைரியமாகப் பெரு முயற்சியுடன் இந்திய சமூக சேவைக் கழகத்தின் சென்னைக் கிளை, கில்ட் ஆப் சர்வீஸ் சார்பில் தொடங்கி விட்டார் ஸ்ரீமதி மேரி க்ளப்வாலா. சேத்துப்பட்டில் 1952ம் வருஷம் ஓர் ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளியை அப்பொழுது முதன் மந்திரியாக இருந்த ராஜாஜி அவர்கள் தம் பொற்கரத்தால் தொடங்கி வைத்தார்கள். இருபத்தைந்து மாணவர்களுடனும், ராணி மேரி கல்லூரியின் ரிடையர்ட் பிரின்ஸிபால் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளின் கௌரவ டைரக்டர் ஆதரவையும் பெற்று இந்தச் சமூக சேவைப் பள்ளி பதினைந்து வருஷங்களில் பல்மடங்கு பெருகி வளர்ந்துள்ளது. இன்று எண்பது மாணவர்கள் சமூக சேவை ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தப்

''நீங்கள் கேட்டபடியேதான் பலரும் கேட்கிறார்கள். விஞ்ஞான முறைப்படி சமூக சேவை என்பது புரியாத புதிராக இருக்கிறது. அதை ஒரு நிகழ்ச்சி மூலம் விளக்குகிறேன். ஒவ்வொருவர் வீட்டிலும் பலவித புதுப் பிரச்னைகள் எழும். ஒரு வீட்டில் முதல் குழந்தைக்குத் தாயாரின் அன்பு முழுதும் கிடைத்து வந்தது. இரண்டாம் குழந்தை பிறந்ததும் தாயாரின் அன்பு இரண்டாம் குழந்தையின் பக்கமே திரும்பி விட்டது. இதனால் முதல் குழந்தை அன்பும் அரவணைப்பும் கிட்டாமல் ஏங்கிப் போய் விட்டது. கடைசியில் பெரியவனான முதல் குழந்தைக்குப் பெரும் ஜுரமே வந்து விட்டது. தன் முதல் குழந்தைக்கு ஜுரம் என்றதும் தாயார் அதன் அருகிலேயே இருந்து பணிவிடை செய்து வந்தாள். 'ஆஹா! அம்மா ஜுரம் இருப்பதனால்தானே, நம் பக்கத்திலேயே இருக்கிறாள். எப்போதும் எனக்கு ஜுரமிருந்தால் நல்லதல்லவா?' என்ற நினைப்பில் இருந்தது அந்தப் பச்சிளம் குழந்தை. குழந்தைக்கு ஜுரம் அதிகம் என்றும், பச்சைத் தண்ணீர் அருந்தக்கூடாது என்றும் டாக்டர் சொல்லி விட்டுப் போயிருந்தது அதற்கு நினைவு வந்தது. அந்தப் பச்சிளம் குழந்தை பச்சைத் தண்ணீர் சாப்பிட்டால், விடாமல் தனக்கு ஜுரமிருக்கும் என்று கருதி, தாயார் அருகில் இல்லாதபோது எழுந்து போய்க் குடித்து விட்டது. கடைசியில் அந்தக் குழந்தைக்கு ஜன்னி பிறந்து இறந்து போய் விட்டது. தன் முதல் குழந்தை தன் அன்பு புறக்கணிக்கப்பட்டதாலேயே, இந்தக் கதிக்கு உள்ளாயிற்று என்று அந்தத் தாயாருக்குத் தெரியுமா? இந்த மாதிரி பிரச்னைகளையெல்லாம் விஞ்ஞான முறைப்படி எங்கள் சமூக சேவைப் பள்ளியில் பயின்றவர்கள் ஆராய்ந்து வருவதால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சென்று அங்குள்ள பிரச்னைகளை அவர்கள் அறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பார்கள்!'' என்று பெருமையுடன் கூறினார் டைரக்டர் ஜார்ஜ்.

''குழந்தைகள் புரியாப் புதிர்தான்!''

''அது உண்மை. எங்கள் வீட்டிலேயே நடந்த சம்பவம். எங்கள் வீட்டில் சின்னக் குழந்தை. அதனோடு தினமும் எங்கள் வேலைக்காரக் குழந்தையும் விளையாடிக் கொண்டிருக்கும். ஒரு நாள் வேலைக்காரனை வேலையை விட்டு நீக்கி விட்டோம். அதன் பிறகு எங்கள் வீட்டில் எப்பொழுதும் குழந்தை இரவில் வாய் விட்டுச் சொல்லாமல் அழுதழுது கண்ணீர் சிந்தி மெலிந்து வருவதைக் கண்டோம். குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று டாக்டரிடம் காண்பிக்க வேண்டும் என்றாள் என் மனைவி. ஆனால் குழந்தையின் உடலைப் பரிசோதித்தால் ஒரு வியாதியும் இல்லை. பிறகு குழந்தையின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். அதனுடைய விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்தபோது அது அவற்றை ஏறிட்டுப் பார்க்கவில்லை. பிறகுதான் அதனோடு விளையாட அந்த வேலைக்காரனின் குழந்தை இல்லை என்பது நினைவுக்கு வந்தது. என் குழந்தையை அதட்டி உருட்டி அதன் அழுகையைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். அது நிரந்தரப் பரிகாரமாகுமா? கடைசியில் வீட்டை விட்டு வெளியேறிய அந்த வேலைக்காரனைத் தேடிப் பிடித்து, அதிக சம்பளம்கொடுத்து அழைத்து வந்தேன். அந்த வேலைக்காரக் குழந்தையும் என் குழந்தையோடு விளையாடத் தொடங்கியது. அதனுடைய துயரம் நீங்கியதும் அதன் உடல் இளைப்பு நீங்கி விட்டது. நாங்கள் குழந்தைகள் நல ஆராய்ச்சி செய்து வருவது மாதிரி சென்னை நகரத்தில் பிச்சைக்காரர்கள் பிரச்னையைக் குறித்தும் ஆராய்ச்சி நடத்தினோம். எங்களது ஆராய்ச்சியைக் கொண்டே சென்னை சர்க்கார் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு தேடியது. இது நாங்கள் பெருமைப்படக்கூடிய காரியமாகும்!''

''சமூக சேவைப் பயிற்சி தவிர வேறு பயிற்சிகள் ஏதாவது இருக்கிறதா?''

''ஓ! குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களும் உள்ளன. மாணவர்கள் நலம் குறித்துப் பயிற்சி வகுப்பு நடந்து வருகிறது. இதோடு கண்காணிப்பு, போலீஸ், ஜெயில் இலாகா அதிகாரிகளுக்குக் குற்ற பரம்பரையினரைத் திருத்தும் முறைகள் பற்றிய பயிற்சியும் இப்போது தொடங்கியுள்ளோம்!''

''பள்ளியை நடத்த உங்களுக்குச் சர்க்கார் மான்யம் நிறைய கிடைக்குமே?''

''சர்க்கார் பலவித பயிற்சிகளுக்கும், பிரச்னைகளுக்கும் எங்கள் உதவியை நாடுகிறார்கள். ஆனால் அந்த வேகமும் உற்சாகமும் மான்யம் வழங்குவதில் இல்லை'' என்ற தாபத்தை வெளிப்படுத்தினார் ஜார்ஜ். இந்தச் சமூக சேவைப் பள்ளி அதன் தொண்டினால் ஸ்ரீமதி மேரி கிளப்வாலா ஜாதவ்வின் நினைவை என்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

— சாமு





பிப்ரவரி
4
முதல்
சென்னை சித்ரா · பாரத்
புவனேஸ்வரி · நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்
அளிக்கும்
தேவரின்
காட்டுராணி
டைரக்ஷன் · M.A. திருமுகம்
கதை, தயாரிப்பு
சாண்டோ · M.M.A. சின்னப்பா தேவர்
ELEGANT



புதுப் பிரசுரங்கள்



வாசகர் வட்டம்!

மேல்நாடுகளில் எவ்வளவுக்கெவ்வளவு புத்தகங்கள் வெளியாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வசதிகளும் உள்ளன. ''புக் கிளப்'' என்ற புத்தக சங்கங்கள் ஒவ்வொரு மாதமும் பல்வேறு பிரசுராலயங்கள் வெளியிடும் புத்தகங்களைப் பரிசீலனை செய்து, 'வாசகர்களுக்கு இது இம்மாதம் வெளியான நவீனங்களில் சிறந்தது. இது இம்மாதம் வெளியான கட்டுரை நூல்களில் சிறந்தது' என்று சிபாரிசு செய்து அனுப்புகின்றன. இப்படியொரு புத்தக சங்கத்துக்கு அங்கத்தினராக இருந்து விட்டால், வீட்டில் ஒரு சிரமமுமின்றி நல்ல புத்தகாலயம் உருவாகி விடும்! இப்படியொரு புத்தக சங்கத்தின் சிபாரிசு பெற்ற நூல் என்றால், மற்ற வாசகர்களிடையேயும் சிறந்த 'மவுசு' உண்டு. புத்தகங்களும் நன்றாக விற்பனையாகும். ஆகவே, பிரசுரகர்த்தர்களுக்கும், இத்தகைய புத்தகங்களின் சிபாரிசு பெறத்தக்க புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற ஆவல்.

காலஞ்சென்ற தேச பக்தர் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தியின் புதல்வி செள. லக்ஷ்மியும் அவருடைய கணவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து இத்தகைய நல்ல வசதியைத் தமிழ் பேசும் மக்களுக்கு இப்பொழுது வழங்கியிருக்கிறார்கள். இவர்கள் ''வாசகர் வட்டம்'' என்ற ஒரு புது முயற்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். இதில் ஆண்டுக்கு ரூபாய் இருபத்தைந்து செலுத்தி யார் வேண்டுமானாலும் அங்கத்தினராகச் சேரலாம். அப்படி அங்கத்தினரானவர்களுக்கு ஆண்டுக்கு ஆறு நல்ல புத்தகங்கள் கிடைக்கின்றன. நல்ல தாளில் நல்ல அச்சு எழுத்துக்களில் அச்சிட்டு, நல்ல பைண்டிங் செய்யப்பட்ட புத்தகங்கள் — வீடு தேடி வருகின்றன. இவ்வரிசையில் முதல் புத்தகமாக ராஜாஜி எழுதிய ஸோக்ரதர் என்ற புத்தகமும் மார்க் அரேலியரின் சிந்தனைகள் என்ற புத்தகமும் சேர்த்து, ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். ராஜாஜி எழுதிய நூல்களில் மிகப் பழமையானவை இவை. 1921ம் ஆண்டில் ஸோக்ரதரையும் 1928ல் மார்க் அரேலியரையும் ராஜாஜி மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுக்கு அளித்தார். அவை இன்றும் புத்தொளியுடன் பிரகாசிக்கின்றன. படிக்கப் படிக்க வாய்க்கும் மனத்துக்கும் அமுதமாக இனிக்கின்றன. இந்த அரிய நூல்களைத் தங்கள் முதல் வெளியீடாக அளித்ததிலிருந்தே லட்சுமி-கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய இலக்கிய ரசனை எவ்வளவு உயர்வானது என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

இந்தப் புதிய வெளியீட்டில் காலஞ்சென்ற தேசபக்தர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு ராஜாஜி எழுதிய பழைய கடிதம் ஒன்றை அப்படியே கையெழுத்துப் பிரதியாகவே பிரசுரித்திருக்கிறார்கள். அந்தக் கடிதமே இந்த இரு தலைவர்களிடையே இருந்த நெருங்கிய நேசத்தை எடுத்துக் காட்டுகிறது. அதைப் பார்க்கும் ஒவ்வொரு வாசகர்களும் மெய்சிலிர்க்காமலிரார்கள்!


அடுத்து, திருவாளர் வா. ச. ராமாமிருதம் எழுதிய 'புத்ர' என்ற நாவலும் க. அ. நீலகண்ட சாஸ்திரியாரின் 'தமிழர் பண்பாடும் வரலாறும்' என்ற நூலும், 'இன்றைய தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் கவிதை, கட்டுரை கொண்ட தொகுப்பு நூலும், 'விஞ்ஞானத்தின் புதிய எல்லைகள்' என்ற தலைப்பில் விஞ்ஞானக் கட்டுரைத் தொகுப்பும், தி. ஜானகிராமன் எழுதும் 'அம்மா வந்தாள்' என்ற புது நாவலும் (இரண்டு மாதத்துக்கு ஒரு புத்தகம் வீதம்) இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

தைத்திருநாளில் முதல் புத்தகமாகிய ராஜாஜியின் நூலைச் சில எழுத்தாள நண்பர்கள் கூடியிருந்த சிறு கூட்டத்தின் முன் ராஜாஜிக்கு ஸ்ரீமதி லட்சுமி அன்புடன் அளிக்க இப்புது முயற்சி தொடங்கியிருக்கிறது. இதை வெற்றி பெறச் செய்வது தமிழ் கூறும் நல்லுலகமெங்கிலுமுள்ள ''வாசகர் வட்டத்''தின் கடமையாகும்.

வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டி சாலை, சென்னை-17; சந்தா: ரூ: 25.


ராஜ யோகம்
21
சித்திரம்: செல்லம்
கதை: தம்பு
என்னைப்பற்றிப் பயம் எதற்கு? நான் அவரை மனோவசியம் செய்து...
நல்லவேளை! பத்திரமாய் வந்துவிட்டாய்!
மனோவசியமா?
ஆமாம். அது எனக்கு ஏற்கனவே கொஞ்சம் தெரியும். டாக்டர் புத்தகங்களையும் திருடிப்படித்து...
திருடினாயா? நீயா?
ஆமாம். டாக்டர் மனோ வசியம் செய்வதையும் கவனித்துக் கொண்டு வந்தேன்.
அவன் என்ன சொன்னான்?
சொல்கிறேன். என் தந்தையின் பெயர் கந்தசாமி ராஜா....
யோகம் ராஜா தன்னைப்பற்றிக் கூறியதை அப்படியே சொல்கிறாள்.


என்ன, பாடம் ஒப்புவிப்பதுபோல் ஒப்புவிக்கிறாய்?
அவன் இப்படித்தான் சொன்னான். அது ஏன் அப்படி என்றுதான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன்.
நர்ஸாங்கிஷோரமை விட்டு ஏன் அங்கே போனான்?
அதைப்பற்றி ஒரு சந்தேகம். அப்புறம் சொல்கிறேன். ஒரு சமயம் போலீஸ் போலும். ஒரு சமயம் காவாடி போலும் இருக்கிறான்!
வா! உன்னை அங்கே திரும்பக்கொண்டு போய் விடுகிறேன்.
சரி. நீ தினமும் அங்கே வந்துவிட்டுப் போகவேண்டும். சாயங்காலமாக வா! கிளம்பு.
வாருங்கள். யோகம் எப்படி இருக்கிறாள்? தலையில் என்ன?
ஹலோ. யோகமா? இல்லை. நான் தேவகி நர்ஸ்.
இது எப்போதிருந்து?
வரும் வழியில் ஒரு கதர்த்துணிக் கடையில் இதைப்பார்த்தாள். அதிலிருந்து...
எனக்குக் காது கூடக் கேட்கிறது. நான் பிறந்ததிலிருந்தே தேவகி தான்.



நல்லவேளை, மீனுவியாதி முற்றிவிடவில்லை.
சீக்கிரம் குணப்படுத்தி விடுங்கள். நான் போய்வருகிறேன்.
நீ போய்வா, அக்கா! நான் டாக்டரைக் குணப்படுத்திவிட்டு வந்துவிடுகிறேன்...
யோகம் பேசியது காதில் விழுந்தது. அது இரண்டு அர்த்தம் ஏற்படும்படி பேசகிறது. இதைப்பற்றி எனக்குச் சந்தேகந்தான்.
அவனைக் கண் காணித்து வரணும்.
ராஜா, நேற்று மத்தியானம் அவன் அறையில் இல்லை.
தெரியும். தோட்டத்தில் ஒரு மூலையில் படுத்துக் கொண்டிருந்தான்.... வக்கீல் வருகிறப் போலிருக்கிறது.
ஒரு நல்ல கத்தியாக எடுத்துக்கொண்டு வா! சீக்கிரம். ராஜா அறைக்குப் போகணும், சீக்கிரம்.
கத்தியா? எதற்காக?

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிவும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவாக கிளிஸரோ ஃபாஸ்பேட்கள் கலந்துள்ளது.

ஃபாஸ்ஃபோமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிவை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமயமாய் வாழ உதவுவது பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் ஃபாஸ்ஃபோமின்.



SQUIBB TTT A century of experience builds faith



கச்சமும் கோட்டுமாய் முகமெல்லாம் வியர்வை கொட்ட முதலியார் நடந்து சென்று கொண்டிருந்தார். கோட்டுக்கு மேலே மாலை போல அணிந்த மேல் வேட்டியின் இரு தலைப்புக்களையும் ஒரு கையில் அடக்கிக் கொண்டிருந்தார். இன்னொரு கையில் எல்லாம்! ஆபீஸ் பைல்கள்; அன்றைய தினசரி; காமாட்சி பிசைந்து கொடுத்த தயிர் சாதமும் மோர் மிளகாயும்; ராமநவமி உற்சவப் பத்திரிகை; செல்லப் பெட்டி ஆகியவை இருந்தன.

என்றுமில்லாமல் இன்று பை கனத்தது. ராமநவமி எல்லா வருடங்களையும் போல இந்த வருடமும் நன்றாக நடந்தாகணுமே. இன்னும் இருபது நாட்கள்கூட இல்லை. அடியிலிருந்து ஆரம்பித்தாகணும். கண்டிராக்டர் குப்புசாமி பந்தலைப் போட்டு விதானித்துக் கொடுத்து விடுவான். மின்சார விளக்குகளுக்குப் போனாராம் கம்பெனிக்காரன் 'போன்' செய்தால் ஆட்களை அனுப்புவான். தர்மலிங்க செட்டியார் பானகத்துக்கு வெல்லமும் சமாராதனைக்கு வேண்டிய பொருள்களையும், "என்றைக்கு அனுப்ப வேண்டும்?" என்ற ஒரே கேள்வியை மட்டும் கேட்டு விட்டுப் போய் விடுவார்.

ஆனால் இவையெல்லாம் போதாதே? நோட்டு நோட்டாக இரண்டாயிரமாவது வேண்டும். இருபத்தி நாலு வருஷங்களில் ஒரு தடவைகூடச் சோடை போனதில்லை. அவர் செய்து வரும் உற்சவம். எட்டு அணாவிலிருந்து ஐந்நூறு ரூபாய் வரையில் ரசீது எழுதிய கை அவருடைய கை.

காரியாலயத்தின் பெரிய கேட்டுக்கருகில் கண்டிராக்டர் சிவசங்கரன் தம்முடைய காரை நிறுத்தி விட்டு வெளியே நின்று கொண்டிருந்தார். முதலியாருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் காரியாலயத்துக்கு அடிக்கடி வரும் வழக்கம் இல்லை. 'டெண்டர்' திறந்தன்று அவருடைய ஏஜண்டுதான் வருவான். இப்போது எதற்காக நிற்கிறார்? ஒரு வேளை இரண்டு நாட்கள் முன்பு ஏஜெண்டிடம் ராமநவமி உற்சவப் பத்திரிகையைக் கொடுத்து விட்டதன் விளைவோ? அப்படி இருக்கவும் முடியாது. வழக்கமாக ஏஜண்டுதான் பணத்தைக் கொடுப்பது வழக்கம்.

முதலியார் ஆர்வம் அதிகரிக்க நடந்தார்.

காரைச் சமீபித்ததும், "நமஸ்காரம் முதலியார்.... சௌக்கியமா?" என்று சிவசங்கரன் தாமாகவே விசாரித்தார்.

"ஏதோ இருக்கிறேன்.... வெளியே நிற்கிறீங்களே....." என்றார் முதலியார்.

"உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்."

கண்ணுக்குத் தெரியாது

பி.வி.ஆர்.



"எனக்காகவா? மன்னிக்கணும். வெயில்லே காக்க வைச்சுட்டேன்...."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே.... ஸ்ரீராம நவமி உற்சவத்துக்கு என்னாலான....." என்று இழுத்தவர் மேலே முடிக்காமல் சட்டைப் பையிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்தார்.

சென்ற வருடம் நூறு ரூபாய் கொடுத்தவர் இந்த வருடம் இருநூறு கொடுக்கிறார். முதன்முதலாக வருவாரும் பணம்! ஆரம்பமே விளக்கேற்றி வைத்தாற்போல இருக்கிறது! எல்லாம் ராமனுடைய அருள்!

"ரசீது புத்தகம்இன்னிக்குத்தான்தரேன்னு பிரஸ்காரன் சொன்னான். தாற்காலிக ரசீது இங்கேயே ஒண்ணு எழுதித் தரட்டுமா?"

சிவசங்கரன் சிரித்தார்.

"எனக்கு ராமர்கிட்டே எத்தனை நம்பிக்கை இருக்கிறதோ அவ்வளவு உங்ககிட்டேயும் இருக்கு....ரசீதுப் புத்தகம் வந்த பிறகு போட்டு அனுப்புங்கள்.... இருபது வருஷங்களுக்கு முன்னே நான் மேஸ்திரி....எட்டணா கொடுத்தேன்.... இன்னிக்கு இருநூறு ரூபாய் கொடுக்கிறதுக்கு யார் காரணம்? அந்த ராமர்தான்.... அவரை ஞாபகப்படுத்தி வைக்கிற நீங்களும்தான்! நான் வரட்டுமா?"

முதலியாருக்குப் பேச நா எழவில்லே.

கார் சென்ற திசையையே ஒரு நிமிடம் பார்த்து விட்டு, காரியாலயத்தை நோக்கி வேகமாக நடந்தார்.

* * *

மத்தியானம் இரண்டு மணி.

மோர் மிளகாயின் காரம் இன்னும் நாவில் இனித்துக் கொண்டிருந்தது. மேஜை மீதிருந்த பல பில்களைப் பார்த்துவிட்டு, கடைசி பில்லே எடுத்தார். அந்த பில்...

சிவசங்கரனுடைய பில். முப்பதாயிரம் ரூபாய் பில். ஏழெட்டு நாட்களாகச் சில பில்கள் தங்கியிருக்க, இரண்டு நாட்களுக்கு முன்னும் வந்த இதற்கு என்ன அவசரம்?

இந்தப் பெரிய தொகைக்காகத்தான், அவசர முடையைக் காட்டிக்கொள்ளாமல் ஆபீஸ் வாசலில் நின்று ராம கைங்கரியத்தைச் செய்துவிட்டுச் சென்றாரா சிவசங்கரன்?

ஒரு நிமிடத்தில் எல்லா வித சந்தேகங்களும் தோன்றிவிட்டன.

குமாஸ்தா ராமானுஜத்தை அழைத்தார்.

"இன்னும் எத்தனை பில் பாக்கி யிருக்கு?"

"ஆறு சார்..."

"அதெல்லாம் இதற்கு முன்னாலே வந்தது தானே?"

"ஆமாம். எல்லாம் முப்பது ரூபாய் நாற்பது ரூபாய் பில் சார்...."

"அதையெல்லாம் பார்த்த பிறகுதான் இதைப் பார்ப்பேன்...."

"கமலா பார்த்துவிட்டாள்.... நான் ஒரு தடவை 'செக்' பண்ணிவிட்டால் உங்க மேஜைக்கு வந்துவிடும்..."

"சரி, வரட்டும்..."

நான்கு மணிக்கு எல்லா பில்களும் என்ஜினியர் அறையை அடைந்து, முப்பதாயிரம் ரூபாய் பில்லைத் தவிர மற்றெல்லாம் முதலியாரிடம் திரும்பி வந்து சேர்ந்தன. காஷியர் அவற்றை யெல்லாம் வாங்கிக் கொண்டு 'செக்' எழுதச் சென்றார்.

மணி நாலு இருக்கும்;

"என்ஜினியர் கூப்பிடுறார், சார்!" ப்யூனின் அலட்டலைக் குரலைக் கேட்ட முதலியார் நாற்காலிக்குப்போட்டிருந்த கோட்டை எடுத்து அணிந்து கொண்டார். என்ஜினியர் அருள்நாயகம் சமீபத்தில் அமெரிக்காவில் விசேடப் பயிற்சியை முடித்துவிட்டுப் பதவி ஏற்றவர்; அமெரிக்கக்காரரின் கண்டிப்பு உடலெல்லாம் வியாபித்திருந்தது; அனுமதியில்லாமல் யாரும் அவரை நெருங்கவும் முடியாது; தமக்கு என்று சில விதிகளை ஏற்படுத்திக் கொண்டு அவ்விதிகளை மற்றவர்களும் அனுசரிக்கிறார்களா என்று கழுகுப் பார்வை பார்க்கிறவர்.

இப்பேர்ப்பட்டவர் யாரையும் அழைப்பது கிடையாது. இப்போது முதலியாரை அழைத்திருக்கிறார். எதற்கு? ஒரு கணம் உள்ளத்தில் ஒரு பயம் பிறந்தாலும் அடுத்த கணமே அதை மறந்து மாடிப்படியை நோக்கி நடந்தார்.

"இவரிடமும் ஏதாவது கேட்டு வாங்க வேண்டும் உற்சவத்துக்கு" என்ற எண்ணம் இரண்டாம் படியில் கால் வைத்தபோது உண்டாயிற்று; எத்தனையோ இறந்தவர்களும் முன்ஸிப்களும் ராமநவமிக்கு, முதலியார் வாய் திறந்து கேட்டால் இல்லை என்று கூறாமல் கொடுத்திருக்கிறார்கள். ஏன், பல ஆங்கிலேயர்கள்கூடக் கொடுத்திருக்கிறார்கள் அந்தக் காலத்தில்.

"குட்மார்னிங் சார்..."

நம் கீழ் வேலை பார்க்கிறவர்களைக் கண்டால், முகத்தில் கொஞ்ச நஞ்சமிருக்கும் புன்னகையையும் உள்ளுக்கிழுத்து விட்டு, கடுகடுப்பாக முகத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு விதியை அருள்நாயகம் கடைப்பிடித்திருந்தார். இப்போது அந்த முகம் முதலியாரை, அறைவது போலப் பார்த்தது.

"இந்தப் பில்லுக்காகத்தான், காலையிலே அவன் பணம் கொடுத்தானா?" சிவசங்கரனுடைய பில்லை முதலியாருக்கு முன்னால் எறிந்தார் அருள்நாயகம்.

ஒரு பக்கம் சிரிப்பும் இன்னொரு பக்கம் வேதனையும் எழ, முதலியார் பாக்கெட்டிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களையும் எடுத்தார்.

"இதைச் சொல்கிறீர்களா?"

"இருநூறு வாங்கினீர்?"

"ஆமாம்... இது..."

"நிறுத்தும்... உமக்கு ரிடையர் ஆக இன்னும் எத்தனை நாட்கள் இருக்கு?"

"எட்டு மாசம்! இந்தப் பணம்..."

"வரப்போகிற பென்ஷனுக்குக் கூட வழியில்லாமல் செய்துக்கிட்டீங்க..."

இப்போது முதலியாருக்குக் கோபமே வந்துவிட்டது.

"நான் சொல்லி முடிப்பதற்குள் ஏதோ தப்புக் கணக்குப் போட்டுவிட்டு, அதிலேயிருந்து நகரமாட்டேன் என்கிறீர்களே..."

"நான்சென்ஸ்..."

"சார், நீங்க இங்கேயிருந்து பார்த்தால் கேட் தெரிகிறது....சிவசங்கரன் ரூபாயை நீட்டிக் கொடுத்தபோது, நான் அதைக் கை நீட்டி வாங்கினதெல்லாம் இங்கேயிருந்து

பார்த்தாலே தெரியும்... ஆனா அப்போ நாங்க என்னென்ன பேசினோம் தெரியுமா? தெரியாது. அந்தக் காட்சியும் இந்த பில்லும் உங்க கண்ணை மறைக்கின்றன..."

"என்னய்யா அளக்கிறீர்?"

"வருஷா வருஷம் நான் பல பேர்கிட்டேயிருந்து பணம் வசூல் பண்ணி ராமநவமி உற்சவம் செய்யறது வழக்கம். கேட்காமலே எத்தனையோ பேர் கொடுப்பார்கள்..."

"இந்த மாதிரி ரொம்பப் பேர் 'பப்ளிக் பேங்க்ஷன்'னு சொல்லி டொனேஷன் வாங்குவாங்க... ஏதோ கொஞ்சத்தைச் செலவு செய்து விட்டுப் பாக்கியை..."

"இதோ பாருங்க... நீங்க இப்போ தப்பு எடை போடறீங்க!"

இடைமறித்து அருள் நாயகம் சீறினார்.

"இன்றையிலிருந்து உம்மை 'சஸ்பெண்டு' செய்திருக்கிறேன்... விசாரணை முடியும்வரை ஆபீஸுக்கு வரவேண்டாம்.... ஆர்டர் இன்னும் ஐந்து நிமிஷத்தில் வரும்..."

ஒரு கணம் முதலியாருக்குத் தலை சுற்றியது. ஆனால் அடுத்த கணமே சமாளித்துக் கொண்டு நகர்ந்தார்.

"அந்த இருநூறு ரூபாயை என் மேஜை மேல் வைத்துவிட்டுப் போங்கள்."

முதலியார் இரண்டு நோட்டுக்களையும் ஒரு தடவை பார்த்தார். அசோக சக்கரமும் ஸ்தூபியும் தெரியவில்லை. அடிக்கடி பார்த்துப் பழகின புன்னகையும் கோதண்டரும் தான் தெரிந்தன.

"இது ராமருடைய பணம்."

அழுத்தமாகச் சொல்லிவிட்டு, பணத்தை மடித்துக் கோட்டுப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு நடந்தார்.

மடியில் கனமிருந்தால் தான் மனதில் பயம் இருக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தோடு முதலியார் வீட்டுக்குச் சென்றார். நடந்ததைச் சொன்னால் காமாட்சி மனமுடைந்து போய் அன்ன ஆகாரமில்லாமல் அழுவாள் என்று அவர் மறுநாளிலிருந்து 'லீவு' என்று சொல்லிவிட்டார். எப்படியும் அடுத்த வாரத்திலிருந்து உற்சவத்துக்காக 'லீவு' எடுக்க வேண்டியவர்தானே?

சொன்னபடி பிரஸ்காரன் ரசீதுப் புத்தகத்தைப் பையன் மூலம் கொடுத்தனுப்பியிருந்தான். பலகாரம் சாப்பிட்டுவிட்டு, ஒரு ரசீதுப் புத்தகத்தை எடுத்து முதல் ரசீதை எழுதினார்.

மணி ஏழு.

சிவசங்கரனுடைய காரைக் கண்டதும் முதலியார் எழுந்தார்.

"என்ன முதலியார், என்னாலே பெரிய விபரீதம் உண்டாயிடுச்சே!"

"அது கிடக்கட்டும்... உட்காருங்க... இப்போதான் ரசீது எழுதினேன்... நீங்களும் வந்துட்டீங்க..."

"என் ஜீவியரைப் பார்த்துச் சொன்னேன். இல்லீங்க... கெஞ்சினேன்... அசைய மாட்டேன் என்கிறார்... கண்டிராக்டர்னுலே லஞ்சம் கொடுக்கிறவன்னு தான் அர்த்தமாம். இப்போ என்ன செய்யறதுங்க?"

"நீங்க பணம் கொடுத்து நான் வாங்கினதை அவர் பார்த்திருக்கிறார். அவருடைய சாட்சி ஒன்றே போதும் என்னை வேலையிலிருந்து நீக்க... இப்போ என் கண்டத்தையும் பத்தி நெனைச்சிட்டிருந்தா, நவமி போய்த் தசமி வந்துடும்.... அதனாலே நான் அதைப் பத்திக் கவலைப்படவில்லை இப்போ..."

"நீங்க பேசாமல் இருந்தா அதுவே, அவருக்கு ஆதாரமாய்ப் போயிடுமே..."

"பின்னேயென்... எல்லாத்துக்கும் ஆதாரம் ஒண்ணு இருக்கு என்கிறதை மறந்துடாதீங்க... அந்த ஆதார பலத்திலே இருக்கிற நம் பிழைப்பு என்றைக்கும் வீண் போகாது... ஏதாவது குடிக்கக் கொண்டு வருகிறேன்..."

துக்கம் விசாரிக்கக் குமாஸ்தா முதல் காஷியர் வரை ஒவ்வொருவராய் வந்தார்கள். வெறும் உதட்டு வார்த்தைகள் எதற்கும் பயன்படாது என்று முதலியார் சமாதானப்படுத்தி, அவர்களிடமே உற்சவத்துக்கு வசூலும் செய்து கொண்டார்.

மறுநாளிலிருந்து முதலியாருக்கு வேலை சரி





-சுரதா-

அலைவளர் கடலே ஆழம்;
அலைகளே அதன்கைத் தாளம்;
பலர்புகழ் நிலவைக் கண்டால்
பனிகடல் மேலே தாவும்;
வலையொடு வந்தார் தம்மை
வரவேற்கும் சிப்பி முத்தைச்
சிலரிடம் கொடுத்து வைக்கும்
திரையினால் தரையை நக்கும்!
தண்கடல் அலையின் உச்சித்
தலை ஒளவைத்தலையோ? ஆம்ஆம்
பண்கடல் என்பேன்; இன்றேல்
பாடுமோ? இதற்கு வண்ணம்
விண்வெளித் தொடர்பால் வாது
விளைந்ததோ? இல்லை இல்லை;
பெண்களின் கண்கள் இட்ட
பிச்சையே கடலின் நீலம்!

யாக இருந்தது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளின் ரசீதுப் புத்தகங்களை வைத்துக் கொண்டு ஒரு பட்டியல் தயார் செய்தார்; புதுப் பெயர்களையும் நினைவுக்கு வந்தபோதெல்லாம் சேர்த்துக் கொண்டார்.

ஆரம்பித்த வசூல் எட்டு நாட்களுக்கு நிற்கவில்லை. பணமாக அவர் இரண்டாயிரம் எதிர்பார்த்தார். விலைவாசி ஏற்றம் தெரிந்தோ என்னவோ பலர் வழக்கத்தைக் காட்டிலும் அதிகம் கொடுத்தார்கள்.

ராமநவமி உற்சவக் கணக்கில் மூவாயிரத்துக்கு இருபத்தைந்து ரூபாய் கம்மி.

திடீரென்று முதலியாருக்கு ஒரு விபரீத ஆசை பிறந்தது. மேலதிகாரி என்ற ஹோதாவில் என்ஜினியர் அருள்நாயகத்துக்கு அவரைத் தண்டிக்க உரிமை உண்டு. அவரிடம் ஒழுங்காக வேலை செய்ய வேண்டியதும் அவசியம். ஆனால் அருள்நாயகத்தை ஒரு மனிதர் என்ற முறையில் அணுகி, ஓர் இருபத்தைந்து ரூபாய் வசூல் செய்தால் என்ன?

ஆசை பிறந்ததும் அவர் அதற்கு மேலே யோசிக்கவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை எட்டு மணி.

"நமஸ்காரம் சார்...!"

அருள்நாயகத்துக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லை. மன்னிப்புக் கேட்க வருகிறாரா? திடீரென்று கண்டிப்புப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டார்.

"எதுவானாலும் நாளைக்கு ஆபிஸில் பாருங்கள்..."

"நான் என் வேலை விஷயமாக வரவில்லை!"

"......?" கண்களே கேள்வியைக் கேட்டன.

முதலியார் சலனமற்ற மனத்தோடு உற்சவப் பத்திரிகையை நீட்டினார். தயாராக ரசீதுப் புத்தகத்தையும் எடுத்து வைத்துக் கொண்டார்.

"இதெல்லாம் என்ன சார் 'ஸ்டண்டு'..? பணம் சம்பாதிக்க ஒரு வழி!"

"இருபத்தி நாலு வருஷங்களாக நடத்துகிறேன்... இன்னும் முப்பது ரூபாய் வீட்டில் இருந்துகொண்டு. அழுக்குக் கோட்டுடன் தான் நான் வந்து கொண்டிருக்கிறேன்..."

"சிலபேர் வேஷம்கூடப் போடுவார்கள்!"

"நீங்கள் 'என்னை'யும் 'உங்களை'யும் ஒரு நிமிஷம் மறந்து பார்க்கணும்... ரொம்ப நாளைக்கு ஒருவன் வேஷம் போட்டுப் பிழைக்க முடியாது...."

அருள்நாயகம் ஒரு கணம் யோசித்தார். என்ன தோன்றிற்றோ தெரியவில்லை! சரசரவென்று உள்ளே போய்ப் பர்ஸைக் கொண்டு வந்தார். முதலியாரின் தைரியத்தையும் நம்பிக்கையையும் அவரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

என்ஜினியர் பத்து ஐந்து ரூபாய் நோட்டுக்களை எண்ணுவதற்குள் ரசீதை முதலியார் நீட்டவே, "அதை மாத்தி எழுதுங்கள்" என்றார்.

"இல்லை இருபத்தைந்துதான் எதிர்பார்த்தேன்.... அது போதும்..."

"வசூல் எப்படி?"

"பணமாக மூவாயிரம்... பந்தல், மின்சார விளக்குகள், அன்னதான இதெல்லாம் பலர் தானமாக அளிக்கிறார்கள்..."

"இதெல்லாம் செய்வதால் என்ன திருப்தி கிடைக்கிறது?"

முதலியாருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"நான் வருகிறேன்."

"இதற்கும் என்னுடைய ஆர்டருக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை..." என்று சொல்லிவிட்டு அருள்நாயகம் பர்ஸும் கையுமாக உள்ளே திரும்பினார்.

பின்கட்டிலிருந்து வேகமாக அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான் அவருடைய மகன் டேவிட் மதுரம்.

ஹாலில் அவரைச் சந்தித்த அவன், முகமெல்லாம் சிவக்க, உதடுகள் துடிக்க, "இன்னிக்கு எத்தனை ரூபாயைக் குதிரை வாலில் கட்டக் கொடுத்தனுப்பி இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"அது ரேஸுக்கு அல்ல மதுரம்..."

"ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தான் சொல்லி வைச்சாப்போல எட்டு மணிக்கு யாராவது வந்துடறாங்க, அது ஜயிக்கும், இது ஜயிக்கும்னு....போன வாரம் நூறு ரூபாய் தொலைந்தது... அதுக்கு முன்னாலே ஒரு எழுபது... இந்த வாரம் எவ்வளவு நூறு- நூற்றைம்பதா?"

அருள்நாயகம் பதில் பேசவில்லை. ரசீதைக் காட்டினாலும் மதுரம் நம்ப மாட்டான். பின்கட்டில் இருந்த அவன் தான் பார்த்ததை மையமாகக் கொண்டு பேசுகிறான். உண்மை கண்ணுக்கு என்றுமே தெரியாது. அதை மனசால்தான் உணர முடியுமோ?

அருள்நாயகம் அவசரமாய், சர்க்கார் வீட்டினுள்ளே அமைத்துக் கொடுத்த அலுவலக அறையை நோக்கி நடந்தார். முதலியார் பின்தொடருவது போன்ற பிரமை மட்டும் எழுந்து அகலாமல் நின்றது.

சர்ச்சில் சர்ச்சில்தான்!

1899ம் ஆண்டு. வின்ஸ்டன் சர்ச்சில் அப்போது ஒரு பத்திரிகை நிருபர். போயர் யுத்த விசேஷ நிருபராகப் போய் அவர் அனுப்பி வைத்த செய்திகள் அவருக்குப் புகழைத் தேடிக் கொடுத்தன. அந்த நேரத்தில் அவர் நிருபராகப் பணியாற்றுவதைப் பாராட்டி வந்த கடிதங்களுடன், அவருடைய நாவல் எழுதும் திறமையைப் பாராட்டியும் பல கடிதங்கள் வரத் தொடங்கின. அந்த வேளையில் இங்கிலாந்திலுள்ள 'மாக்மில்லன்ஸ் மாகஸைன்' என்னும் சஞ்சிகையில் 'சாவ்ரோலா' என்ற அவருடைய கற்பனை நவீனம் தொடராக வெளிவந்து கொண்டிருந்தது. அதற்கான பாராட்டுதல்கள்தான் அவை என்று சர்ச்சில் ஆரம்பத்தில் நினைத்திருந்தார். அப்புறம்தான் அவருக்குத் திடீரென்று தெரிய வந்தது. அவருடைய பெயரை அப்படியே தாங்கிய மற்றொரு நாவலாசிரியர் அமெரிக்காவில் இருக்கிறார் என்பதுதான் அந்த உண்மை. பின்னவருடைய நவீனங்கள் ஏற்கனவே வெளியாகி விருக்கின்றன.



அமெரிக்க வின்ஸ்டன் சர்ச்சிலின் அடுத்த புத்தகமான 'ரிச்சர்ட் கார்வெல்' என்ற நவீனம் உடனடியாக வெளியாகவிருக்கிறது என்று தெரிந்ததும் இங்கிலாந்து வின்ஸ்டன் சர்ச்சில் தம்முடைய இயற்கையான பரந்த மனப்பான்மையின் அடிப்படையில் அமெரிக்க ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இனி மேல் தான் எழுதும் விஷயங்களை வின்ஸ்டன் எஸ். சர்ச்சில் என்று ஒரு 'எஸ்'ஸை நடுவில் புகுத்தி அந்தப் பெயரில் எழுதுவதாகவும், அது பெயர்க் குழப்பத்தைத் தவிர்க்க உதவும் என்றும் குறிப்பிட்டிருந்தார். (சர்ச்சிலின் முழுப் பெயர் வின்ஸ்டன் லியோனார்ட் ஸ்பென்ஸர் சர்ச்சில் என்பதாகும்.)

அமெரிக்க சர்ச்சில் இத்தகைய தாராள மனோபாவத்தைக் கண்டு வியந்தார். அமெரிக்கா வரும்போது அவரைச் சந்திக்கவும் விரும்பினார்.

ஓர் ஆண்டு காலத்துக்குப் பிறகு இங்கிலாந்து சர்ச்சில் அமெரிக்காவுக்குப் போனபோது அந்த அமெரிக்க எழுத்தாளர் சர்ச்சிலை வரவேற்று உபசரித்து ஹோட்டல் ஒன்றில் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். விருந்தும் நடந்தது.

ஹோட்டல்காரரைப் பொறுத்தவரை அவர் இந்தப் பெயர்க் குழப்பத்திலிருந்து விடுபடவில்லை. விருந்துக்கான 'பில்லை' இங்கிலாந்து சர்ச்சிலுக்கே அனுப்பி வைத்தார்.

அமெரிக்க சர்ச்சில் அதன் பிறகு 'க்ரைஸிஸ்' 'கிராஸிங்' போன்ற பல நவீனங்களை எழுதிப் பிரசித்தி பெற்றார். இங்கிலாந்து சர்ச்சில் அரசியல் துறையில் நுழைந்து நவீனங்கள் எழுதுவதை அறவே கைவிட்டார்!

அமெரிக்க அன்பர் 1947ல் காலமாகும் வரை தம்முடைய பிரிட்டிஷ் பெயருள்ளவர் செய்த உதவியை மறக்கவே இல்லை.

[ஆதாரம்: பேஜெண்ட்]

* * *

பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தினர்கள் ஒருவரோடு ஒருவர் கருத்து வேற்றுமை கொண்டு காரசாரமான சர்ச்சைகளில் ஈடுபட்டாலும் ஒருவரை மற்றொருவர் கண்ணியக் குறைவான முறையிலோ தனிப்பட்ட விதத்திலோ தாக்கிப் பேச மாட்டார்கள். தனி ஒருவரது நேர்மையையோ ஒழுக்கத்தையோ சந்தேகிக்கிற மாதிரியாகப் பேசிவிட்டால் உடனே ஆட்சேபணைக் கூக்குரல்கள் நாலாபுறமிருந்தும் எழும்பும். சபாநாயகரும் அந்தப் பேச்சாளரை வன்மையாகக் கண்டிப்பார்.

வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு எதையும் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும். வழவழா குழகுழா வியாபாரமே அவருக்குப் பிடிக்காது. ஒரு சமயம் அவர் எதிர்க்கட்சி அங்கத்தினர்களின் பேச்சுக்களில் (Terminological inexactitudes) நிறைந்திருப்பதாகக் கூறினார். இதனை மறுத்து யாரும் அப்போது வாய் திறக்கவில்லை. காரணம் அந்த வார்த்தைகளின் பொருள் யாருக்கும் சட்டென்று விளங்காததுதான். சர்ச்சில் தங்களைப் பாராட்டுவதாகக் கூடச் சிலர் எண்ணிக் கொண்டார்கள்! சட்ட சபைக் கூட்டம் முடிந்து அகராதியைப் புரட்டிப் பார்த்த பின்னர்தான் சர்ச்சில் தங்களைப் பொய்யர்கள் என்று பழித்துக் கூறியிருப்பதைப் புரிந்து கொண்டார்கள்! Lies என்ற எளிய சொல்லை அவர் உபயோகித்திருந்தால் அன்று பாராளுமன்றமே கோபக் கூக்குரலினால் இடிஇடித்துப் போயிருக்குமே!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon